Annual Subscription Rs. 6 | 30th May 1937. | Price 2 As.

# சுதேசமித்திரன்

Vol. 8 | வாரப்பதிப்பு | No 17

## THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



திருக்கோஷ்டியூர் கோவிலும், திருப்பாற்கடல் புஷ்கரணியும்.

எல்லாவற்றிற்கும்
பின்னால் தோன்றியது

பாடால்
சகல
வலி
நிவாரணி
பாம்

எல்லாவற்றிற்கும்
முன்னால் நிற்பது








மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு

## வுட்வர்ட்ஸ்
## கிரைப் வாடர்

எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

# WOODWARD'S
## GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND



திருக்கோஷ்டியூர் ஸ்ரீ ஸௌம்ய நாராயணப் பெருமாள் கோவில் கோபுரம்.



ஜாவாவில் நாடகத்தில் கலந்துகொள்பவர்கள்.

# கிழக்கிந்தியத் தீவுகள்

"எஸ். ஆர்."

ஜாவா, போர்னியோ, சுமத்ரா முதலிய அநேக தீவுகள் அடங்கிய ஒரு கூட்டத்திற்கு கிழக்கு இந்திய தீவுகள் என்று பெயர். ஒவ்வொரு தீவின் விஸ்தீர்ணத்தையும் ஜனத்தொகையையும் கீழே காணலாம். இத்தீவுகளில் போர்னியோவின் ஒரு பாகம்தான் ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. மற்றப் பாகங்களெல்லாம் டச்சுக்காரருக்குச் சொந்தமானவை. டச்சுக்காரருடைய இராஜப் பிரதிநிதி ஜாவாவிலுள்ள பட்டேவியாஎன்னும் பட்டணத்தில் வசிக்கிறார்.

சமத்ரா, போர்னியோ, செலிபெஸ் என்னும் அத் தீவுகளை ஊடுருவிக் கொண்டு மத்ய ரேகை ஓடுகிறது. மற்ற தீவுகளும் இந்த ரேகைக்கு அருகில் இருப்பதால் இங்கு மிகவும் அதிக வெய்யிலும், மழையும் உண்டு. ஆதலால் எல்லாத் தீவுகளும் மிகவும் செழித்தும், காடுகளடர்ந்தும் இருக்கின்றன.

1475-ம் வருஷம் வரையிலும் ஜாவாவில் ஹிந்து மதமே வழங்கி வந்தது. அதன் பிறகு அராபிய முகமதியர்கள் படையெடுத்து இத்தீவைக் கைப்பற்றினர். ஹிந்துக்களில் அநேகர் அருகிலுள்ள சுமத்ரா, பாலி முதலிய தீவுகளுக்கு ஓடிவிட்டனர். அநேகர் முகமதிய மதத்தைத் தழுவ ஆரம்பித்தனர். இப்போது ஜாவாவில் ஹிந்துக்களைவிட முகமதியர்கள்தான் அதிகமாய் இருக்கின்றனர். ஜாவாவின் நடுவிலுள்ள போரோ புதூர் என்னும் ஒரு குன்றின் உச்சியில் பிரம்மாண்டமான ஒரு ஹிந்து கோவில் பாழடைந்து கிடக்கிறது. அங்கு மதில்களில் காணப்படும் சித்திர வேலை மிகவும் அற்புதமாயும் விசித்திரமாயும் இருக்கிறது.

ஜாவா தேசத்தவர்கள் மலாய் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அரைநிஜார் அணிந்து அதன்மேல் லுங்கி அணிவார்கள். ஒவ்வொருவரும் புகையிலை நிறைந்த ஒரு பையை இடுப்பில் கட்டித் தொங்கவிட்டுக்கொள்வார்கள். ஸ்திரீகளில் சிலர் புடவையையும் சிலர் பாவாடையையும் உடுக்கின்றனர். ஆறு முழ நீளமுள்ள ஒரு நீண்ட துணியை தோளில் முடியிட்டு இடுப்பு வரையில் தொங்கவிடுகின்றனர். குழந்தைகளை அதில் தூக்கிச் செல்வது வழக்கம். மருதாணி இட்டுக்கொண்டால் திருஷ்டிபடாதென்று கைகளிலும் கால்களிலும் ஏராளமாக ஸ்திரீகள் மருதாணி இட்டுக்கொள்கின்றனர்.

ஜாவா தேசத்து நடனம் மிக்க அபூர்வமானது. அவர்கள் அக்கலையில் மிகவும் தேர்ச்சி பெற்று இருப்பதாக எல்லோரும் புகழுகின்றனர். அங்கு டோபெங் டலாங் என்று ஒருவித நடனமுண்டு. ஒருவர் இராமாயணத்திலிருந்தாவது, 'மகாபாரதத்திலிருந்தாவது ஒரு பாகத்தைப் படித்துக்கொண்டே போவார். அதன் கருத்துப்படி அபிநயத்துடன் நடனம் நடைபெறும். சிலர் ராக்ஷசர் வேஷத்திற்காக முகத்தில் மிகவும் பயங்கரமான முக மூடிகள் தரித்துக்கொள்வார்கள்.

அவர்களுக்குச் சேவல்களை சண்டையிடச் செய்து வேடிக்கைப் பார்ப்பதென்றால் மிகவும் ஆனந்தம். இரு பைல்வான்களின் குஸ்திப் பந்தயத்தைக் கவனிக்க நூற்றுக்கணக்காக ஜனங்கள் கூடுவதுபோல், சேவல் பந்தயத்தைக் காண ஜனங்கள் கூடுவது வழக்கம். சில சமயங்களில் சேவல்களின் அலகுகளில் மிகவும் கூர்மையான ஒரு ஆயுதத்தையும் கட்டிவிடுவது வழக்கம்.

போர்னியோ என்பது உலகத்தில் மிகவும் பெரிதாகக் கருதப்படும் தீவுகளில் மூன்றாவது. அதன் விஸ்தீர்ணம் சுமார் 290,000 சதுர மைல். இதன் குறுக்கே மத்திய ரேகை செல்கிறது. இதில் அநேக மலைத் தொடர்கள் இருக்கின்றன. இம்மலைகள் முன் காலத்தில் எரிமலைகளாக இருந்திருக்க வேண்டுமென்றும் அதனால்தான் இத்தீவு மற்றத் தீவுகளைப்போல் அவ்வளவு செழிப்பற்று இருக்கிறதென்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

இத்தீவு ஓராங் ஓடாங், கிப்பன் என்ற இருவகை மனிதக் குரங்குகளுக்குப் பேர்போனது. இதைத் தவிர அநேக பயங்கரமான காட்டு மிருகங்களும் காடுகளில் காணப்படுகின்றன. ஒவ்வொரு நதியிலும், முதலைகளும் பாம்புகளும் ஏராளமாய் இருக்கின்றன. காட்டு மிருகங்களையும், காட்டுக் காக்ஷிகளையும் படமெடுக்க விரும்பும் பல மேல் நாட்டு சினிமாக்காரர்கள், ஆப்பிரிக்காவிற்குப் போவதுபோல், ஜாவாவிற்கும் போர்னியோவிற்கும் செல்கின்றனர்.

போர்னியோவில் முற்றிலும் நாகரிகமடையாத காட்டு மனிதர்கள் அநேகர் இருக்கின்றனர். அவர்களை ஆறுவிதமாகப் பிரிக்கலாம் அவை (1) கடல் டயாக்கியர், (2) காயன், (3) கென்யா, (4) கெலமான்டன் (5) முருத் (6) புனான்.

கடல் டயாக்கியர், மிகவும் கருநிறமுடையவர்கள். அவர்கள் உதட்டையும் பற்களையும் ஒருவித சாயத்தினால் கருநிறமாக்கிக் கொள்கின்றனர். அவர்கள் தமது தலைவனுக்கு அடங்கி நடப்பதே இல்லை. ஆகையால் அடிக்கடி சண்டையும் சச்சரவும் நடந்து கொண்டே இருக்கும்.

டயாக்கிய புருஷர்கள், தமது தோளிலும் மார்பிலும், நக்ஷத்திரங்களைப் போன்றும் மற்றும் அநேகவித கோலங்களைப் போன்றும் பச்சைக் குத்திக்கொள்ளுகிறார்கள். அவர்களின் உடை கௌபீனம்தான். காதில் கடுக்கன்கள் போட்டுக் கொள்ளுமிடத்தில் பெரிய வளையங்களையும் மேல் காதில் சிறு கிளிஞ்சல், சங்கு முதலியவைகளையும் போட்டுக்கொள்ளுகிறார்கள். அவர்களின் ஸ்திரீகள் தமது பாவாடையிலும் ஜாக்கட்களிலும் இக் கிளிஞ்சல்களை வைத்துத் தைத்துக்கொள்கின்றனர். சிலர் இவ்வுடையின் மேல் பிரம்பினாலான வளையங்களை ஒன்றன்மேல் ஒன்றாக துடையிலிருந்து மார்புவரையில் போட்டுக்கொள்கின்றனர். இப்பிரம்பு வளையங்களைத் தூங்கும்போதுகூட கழட்டுவது இல்லை.

காயன் கென்யா என்ற மரபினர், போர்னியோவின் மத்தியிலுள்ள காடுகளிலும், மலை அடிவாரங்களிலும் வசிக்கின்ற

| | விஸ்தீரணம். சதுர மைல்கள் | ஜனத்தொகை |
|---|---|---|
| * போர்னியோ (ஆங்கிலேயருடையது) | 31,106 | 270, 233 |
| டச்சுக்காரருடைய தீவுகள் | | |
| போர்னியோ | 206, 061 | 2, 194, 533 |
| ஜாவாவும் மதுராவும் | 51, 057 | 41, 718, 335 |
| சுமத்ரா | 163, 093 | 7, 661, 899 |
| செலிபெஸ் | 73, 160 | 4, 226, 586 |
| மொலுக்கா | 192, 402 | 893, 030 |
| தைமோர் | 24, 530 | 1, 656, 636 |
| பலியும் லாம்பக்கும் | 4, 070 | 1, 802, 146 |
| மொத்தம் டச்சுக்காரருடைய பாகங்கள் | 7, 14, 373 | 60, 153, 165 |

* இதில் ஆங்கிலேயருக்கு உட்பட்ட ஸாரவாக், ப்ரூனே என்னும் இரு சுதேச அரசாங்கங்களும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

னர். இவர்கள் மிகுந்த தைரியமும் குரூபமும் உடையவர்கள். இவர்களுக்குச் சண்டையில் தமது எதிரியின் தலையை வெட்டி எடுத்துக்கொண்டு வருவதில் மிகுந்த களிப்பும் பெருமையுமுண்டு. இம்மாதிரி தன் கையினாலேயே ஒரு எதிரியைக் கொல்பவன், திரும்பி வந்த பிறகு, தனது மேல்காதில் ஒரு புலியின் பல்லை அணிந்துகொள்வான். தனது கேடயத்தில் எதிரியின் முகத்தைப்போல் ஒரு சித்திரம் வரைந்து அதன் தலையில் கொல்லப்பட்டவனுடைய தலைமயிர்களை ஒட்ட வைப்பான். போரில் ஜயமடைந்து தலையுடன் திரும்பி வந்த அன்று இரவு பெரிய விருந்தும் களியாட்டமும் நடக்கும். அவர்களின் ஸ்திரீகள் ரத்த மொழுகும் தலையை வைத்துக்கொண்டு நடனமாடுவார்கள்.

அதன் பிறகு அத்தலையை ஒரு கயிற்றில் கோத்து சுவரில் ஒரு ஆணியில் மாட்டிவிடுவார்கள். இவர்களின் தலைவன் ஒருவனின் குடிசைக்குள் நுழைந்தால், எங்கு கண்டாலும் இம்மாதிரி தொங்கவிட்டிருக்கும் தலை மயமாகவே காணப்படும்.

இவர்களின் ஆயுதங்கள் வாள், ஈட்டி, ஒரு மூங்கில் குழாய். இம்மூங்கில் குழாய் 7 அடி நீளமிருக்கும். அடியில் 1 அங்குல அகலமும் நுனியில் $\frac{3}{4}$ அங்குல அகலமுமிருக்கும். இதன் ஓட்டை $\frac{1}{3}$ அங்குலந்தான். அடியிலிருந்து நுனி வரையில் இத்துவாரம் சிறிதும் வித்தியாசமின்றி ஒரே அகலமாயிருக்கும். விஷம் தடவின அம்புகளை அதில் வைத்து வாயினால் ஊதுவார்கள். 70 கஜம் வரையில் ஒரு துப்பாக்கியைப்போல் வைத்த குறிதவ



பாலி தேசத்தவர்கள்.



கோழிகள் விளையாட்டு.


மூலவியாதி அடியோடு நீங்கும்

"ஹடன்ஸா"




இரத்தம் வடிதலை நிறுத்தி மூலவியாதி எந்த நிலைமையிலிருந்தாலும் குணப்படுத்துகிறது. உலகப்பிரசித்திபெற்ற வைத்தியர்களால் சிபாரசு செய்யப்பட்டது. எல்லா ஆஸ்பத்திரிகளிலும் உபயோகிப்பது. மூலம் பௌத்திரம் வியாதிகளுக்கு பத்திரமும் சீக்கிரமுமான நிவாரணி. ஆபரேஷன் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

ஸ்டாகிஸ்ட்டுகள் :

தாதா & கம்பெனி, 52, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.



தியாகராஜா தங்க நகைகள்

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்குக் கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது!

நாகரீகத்திற்கேற்ற நானாவிதக் கலர் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய்க் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,

77, சைனா பஜார் ரோட், மதராஸ்.

இந்தியா கவர்ன்மெண்டில் ராஜபிருதுகளுடன் வைத்திய ரத்ன என்னும் அபூர்வ பட்டமும் மெடிகல் ஸன்னதும் பெற்ற

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரியாருடைய

ஸித்த மகரத்வஜம் (பலவிருத்தி டானிக்)



[புரொபஸர் ராமமூர்த்தியால் சர்டிபிகேட் செய்யப்பட்டது.]

இதில் தங்கம் முதலிய உயர்ந்த வஸ்துக்கள் சேர்ந்து இருப்பதால் முக்கியமாய் அங்கங்களையும், நரம்புகளையும் பலப்படுத்தி காமோத்தீபனத்தை விருத்தி செய்வதில் நிகரற்றது. அநேக காரணங்களால்பலத்தைக்கெடுத்துக் கொண்டவர்களுக்கு அத்தியாவசியமானது.

30 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூ. 7. பரீக்ஷிப்பதற்கு 5 மாத்திரைகள் ரூ. 1-4-0 வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி (ரிஜிஸ்டர்ட்)

அழகு, குணம், ருசி, வாசனை, இவைகளை அளிப்பதில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் மேலானது. சென்னை ஹைகோர்ட்டில் உரிமை பெற்றது. டப்பி 1-க்கு 0-2-9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூ. 1-14-0. ஆனந்த பற்பசை ட்யூப் 1-க்கு அணா 8. வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

இந்தியன் ஹெர்குலீஸ் புரொபெஸர் ராமமூர்த்தி, பிரதியக்ஷ பீமஸேனன் அவர்கள் எழுதுகிறார்:—

"பிரம்மஸ்ரீ வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரியார் அவர்கள் ஸம்ஸ்கிருத வித்தையில் அபாரமான சக்தியை அடைந்து பிரகாசிப்பதுடன் நமது ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தையும் நன்றாய்ப்படித்து சாஸ்திரத்தில் சொல்லிய பிரகாரம் சரீரத்திற்கு பலத்தை உண்டு பண்ணக்கூடிய ஒஷதிகளைச் சேகரித்து அவைகளைக் கொண்டு பூலோகத்தில் அனாதரவாய்த் தத்தளித்துக்கொண்டிருக்கும் மனிதர்களுடைய பலஹீனத்தை நிவர்த்தி செய்து ஜனங்களுக்கு சரீர புஷ்டியை உண்டு பண்ணுவதே மேற்படி சாஸ்திரிகளுக்கு ஜன்ம விருத்தியாய் அமைக்கப்பட்டு இருக்கிறபடியால் அவருக்கு இந்த யோக்கியதா பத்திரத்தை அனுப்புகிற விஷயத்தில் நான் மேன்மையான ஆனந்தத்தை அடைகிறேன். நரம்புகளுக்கு வலுவைக் கொடுக்கக்கூடிய இவருடைய டானிக்குகள் என் அனுபவத்தில் அத்தியந்தம் வீரியமுள்ளவைகளாய் இருக்கின்றன. இவ்விதமான இவருடைய காம்பீரியமுள்ள பிரயத்னங்கள் மேன்மேல் அபிவிருத்தியை அடையவேண்டும் என்று நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன். அவருடைய பல்பொடியையும் அனுபவத்தில் சிரேஷ்டமாக அறிந்திருக்கிறேன்."

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.



நீளமான குழாய்களில் விஷம் தடவிய அம்புகளை வைத்துக்கொண்டு வேட்டையாடுவது.

ருமல் இவர்கள் எய்வார்கள். வேட்டையாடுவதற்கும் எதிரிகளைக் கொல்வதற்கும் இதைத்தான் உபயோகிக்கிறார்கள். இக்குழாயின் நுனியில் ஒரு ஈட்டி கட்டப்பட்டிருக்கும். இவர்களின் கேடயம் மரத்தினுலானது.

போருக்குக் கிளம்பும் முன் சகுனம் பார்த்துத்தான் கிளம்புவார்கள். அச்சகுனமாவது ஒரு பருந்து குறிக்கப்பட்ட திக்கில்தான் பறக்கவேண்டும். வேறு திக்கில் பறந்தால், அந்தத் திக்கைநோக்கிப் பறக்கும் வரையிலும் காத்திருப்பார்கள். ஒரு பன்றியைக்கொன்று அதன் ஈரலிலிருந்தும் ஒருவித சகுனம் பார்ப்பது வழக்கம். ஒவ்வொரு வீட்டுவாசலிலும் ஒரு கொம்பு நட்டு இருக்கும். அதன் உச்சியில் ஒரு மனிதனின் உருவத்தைப்போல் ஒரு சிலை வைத்து இருக்கும். அதன் எதிரில் தான் எல்லாச் சடங்குகளும் நடைபெறும்.

முருத், காலாமான்டன் என்னும் மரபினர், வடக்குப் போர்னியோவில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான பாகங்களிலும் சாராவாகிலும்தான் காணப்படுகின்றனர். இவர்கள் மற்ற இனத்தினரைவிட விவசாயத்தில் தேர்ச்சி பெற்றவர்கள்.

மேலே கூறப்பட்ட எல்லா இனத்தினருக்கும் முக்கிய உணவு அரிசி. அவர்கள் தமது நிலத்தை எவ்விதம் பயிரிட்டு உழுகிறார்களென்று கவனிப்போம். ஒரு நல்ல தினம் பார்த்து நிலத்திற்கு அருகிலுள்ள மரம், செடி கொடிகளை வெட்டி நிலத்தில் போட்டு விடுவார்கள். சில வாரங்கள் கழித்து அவைகள் நன்றாய் உலர்ந்த பிறகு, காற்று அதிகமாயுள்ள ஒரு இரவு அவைகளுக்கு நெருப்புப் பற்ற வைத்து விடுவார்கள். அவை நன்றாய் எரிந்து சாம்பலான பிறகு, சாம்பலுடன் மண்ணைக்கிளறிவிட்டு நெல்லை விதைத்து, ஜலம் பாய்ச்சுவது வழக்கம். இந்தச் சாம்பல், எருவாக உபயோகப்படுகிறது. 14-ல் இருந்து 20 வாரங்களில் நெல் அறுவடைக்குத் தயாராய்விடுகிறது.

அறுவடைக்கு முன்பு பருந்து எந்தத் திக்கில் பறக்கிறது என்று சகுனம் பார்ப்பார்கள். அறுவடையான பிறகு ஒரு உற்சவத்தைப்போல் கிராமத்தினர் எல்லோரும் கொண்டாடுவார்கள். ஸ்திரீகள் அரிசியை அரைத்து அதில் கரிப்பொடியைக் கலந்து, ஹோலிப்பண்டிகையின்போது மார்வாடிகள் ரங்கு அடிப்பதுபோல், புருஷர்களின்மீது அடிப்பார்கள். இதே மாதிரி புருஷர்களும் ஸ்திரீகளின்மீது அடிப்பார்கள். அதன் பிறகு அரிசியைப் புளிக்க வைத்து அதிலிருந்து செய்யப்பட்ட ஒரு மதுபானத்தைக் குடித்து விட்டு நடனமாடுவார்கள். இம்மாதிரி நடனமாடும்போது சில ஸ்திரீகள் புருஷர்களைப்போல் தலைப்பாகை, வேஷ்டி முதலியவைகளை அணிந்துகொள்வார்கள். அதன் பிறகு மிகவும் பலசாலிகளான புருஷர்களில் இருவர் போலிச் சண்டையிடுவார்கள்.

இவர்களின் ஸ்திரீகள் 16 வயது ஆனவுடன் காலிலும், முழங்கைகளிலும் பச்சைக் குத்திக்கொள்வது வழக்கம். சிலர் காதுகள் கிழிந்துவிடும்படி அதிக எடையுள்ள வளையங்களை அணிகின்றனர்.

இவர்களின் வீடுகள் ஒரு ஆற்றங்கரை ஓரமாக, 40, 50 பேர்கள் தமது மனைவி மக்களுடன் வசிப்பதற்கு ஒரு கோட்டையைப்போல் மூங்கிலினாலும், ஓலையினாலும் கட்டுவார்கள். நான்கு பக்கமும் மூடப்பட்டு ஒரு நீண்ட கூண்டு போலிருக்கும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு அறையும், எல்லோரும் சாப்பிட்ட பிறகு உட்கார்ந்து பேசுவதற்கு ஒரு ஹாலுமிருக்கும்.

புனனென்போர் மேலே கூறப்பட்டவர்களைவிட மிகவும் அநாகரீகமானவர்கள். அவர்கள் வேர்களையும் கிழங்குகளையும் தின்றுகொண்டும் விலங்குகளை வேட்டையாடிக்கொண்டும் அடர்ந்த காடுகளில் வசிக்கின்றனர். இவர்கள் நிலத்தை உழுவதுமில்லை, வீடு கட்டிக்கொள்வதுமில்லை.


மோகினிக்கு



கவலையில்லை குறையுமில்லை
ஒரே ஆனந்தமே,
நவயௌவன விலாஸம்
உங்களுக்கு குறை ஏன்?

அவளுக்கு

பூரணாரோக்கியம்!
அது உங்களுக்கில்லை.

ஸ்திரீக்கு ஆரோக்கியமிருந்தால் எல்லாம் ஆனந்தமே!! கிரஹ யஜமான்யம், சந்தான சம்பத்து, பெருமை இவைகளெல்லாம் ஆரோக்கியமிருந்தால்தான் அமைந்திருக்கும்.

ஆரோக்யம்—ஸ்திரீகளின் ஆரோக்கியம் முக்கியமாக கர்ப்பகோசத்தின் ஸ்திதியை ஒட்டியிருக்கிறது. கர்ப்பகோசத்தில் யாதொரு தோஷமுமில்லாதிருந்தால் ஸ்திரீக்கு அந்த ஆனந்தமும், அந்த சௌந்தர்யமும், அந்த நவயௌவன விலாஸமும், சந்தான சோபை எல்லாம் அமையும்.

தேகம் அநாரோக்யமாய் விட்டதென்றும், குணப்படாதென்றும் கைவிடுபவர்கள் யாரோ? அவ்வித மலைப்பு அனாவசியம். ஆனந்தம் உங்கள் அருகாமையிலேயே இருக்கிறது.

**லோத்ரா**

ஆரோக்யப் ப்ரதாயினி

கேஸரி குடீரம்—மதராஸ்.





ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம்
125,6600. ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
யாபீஜாபாத், P.O. S.I.R. சென்னை.



டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

# லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு
நிகரற்றது என்று டாக்டர்களாலும்,
பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மஸி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

நமது சிறுகதை

# பைத்தியக்காரன்

——:[○]:——

(வி. ஏ. சின்னசாமி)

மாலை சுமார் மணி 7 இருக்கும். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் புளூ மௌன்டன் எக்ஸ்பிரஸ் புறப்படுவதற்கு இன்னும் சில நிமிஷங்களே இருக்கின்றன. ஒரு யுவதி இரண்டு மூன்று பெட்டி, படுக்கை வகையறாக்களுடன் கூலியை எதிர்பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். அன்றைக்குச் சேர்த்தாற்போல ஒரு வரும் கிடைக்கவில்லை. வண்டி புறப்பட்டுவிடுமே என்ற கவலையில் ஆழ்ந்திருந்தாள் அப்பெண். இச்சமயம் அவ்வழியே சென்ற வாலிபன் ஒருவன் பெண் மணியின் சங்கட நிலைமையை ஒருவாறு யூகித்தறிந்துகொண்டான்.

"கூலியை எதிர்பார்க்கிறீரா" என்றான் அவ்வாலிபன்.

"ஆம், இன்றைக்கு ஏனோ ஒருவனைக்கூட காணோம்"

"எங்கு போகவேண்டும்?"

"கோவை"

"எனக்கும் ஈரோடுவரை போகவேண்டும். வண்டி புறப்பட சில நிமிஷங்களே இருக்கின்றன. கூலியைத் தேடுவதில் பயனில்லை. ஆகையால் நான் பெட்டிகளை எடுத்துக்கொள்கிறேன். தாங்கள் படுக்கையை எடுத்துக்கொள்ளுங்கள் போகலாம்."

"இல்லை, தாங்கள் என் கஷ்டப்பட வேண்டும்?"

இதற்குள் வாலிபன் "பரவாயில்லை" என்று சொல்லி விட்டு பெட்டிகளை எடுத்துக்கொண்டு போய் பெண்கள் வண்டியில் வைத்தான். அந்த யுவதி "வந்தனங்கள். தாங்கள் செய்த இவ்வுதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? தங்கள் விலாசம்?"

"என் போன்ற வேலையற்ற எம். ஏ. க்களின் விலாசங்களைத் தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறீர்" என்று சொல்லிவிட்டு அவ்வாலிபன் வேறொரு வண்டிக்கு சென்றான். அவ்வாலிபன் பரோபகாரத் தன்மையும் கம்பீரியமும் அவளை வசிகரப் படுத்திவிட்டன. அவனைப் பற்றிய கல்பனைகளையே அன்று பூராவும் அந்த யுவதி செய்துகொண்டிருந்தாள்.

* * * *

ராம் சிந்தனா சாகரத்தில் மூழ்கி ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தான். என்ன செய்வான் பாவம்! அப்ளிகேஷன் போட்டுப் போட்டு கைகளும் வலிக்கின்றன. வேலை கிடைக்கும் வழியைக் காணோம். தினசரிகள் விற்பவர்கள் சப்தம் கேட்டதும் கூப்பிட்டு ஒரு பிரதி வாங்கி வழக்கம்போல் தேவை விளம்பரங்களை ஆராய்ந்தான். அன்றைய விளம்பரங்களில் கீழ்க்கண்டது அவனுக்கு அதிகமாகப் பிடித்தது.

ரூ. 150 சம்பளத்தில் அந்தரங்கக் காரியதரிசி தேவை. எம். ஏ. க்கள்தான் விண்ணப்பித்துக்கொள்ளலாம். வசிகரத் தோற்றமுள்ளவர்கள் படத்துடன் விண்ணபித்துக்கொள்ளவும். திவான்பகதூர் ராஜசேகரமுதலியார், 'கனகவில்லா' கோயமுத்தூர்.

எப்படியாவது இதற்கு ஒரு விண்ணப்பம் போடுவது என்று தீர்மானித்தான். அவனால் உத்தியோகம் கிடைக்குமென்று நம்பமுடியவில்லை. மறுபடியும் ஒருமுறை படித்தான்.

ஹா! இவ்வுத்யோகம் மாத்திரம் கிடைத்துவிட்டால்! நமக்காவது உத்யோகமாவது. சரி எப்படியாவது அதிர்ஷ்டத்தைக் கடைசி முறையாக பரிட்சை செய்துவிடுவது என்று முடிவுசெய்துகொண்டான்.

ராமின் அறையில் ஒரு சிறிய விளக்கு மங்கி ஒளிகொடுத்துக்கொண்டிருந்தது. இப்பொழுதோ பிறகோ! காடுவா! வா!! வீடு போ! போ!! என்றிருக்கும் மனிதனின் நிலையில் அவ்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவ்வறையின் ஒவ்வொரு சாமானும் அவன் ஏழ்மை நிலைமையை நன்றாக வெளிப்படுத்தியது. ஒருவாறு ஒருமணி நேரம் கஷ்டப்பட்டு விண்ணப்பத்தை முடித்தான்.

கடைசியல் போட்டோவின் ஞாபகம் வந்தது. அவன் அழகாயிருக்கிறான் என்ற சந்தேகம் வேறு! அந்த சந்தேகம் அடிக்கடி உறுத்தியது. கடைசியில் தான் அழகன் அல்லாவிட்டாலும் குரூபியுமல்ல என்று தீர்மானித்துக்கொண்டான். அந்நேரத்தில் தன் நண்பன் கோவிந்தனிடம் போய் ஒரு போட்டோ பிடித்துக்கொண்டு வந்தான். மனதில் சஞ்சலங் குடிகொண்டிருந்தது. கடைசியல் 2 மணி நேரத்திற்குமேல் கஷ்டப்பட்டு விண்ணப்பத்தைச் சரிப்படுத்திவிட்டான். ஸ்டாம்பு ஒட்டி மறு தபாலுக்கு தயார் செய்துவிட்டு படுக்கை விரித்தான். அச்சமயம் பக்கத்து மருந்துக்கடை கடியாரம் டன் டன் என்று 2 அடித்தது.

நாட்கள் யாரையும் கேட்காமல் 10-க்குமேல் ஓடிவிட்டன.


உன்னுடைய

## தோல் வியாதிகளையும் ரணங்களையும் ஆற்றுவதெப்படி?

வழியிற் போரவர்கள் பார்ப்பதினால் தாழ்மைப் படுவ தேன்? உன்னுடைய முகம், தோல் வெடிப்பினாலாவது, ரணத்தினாலாவது, சினப்பினாலாவது உருவழிந்திருந்தால் குடிகூரா (Cuticura) உபசரணை செய்தால் உன்னுடைய தோல் சீக்கிரமாய்ச் சுத்தமாகும். முதல் பூசும்போதே புண்ணாற ஆரம்பிக்கும். சொறியும், நமைச்சலும், எரிப்பும் உடனே தணியும். பருவுகள் உலர ஆரம்பிக்கும், காப்பாறும் வாடிப்போகும். கண்ணாடியில்பார்த்தால் ஒவ்வொருதினமும் தேற்றமாகிறது தெளிவாகத் தெரியும். கொஞ்ச நாளைக்குள் உருவழிப்பெல்லாம் போய் நோயின் அடையாளம் முழுதலும் மறைந்து போம்.

இந்த முறைகளைப் படித்து உபயோகிக்கவேண்டும். நோயிருக்கும் பாகத்தைக் குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) வென்னீர் வார்த்துக்கழுவி, மெதுவாய் உலரத் துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். இந்த தின உபசரணை சொறி நமைச்சலைத் தணித்து, எரிப்பை உடனே நீக்கும். இது தவறாத மருந்து. புண்ணாற்றி, நோய் தீர்த்து, புண்ணாற்றும் குடிகூரா (Cuticura) தோல் வெடிப்புகளினுள்ளே புகுந்து அங்கிருக்கும் கருமிப் புழுக்களைக் கொன்று, நோய் வைத்திருக்கும் பாஷாணத்தை வெளிப்படுத்தி சீலக்கும் புண்களை ஆற்றி தோலுக்குச் சுகமான வழியை உண்டு பண்ணி முழுதலும் சொஸ்தமாக்கும்.

Cuticura

OINTMENT AND SOAP




குடிகூரா

தைலமும் சோப்புக்கட்டியும்
எல்லா மருந்து கடைகளிலும்
பஜார்களிலும் வாங்க அகப்படும்.



அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr. N. V ஸ்ரீராமாச்சார்லுவின்

ஸித்தகல்ப

மகராத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,

த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915-ஞு) 289, எஸ்பிளனேட் மதராஸ்.



ஸ்தாபிதம் 1910

உத்திரவாதமுள்ளது. 800 ரூபா மதிப்புள்ளது.

22 காரட் ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்



விலைகள் சரசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பெனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினால் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ. 6-8-0; ஷை சின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ. 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 4-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ 3-8-0; கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ. 3-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ. 2-8-0; கழுத்துச் செயின் சாம் 1-க்கு ரூ. 3-8-0; கல்மாலை ரூ. 3-0-0. டாலருடன் ரூ. 3-8-0. வி. பி. சார்ஜ் வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனாபஜார்ரோடு, மதராஸ்.




கல்கத்தா மெட்ராஸ் யூனியன் சிறுமிகள் பள்ளிக்கூடத்தில் மன்னர்பிரான் மகுடாபிஷேக விழாக் கொண்டாடப்பட்டபோது வந்திருந்தவர்கள்.

சாயங்காலம் மணி4 இருக்கும் ராம் உலாவுவதற்குத்தயாராய் புறப்பட்டுக்கொண்டிருந்தான். வாயிலில் போஸ்ட்மேன் நிற்பதைப் பார்த்து தீபாவளிப் பரிசுக்காக வந்திருக்கின்றனென்று திடுக்கிட்டான். வெளியில் வந்ததும் போஸ்ட்மேன் ஒரு ரிஜிஸ்டர்ட் லெட்டரை நீட்டினன். அதில் ராஜசேகர முதலியார் என்றிருக்கவே அவனுடன் வாங்கிப் பிரித்தான். அதில் கடிதத்துடன் ஒரு 10 ரூபாய் நோட்டுமிருந்தது. அவனை வேலையில் அமர்த்திக் கொண்டதாகவும் உடனே புறப்பட்டு வரும்படியும் எழுதியிருந்தது.

ராமின் சந்தோஷத்திற்கு அளவில்லை. பூர்வ ஜன்மத்தின் புண்ணியம்தான் வந்துவிட்டதென நினைத்தான். தன் எதிர்காலத்தை எண்ணி கல்பனை வீடு கட்டினன். பரம நாஸ்திகனன நம் ராம் அன்று எல்லா சுவாமிகளுக்கும் தேங்காய் உடைத்தான். ஏழைகளுக்குத் தானம் செய்தான். அடைந்திருந்த ஆனந்தத்தில் கையில் கஜானவிருந்திருந்தாலும் காலி செய்திருப்பான்.

ராம் மறுநாள் புறப்பட்டு டிரெயின்மூலம் கோவையை அடைந்தான். ராமின் வரவை எதிர்பார்த்துமுதலியாரின்கார் நின்றுகொண்டிருந்தது. ராம் முதலியார் பங்களாவையடைந்ததும் அவனுக்கு நடந்த உபசாரங்களைப்பார்த்துப்பிரமித்துவிட்டான். அன்று முதலே வேலையும் ஒப்புவிக்கப்பட்டது.

* * * *

ராம் வந்து 5 அல்லது 6 மாதங்களாய்விட்டன. இவன் வேலையைப் பார்த்து முதலியாரும் திருப்தியடைந்தார். இங்கு முதலியாரின் குமாரி கனகவல்லிக்கும் ராமிற்கும் அடிக்கடி சந்திப்பு ஏற்பட்டது. கொஞ்சநாள் சங்கோச வசத்தால் ஒருவருடன் ஒருவர் அதிகப் பழக்கமில்லாமலிருந்தனர். இருந்தபோதிலும் இருவரும் முன்னமேயே மதராஸ் ஸ்டேஷனில் அறிமுகமானவர்களா யிருந்தபடியால் சில தினங்களில் நட்பு ஏற்பட்டுவிட்டது. இருவரும் ஒன்ருக உலாவப் போவார்கள். ஒன்ருக சினிமாவுக்குப் போவார்கள்.

ஒருநாள் ராம் கொஞ்சம் சோம்பலுடன் ஒருசாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தான். முதலியாரும் எங்கோ வெளியில் போயிருந்தார். கனகவல்லி இவன் இப்படிப் படுத்திருப்பதைப் பார்த்து என்ன காரணம் என்று கேட்டாள்.

ராம்:—"உடம்பு சரியாயில்லை."

கனகவல்லி:—"உடம்புக்கு என்ன?"

ராம்:—"கொஞ்ச நேரமாக தலை வலிக்கிறது."

கனக:— "அமிர்தாஞ்சனம் கொண்டுவருகிறேன்" என்று சொல்லிவிட்டுப்போய் அமிர்தாஞ்சனம் கொண்டு வந்து தடவினுள். தன் காதலியின் கோமள கர ஸ்பர்சத்தால் ஆனந்தமடைந்தான். இருந்தபோதிலும் ராம் "இந்த விதம் மணமாகாத நீ என்னிடம் தனியாக" என்று வெட்கத்துடன் கூறினன்.

கனக:—"மணமாகா விட்டால் பரவாயில்லை. பலாறிய மணந்தால்தான் மணமா?"

ராம்:—என்ன......?"

கனக:—"மணந்தால் நான் தங்களைத் தவிர வேறு யாரை மணக்கப் போகிறேன்" என்று பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு கொஞ்சினுள்.

ராம்:—"இருந்தாலும் நீ எஜமானரின் மகளல்லவா?"

கனக:—"மனத்தை உயர்வு தாழ்வென்று பிரிக்க முடியாது.

ராம்:—இது வாஸ்தவமா?

கனக:—"ஆம்" இன்றுநான் உறுதி கூறுகிறேன், உங்களைத் தவிர......

இச்சமயம் வெளியில் சென்றிருந்த முதலியார் வருவது தெரிந்தது. கனகவல்லி உள்ளே சென்றுள். முதலியாரும் இவர்கள் சம்பாஷணையை மறைவில் நின்று கேட்டுக்கொண்டிருந்தாராதலின் கோபத்துடன் உள்ளே சென்றார்.

ராஜசேகர முதலியார் "என் பெயரைக் கெடுக்கவா துணிந்துகொண்டாய்? இந்த மாதிரி நீ அவனுடன் விளையாடினல் என் கௌரவம் என்னவாகும்?" என்று வினவினர்.

கனக:—"நான் என்ன தப்பிதம் செய்தேன்?"

ராஜ:—"இனி என்ன செய்ய வேண்டும்? என்னிடத்தில் வேலைக்கிருக்கின்றவனிடம் காதல் சம்பாஷணை! உன்னைப் படிக்க வைத்ததற்கு இது தான் பிரயோஜனமோ?"

கனக:—"பெண்ணைப் பிறந்தால் ஒருவரை மணக்கத்தான் வேண்டும். அவருக்கென்ன படிப்பில்லையா? அழகில்லையா? குணமில்லையா?" என்று கொஞ்சம் கலவரத்துடனும் சங்கோசத்துடனும் சொன்னுள்.

ராஜ:—"பேஷ்! அழகிருந்தால் போதும். குலமும் வேண்டாம், கோத்திரமும் வேண்டாம். ஒரு அநாதை. அவன் பேச்சை இனி எடுத்தாயோ சவுக்கடிதான்" என்று கர்ஜித்தார்.

கனக:—"இரும்புச் சங்கிலியால் போட்டாலும் மனதை கட்டித் தடுக்கமுடியுமா?"

ராஜ:—"எதிர்த்துப் பேசுகிருயா? பொறு சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு முதலியார் போய்விட்டார்.

* * * *

ராஜசேகரமுதலியார் அன்றே ராமை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். கனகத்தின் கல்யாணத்திற்கும் பேச்சுகள் நடந்தன. முடிவில் மதுரை சுந்திரமுதலியார் மகன் சுப்ரமண்யத்திற்குக் கொடுப்பதாக நிச்சயமாயிற்று.

ராஜசேகரமுதலியார் வீட்டிற்குமுன்னல் விசால பந்தல்கள். ஊர்வலத்திற்கு பெரிய பெரிய கச்சேரிகள். இன்னும் பலமான ஏற்பாடுகள் எல்லாம் தயாராய் இருந்தன! மாப்பிள்ளையும் வந்துவிட்டார். ஆனல் பெண்ணைக்காணும்! வீடெல்லாம்தேடினர்கள். முதலியார் கலவரமடைந்து மூலைக்கு மூலை தேடினர். போலீசுக்குத் தகவல் கொடுத்தார்.

கடைசியில் கனகம் ஒரு அறையில் தூங்கிக்கொண்டிருப்பது தென்பட்டது. அது கனகவல்லி அல்ல, அவள் சவம்! முதலியார்பார்த்ததும் அப்படியே மூர்ச்சித்துவிட்டார்.

* * * *

திருச்சி காவிரி நதிப்பக்கம் ஒரு பைத்யக்காரன் ஒரு பெண்ணின் படத்தைப்பார்த்துக்கொண்டு சிலசமயம் சிரிக்கிருன். சிலசமயம் அழுகின்ருன். சிலசமயம் பூஜைசெய்கின்ருன். சிலசமயம் யாராவது போனல் 'கனகம்!' கனகம்!!" என்று உரக்கக் கத்துகிருன்.

* * * *

இது என்ன மாயை! இது என்ன உலகம்!


அசல் புளூ ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE) நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப்சந்த்

175. சைன பஜார் மதராஸ்.



மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட் ரோட், மதராஸ்.

இதில் இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.

ஏனெனில், இது வெகு வசிகரமான ஆயுள் அஷ்யூரன்ஸ் திட்டங்களையும், வியாபாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இன்வெஸ்ட் செய்ய விசேஷத் திட்டங்களையும் வழங்குகிறது.



பிரபல ஜோதிஷர்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச ரோடு, மைலாப்பூர், மதராஸ்.



சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ. 1-4 கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு, ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.



"உன்னிடம் ஏராளமான புஸ்தகங்கள் இருக்கின்றன. ஷெல்ப்கள் வாங்கிச் சரியாக வைக்கிறதுதானே?"

"ஷெல்ப்களை யாரும் கடன் கொடுக்கமாட்டேனென்கிறார்கள்."

* * * *

"இது நல்லவர்களுக்கே காலமில்லை."

"ஏன்?"

என்பதற்கடியில் டாக்டர் மறதியாகத் தன் பெயரைக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த ஸர்டிபிகேட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியால் பின்கண்ட கடிதத்துடன் திருப்பியனுப்பப்பட்டது:—மரணத்திற்கு டாக்டர் காரணமாகவிருக்கலாம். முதலில் ஏதாவது வியாதியிருந்திருக்கவேண்டுமே. அதைக் குறிப்பிட்டு எழுதவும்.

பதில்:—நான் பைத்தியக்கார ஆஸ்பத்திரி வார்டர் தானே. இதைப்போல் பைத்தியங்கள் பிரதிதினம் சொல்வதைக்கேட்டு எனக்குப் பழக்கமாகிவிட்டது.

* * * *

முன் கோபியான ஒரு ஸ்திரி டிராமில் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு சிறுவன் மீது பட அவளுக்கு இது தொந்திரவாகவிருந்தது.

ஸ்திரி:—பையா, உன்னிடம் கை குட்டை இல்லை?

சிறுவன் (சிறிது நேரம் யோசித்து):—இருக்கிறது. ஆனால் நான் பிறருக்கு அதைக் கடன் கொடுப்பதில்லை.

* * * *

"கடன் வாங்கி ஒரு நண்பனை இழப்பது சுலபம்."

"கடன் வாங்குவதுதான் கஷ்டம்.

* * * *


## நரை மயிரை அகற்றுங்கள்



உங்களது தலை மயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுஙகள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனும்.

**சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி**
(மெடிகல் டிபார்ட்மெண்டு ௭ 15)
**பவானிப்பூர், — கல்கத்தா**
மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
**ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,**
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
**தாதா & கம்பெனி,** மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
**பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.**




லண்டனுக்குச் சமீபமாயுள்ள இல்போர்ட் ஸெண்ட் வாலண்டின் ஸ்பார்க்கில் ஸ்திரீகளுக்குள் தலைமயிர் யாருக்கு மிகவும் நீளமாகவிருக்கிறதென்பதைக் கண்டு பிடிக்க ஒரு போட்டி நடந்தது. அதில் கலந்து கொண்டவர்களை ஜட்ஜ்கள் பரிசை செய்கின்றனர்.

"என் வேலைக்காரன் என்னுடைய சில பட்டுச் சொக்காய்களைத் திருடிக்கொண்டு போய்விட்டான்."

"எங்கு வாங்கினாய்?"

"புதுச்சேரியிலிருந்து வரி கொடுக்காமல் கொண்டுவந்தேனே, அந்த சொக்காய்கள்"

* * * *

ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு மரண ஸர்டிபிகேட் ஒன்று அனுப்பப்பட்டது. அதில் மரணத்தின் காரணம்

* * * *

ஒருவரை அவரது நண்பர்கள் பலர் சூழ்ந்துகொண்டு நகைத்துக் கேலி செய்து கொண்டிருந்தனர். இவர்கள் இவ்வாறு சுமார் ஒரு மணி நேரமாகச் செய்துகொண்டிருந்தும் அவர் பதிலே சொல்லவில்லையாகையால் ஒருவர், "உனக்கு இது திருப்தியாகவிருக்கிறதா?" என்று கேட்டார்.

அடிக்கடி தும்பிக் கொண்டிருந்தான். இதனால் எச்சில் ஸ்திரி


## புத்துயிருடன் ஊக்கம்



விம்டோ கார்டியல் புகழ் பெற்றிருப்பதற்குக் காரணம் இதுதான். முதலில் அது விசேஷ புத்துயிரூட்டும் ருசி மிகுந்த பானம்—தவிர விம்டோ புதிய ஆரோக்கியம், புதிய ஊக்கம், புதிய ஜீவ சக்தி இவற்றைத் தருகிறது! —விம்டோ, பானங்களில் மேலானது.

**VIMTO**
**கார்டியலுடன்**

நஞ்சன்கூடு பல்பொடி
டப்பி I.D.L. №61. மெடிகேட்ட் (அரை 4

ஜீவாமிர்தம்

வைடன்ஸால்




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது.

I

பல்லவி

நன்னு கன்னதல்லி! நாபாக்யமா!
நாராயணி! தர்மாம்பிகே! (நன்னு)

அநுபல்லவி

கனகாங்கி! ரமா பதிஸோதரி!
கருணிம்சவே, காத்யாயனி! (நன்னு)

சரணம்

காவுகாவு மனினே மொரபெட்டக
கருக தேமி மதி, கமலலோசனி!
நீவுப்ரோவகுண்டே எவருப்ரோதுரு-ஸ
தாவரம் பொஸகு, த்யாகராஜநுதே (நன்னு)

II

| | |
|---|---|
| நன்னு கன்னதல்லி | —என்னையீன்ற அன்னையே! |
| நாபாக்யமா | —என் புண்யங்களின் பயனே! |
| நாராயணி | —நாராயணி! |
| தர்மாம்பிகே | —தர்ம ஸம்வர்த்தனி யம்மையே! |
| கனகாங்கி | —பொன் போன்ற காந்தியுடைய திருமேனியை யுடைய தாயே! |
| ரமாபதி ஸோதரி | —லக்ஷ்மீ காந்தனுடைய (அதாவது ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய) ஸஹோதரியே! |
| காத்யாயனி | —காத்யாயனி! |
| கமலலோசனி | —தாமரை மலர் போன்ற கண்களையுடையவரே! |
| த்யாகராஜநுதே | —த்யாகராஜனல் ஸ்தோத்தரிக்கப்பட்டவரே! |
| கருணிம்சவே | —கிருபை புரியும்! |
| காவு காவு மனி | —(என்னைக்) 'காத்தருளும்' காத்தருளும் என்று |
| நே மொர பெட்டக | —நான் முறையிட்டுக் கொண்டும் |
| மதிகரகது ஏமி | —உம்முடைய திருவுள்ள மிரங்காதது என்னே? |
| நீவுப்ரோவ குண்டே | —நீர் என்னைக் காத்தருளாவிட்டால் |
| எவருப்ரோதுரு | —(வேறு) யார் காப்பாற்றப் போகிறீர்கள்? |
| ஸதாவரம்பு ஒஸகு | —எப்போதும் நான் கோரும் வரங்களைத் தந்தருளும். |

III

திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் தர்ம ஸம்வர்த்தனியம்மையைப்பற்றி ஸ்வாமிகள் செய்தருளிய பல கீர்த்தனைகளில் இஃதொன்று.

கன்னதல்லி:—இதே தொடரில் ஆரம்பிக்கும் ஸாவேரி கீர்த்தனத்தையும், "சாலா கல்லலாடுகொன்ன", 'ஆதயஸ்ரீ' முதலிய கீர்த்தனங்களையும் பார்க்க.

நாபாக்யமா:—தம்முடைய ஸத்கார்யங்களின் திரண்ட பல ரூபமாக ஸ்வாமிகள் அம்பிகையைப் பாவிப்பதனல், அவருடைய பக்தி வெளிப்படுகிறது. பராசக்தி புண்ய ஸ்வரூபிணியாகையால் "நாபாக்யமா" என்று பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'தைவம் திஷ்டம் பாகதேயம் பாக்யம்' என நிகண்டு இருப்பதனல், பாக்யம் என்ற பதம் ஸம்போதனமாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாகவும் அழகாகவும் இருக்கின்றது.

(10-ம் பக்கம் பார்க்க)

# "பிராட்காஸ்ட்"

## ஜூன் மாத இணையற்ற வெளியீடு!




செம்பை
வைத்தியநாத பாகவதரின்
**"கச்சேரி" செட்,**
(C. 2437 to C. 2442.)
(6 ரிகார்டுகள்)

(சௌடய்யாவின் பிடில் கேட்க வெகு பரமானந்தமாயிருக்கும்)

(விலை ரூ. 21.)

தென்னிந்திய கோகில கான
**ஸ்ரீமதி M. S. சுப்புலக்ஷ்மி**

G. R. 2443 { ஓ ஜகதம்பா! / ஆனந்தபைரவி பாகம் 1 & 2

(விலை ரூ. 2-12)

முந்திய ரிகார்டுகள் :

G. . 2416 { எனக்குன்னிருபதம் / பாகம் 1 & 2

G. R. 2383 { சந்திரனே சுவதந்திரனே / தாயே ஏழை பால்

### நாதஸ்வரம்

அதி திறமையாகவும், இனிமையாகவும் வாசித்து எல்லோரது மனதையும் மகிழ்விக்கும்

**திருவீழிமிழலை சகோதரர்கள்**

B. 2425 { பைபாட பைரேரு / நாதநாமக்கிரியை. பாகம் 1 & 2

---

கீழ்க் கண்ட சங்கீத ரத்னங்களைக் கேட்டீர்களா?

செம்மங்குடி சீனிவாசய்யர். பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை. மன்னார்குடி ராஜகோபால பிள்ளை. சித்தூர் சுப்ரமணிய பிள்ளை. முடிகொண்டான் வெங்கடராமய்யர். குன்னக்குடி வெங்கடராமய்யர்.

## எல்லாம் "பிராட்காஸ்ட்" ரிகார்டுகள்!

நாராயணி, ரமாபதி ஸோதரி:—பகவான் க்ருஷ்ணபரமாத்மாவாக அவதரிக்கும்போது சிசு ரூபமாயிருந்த அந்தப் பரமாத்மாவை வேற்றிடத்துக்குக் கொண்டு போகும்பொருட்டு உதவியாயிருப்பதற்காக ஜகதம்பிகை ஒரு சிசு ரூபமாய்த் தோன்றியதாக வரலாறு. திருமாலின் நிறம்போல் பார்வதியின் நிறமும் நீல நிறம். சியாமளா, காளி (கரு நிறமுடையவள்), க்ருஷ்ணு (கரு நிறமுடையவள்) முதலிய திருநாமங்களைக் கவனிக்கவும்.

கருணிம்பவே:—'காவவே நன்னு' என்னும் பாடம். 'என்னைக் காப்பாற்றும்' என்று பொருள்படும்.

கனகாங்கி:—சிவபிரானுடைய திருமேனியின் நிறம், 'ஹாடகம்' என்ற பொன் வகையைப் போன்றதென்று, 'சிவ தர்சனமுலேயகாதரமா' என்ற கீர்த்தனத்தில் ஸ்வாமிகள் 'ஹாடகஸமம்பைன அத்புதாக்ருதினி' என்ற பிரயோகத்தைச் செய்திருப்பதிலிருந்து விளக்கமாகும். சிவபிரானிற் பாதியாதலால், அம்பிகையின் நிறமும் அஃதே.

காவுமானினே மோரபெட்டக:—இந்தக் கருத்தைத்தான், கர்ப்பபுரிவாஸர் கீர்த்தனைகளில் ஒன்றான "ப்ரோவஸமயமிதே" என்பதில் 'காவுமானினே கோரியுண்டக' என்ற தொடக்கத்தையுடைய வாக்கியங்களில் காண்கிறோம்.

நீவுப்ரோவகுண்டே:—நாமெல்லோரும் பகவானுடைய புத்ரர்கள். தந்தையர் மக்களிடத்தில் கோபிப்பது ஸஹஜம்; ஆனால் தாயே அருகிலிருந்து அவர்களைத் தேற்றி ஹிதம் செய்வித்துத் தந்தைபால் சேர்ப்பவள். அதுபோலவே நம்முடைய குற்றங்களை மன்னித்து நம்மைக் காப்பாற்றும் பொறுப்பு நம் தாயாகிய ஜகதம்பிகையைச் சேர்ந்ததாகும். இதுதான் புருஷகாரத்வமென்பது. [வைஷ்ணவர்கள் பிராட்டியை (ஸ்ரீ மஹாலக்ஷ்மியை)ப்புருஷகார பூதையென்று வழங்குவதைக் கவனிக்க.] ஆதலால், ஜகதம்பிகையே நம்மைக் காத்தருளாவிட்டால் வேறு யார்தான் காப்பாற்றப் போகிறார்கள் என்பது பொருள்.

இந்தக் கீர்த்தனத்தின் பாவத்தோடு, பஞ்சநதீசுவரர் பேரில் ஸ்வாமிகள் பாடியுள்ள 'எவருன்னாருப்ரோவ' என்ற கீர்த்தனத்தின் பாவத்தை ஒப்பிடவும்.

## IV

**ஸிந்து கன்னடராகம்** — **ஆதி தாளம்.**

[சில பதிப்புக்களில் இந்தக் கீர்த்தனையின் ராகம், 72 மேளகர்த்தா முறைப்படி 25 வதான மாரரஞ்ஜனியில் ஜன்யமான கேஸரி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேஸரியின் க்ரமம் ஸரிகமபமதபதஸ்-ஸ்தநிதபமகரிஸ என்று வித்வான் கே. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்காரியற்றிய கான பாஸ்கரத்திலுல் தெரியவருகிறது. ஆனால் இந்தக் கீர்த்தனம் ஸிந்து கன்னட என்ற ராகத்தில் தான் பாடப்பட்டு வருகிறது. கானபாஸ்கரம் 235-வது பக்கத்தில் ஸ்வரப்படுத்திப் பதிப்பிக்கப்பட்டிருப்பதும் இவ்வாறேயாம். ஸங்கதிகள் மட்டும் இங்கு ஒன்றிரண்டு அதிகமேயன்றி வர்ணமெட்டில் வித்யாஸமில்லை யென்றறியவும். ஆனால் அதில் "பதஸ்ா" என்று பிரயோகம் காணப்படுகிறது ஏனோ தெரியவில்லை.]

ஸிந்துகன்னட, 72 மேளகர்த்தா முறைப்படி 28 வதான ஹரிகாம்போஜியில் ஜன்யம் ஸமகமரிகமபதபஸ்-ஸ்நிதபமகரிஸ என்று க்ரமம். சதுச்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், சதுச்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்-காந்தாரமும் சுத்தமத்யமமும், அவரோஹணத்தில் மட்டும் நிஷாதமும் ராகச்சாயாஸ்வரங்கள். ஜண்டைஸ்வரப் பிரயோகங்கள் இந்த ராகத்தில் வெகு அழகானவை.

### பல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ;-; ;-* | ஸா மா கா ; மா | ரீ, கா, | மா | பா | பம மாகா |
| ;-; ; * | நன்னு கன் ;ன | தல், வி, | நா | ... | பா...க்ய |
| ரீ; ; * | ஸா மா கா ;'மா | ரீ, கா, | கம | பா | பம மாகா |
| மா ; ; * | நன்னு கன் ; ன | தல், வி, | நா | ... | பா....க்ய |
| பமமககரி * | ஸா மா கா ; மா | ரீ, கா, | மப | தப | ஸ்நிதப-தப |
| மா...... * | நன்னு கன் ; ன | தல், வி, | நா | ... | பா.....க்ய |
| பமமககரி * | ஸா ; ஸநிநீதா | பா, ஸா, | ஸா | ரீ-கா | மாகா |
| மா...... * | நா ; ரா... ய | ணி, , | த | ...ர்மா | ம்பி |
| பமமககரி * | | | | | |
| கே...... * (நன்னு) | | | | | |

### அனுபல்லவி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | தாபா ஸ்ா ; ஸ்ா | க்ா க்ா; | ம்க் | ரீ | க்ாம்ாக்ா |
| ; ; ; * | கன காங ; கி | ர மா; | ப- | தி | லோ த |
| ரீ ; ; * | ஸ்நிதப-ஸ்ா ; ஸ்ா | க்ா க்ா; | ம்க் | ரீ | க்ாம்ாக்ா |
| ரி ; ; * | கன-காங் ; கி | ர மா ; | ப- | தி | லோ-த |
| ரீ ; ; * | ஸ்ா ஸ்ா-ஸ்நிநீதா | பா, ஸ்ா, | ஸ்ா | நீ | நித தாபா |
| ரி ; ; * | க ரு-ணிம்...ப | வே,,..., | கா | ... | த்யா...ய |
| பமமககரி * | ஸ்ா ஸ்ா-ஸ்நிநீதா | தப ஸ்நிரிஸ் | ஸ்ா | நீ | நித தாபா |
| ணி...... * | க ரு-ணிம்...ப | வே......... | கா | ... | த்யா...ய |
| பமமககரி * | | | | | |
| ணி...... * (நன்னுகன்னதல்வி) | | | | | |

### சரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ; ; ; * | பா பா பா ; பா | தா'பாஸ்ா | ஸ்ந் | நீ | நித தாபா |
| ; ; ; * | கா வு கா , வு | மனினே | மொ | ர | பெ...ட்ட |
| மா ; ; * | பதபா ஸ்ா ; ஸ்நி | தப மகரிஸ | ஸ ஸ | மா கா; | மா |
| க ; ; * | கருக தே ; மி | ம...தி...... | சம | ல லோ; | ச |
| கமபா * | | | | | |
| கி.ச. * | | | | | |

"நீவு.......... த்யாகராஜனுத"—என்பதை அனுபல்லவிபோல் பாடவேண்டும்.

ஹாஸ்யப்பகுதி

## பிரேக் இன்ஸ்பெக்டர்

—

"தோச்சி"



கண்டக்டர் மிகவும் பயபக்தியுடன் "ஒன்றுமில்லை, இவன் தங்கள் ஆபீஸில் வேலை பார்க்கிறானும். இரும்புப் பேட்டைக்குப் போக வேண்டுமாம்" என்றான்.

இரும்புப் பேட்டைக்கும் ஈயப்புரத்திற்கும் நாற்பது மைல் தூரம். ஒரே கப்பி ரோடுதான். காலை நான்கு மணி முதல் இராத்திரிப் பன்னிரெண்டு மணி வரையிலும் கூட பஸ் சர்வீஸ் உண்டென்றால், நீங்களே இவ்விரு ஊர்களுக்கும் ஜனங்கள் போக்குவரவு எவ்வளவு அதிகமென்று ஊகித்துக்கொள்ளுங்கள்? இங்கும் ஓசிக்கு குறைவில்லை. ஒவ்வொரு பஸ் போகும்பொழுது, 'ஓசி'கள் ஒன்றிரண்டு இல்லாமல் இல்லை.

மறுநாள் பண்டிகைக்கு வரும்படி பச்சையப்பனின் சிற்றப்பன் லிகிதம் எழுதியிருந்தான். ஈயப்புரத்தில் பச்சையப்பன் ஓர் வியாபாரியிடம் குமாஸ்தா வேலை பார்த்து வந்தான். பண்டிகைக்கு வரும்படி எழுதிய அவனுடைய சிற்றப்பன் இரும்புப்பேட்டையில் வசித்து வந்தார். அவர் அக்கடிதத்தில் பணம் தேவையாயென்று கேட்டு இருந்ததற்குப் பச்சையப்பன் 'ஜம்ப'மாக வேண்டாமென்று பதில் எழுதிவிட்டான். ஆனால் பஸ் சார்ஜுக்கூடப் பணம் கையில் இல்லை. முதலாளியைக் கேட்பதில் பிரயோஜனமில்லை. கைமாத்தாக கொடுக்கக்கூடிய நண்பர்கள் அவனுக்குக் கிடையாது. இங்ஙனம் யோஜித்த அவன் ஓர் முடிவுக்கு வந்தான்.

* * * *

அன்றிரவு பச்சையப்பன் தன் முதலாளியிடம் இரண்டு நாள் ரஜா வாங்கிக்கொண்டு, பஸ் 'ஸ்டாண்டை' அடைந்தான். ஒன்பது மணி பஸ் தயாராகப் போக இருந்தது. மெதுவாக கண்டக்டரை மிகவும் மரியாதையாக பச்சையப்பன் அணுகினான். கண்டக்டருக்கு இவன் ஓசியில் ஒன்று என்பது நன்றாய் விளங்கிவிட்டது. உத்தியோகத் தோரணையில், "எந்த ஊர்?" என்றான் அக் கண்டக்டர்.

அதற்கு பச்சையப்பன், "நான் சோழபுரம் பிரேக் இன்ஸ்பெக்டர் ப்யூன். நேற்று ஆபீஸ் காரியமாகவந்தேன். தற்போது இரும்புப்பேட்டைக்குப்போகவேண்டும்" என்றான்.

'அப்படியா! இங்கு வா' என்று கண்டக்டர் பச்சையப்பனை அங்குள்ள ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றான். மெல்ல நழுவிவிடலாமா வென்றுகூட பச்சையப்பன் நினைத்தான். ஆனால் மனதில் தைர்யங்கொண்டு என்ன நடக்கிறது பார்ப்போமென்று கண்டக்டரை தொடர்ந்து சென்றான்.

அவ்வறையில் ஒருவர் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். பார்ப்பதற்குப் பெரிய உத்தியோகஸ்தர்போல் காணப்பட்டார். அவ்வளவுதான்! பச்சையப்பன் தன் கதி அதோகதிதான் என்று நினைத்துக்கொண்டிருக்கும் சமயம் அவர்பத்திரிகையினின்றும்தலையைத் தூக்கி கண்டக்டரை, "என்ன வேண்டும்" என்றார்.

கண்டக்டர் மிகவும் பயபக்தியுடன் "ஒன்றுமில்லை; இவன் தங்கள் ஆபீஸில் வேலைபார்க்கிறானும். இரும்புப் பேட்டைக்குப் போகவேண்டுமாம்" என்றான்.

சற்றுயோசித்து, "ஆம் புதிய ப்யூன்" (பச்சையப்பனுக்குப் போன உயிர் திரும்பியது) முதலில் ஆள் அடையாளம் தெரியவில்லை. இந்த ஒன்பது மணி பஸ்ஸிலேயே அவனை அனுப்ப ஏற்பாடு செய்யவும்" என்றார். பச்சையப்பன் சௌக்கியமாய் பண்டிகையைத் தன் சிற்றப்பன் வீட்டில் கொண்டாடினான்.

* * * *

ஆனால் பச்சையப்பனுக்கு ஓர் கேள்விக்கு விடையில்லாததால் அவனின் மனதை சதா உறுத்தியது. பார்த்தால் பெரிய ஆபீஸர்போல் காணப்பட்டார். முன்பின் அறியாத அவர் தன்னை தன் ஆபீஸ் ப்யூன் என்று அங்கீகரித்தது இவனுக்கு மிக்க ஆச்சர்யத்தை உண்டாக்கியது.

நான் உங்களுக்கு மாத்திரம் காதோடு காதாகச் சொல்லுகிறேன்; அந்த ஆபீஸரும் பச்சையப்பனைப் போலவே சோழபுரம் பிரேக் இன்ஸ்பெக்டராக கையில் பணமில்லாததால் நடிக்க நேர்ந்தது.


விலை ரூ. 1-4 தான்!

பாக்ஸ் & போல்டிங் காமிரா.

ஆரம்பக்காரர்கள்கூட இக்காமிராவினால் ஒரு நொடியில் கார்டு சைஸ் படங்களெடுக்கலாம். வேலையற்றவர்கள் தினம் ரூ.5. சம்பாதிக்கலாம்.



இலவசம் ஒவ்வொரு காமிராவுடன் 1. டாக்ஸ் பிரிண்டிங் பேப்பர். 4 பிலிம்கள்; டெவலப்பிங் கெமிக்கல்ஸ் & சாமானிய உபயோகக் குறிப்புகள். விலைகள்: பாக்ஸ் காமிரா நெ. 2--ரூ. 1-4; நெ.1-(a) ரூ. 2—8. படத்திலுள்ள போல்டிங் காமிரா ரூ.3; உயர்ந்தது ரூ.4-8. பிரத்யேக பிலிம்கள் டஜன் ரூ. 1; பிரிண்டிங் பேப்பர் டஜன் 6 அணா. பாக்கிங் முதலியன 10 அணா.

Young India Watch Co.,
(Depot 30)
159/C, Machua Bz. St. Calcutta.

பிளிட்
பவுடர்
தூவுங்கள்.
ஊரும் எல்லா
பூச்சிகளையும்
கொல்வது.




புகழ் பெற்ற
பிளிட்
காரரின்
தயாரிப்பு.

SAVE YOUR EYE



From ALL TROUBLES, even Cataract
Try 'SELLER'S LOTUS HONEY'
—The nature's own remedy. Absolutely safe. Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free
L. H. Seller, Santa, Bengal
Beware of Imitation—Insist on SELLER'S

# செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ 5; தபால் செலவு 9அணா.

எல்லா முதல்தர கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

ஹோல்ஸேல் ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

நமது தொடர் கதை



# கரும்பூதம்

அல்லது

# கள்வனைக் காதலித்த காரிகை

[திருச்சி ஸ்ரீமான் கே. வி. எஸ். வாஸ், பி. ஏ. (ஆனர்ஸ்) எழுதியது.]

முன் கதைச் சுருக்கம்.

**பாஸ்கரம் பிரபு** விஜயபுரியில் மிகுந்த செல்வவந்தர். அவருக்கு, **கமலா, ஹிமாவதி** என்ற இரு பெண்களுண்டு. மூத்தவளான கமலாவுக்கும் குணசீலம் பிரபுவின் ஒரே குமாரன்

**ஜயந்தனுக்கும்** பீஜப்பூர் கிராமத்திலுள்ள மாளிகையில் விவாகம் நடைபெறப்போகிறது. பாஸ்கரம்பிரபு விவாகத்திற்கான நகைகளை எல்லாம் விஜயபுரியிலுள்ள தமது "மன்மத விலாஸ" மாளிகையில் வைத்திருக்கிறார். துப்பறியும் இலாகா போலீஸ் கமிஷனர்

**துளஸிதாஸ்** நகைகளைப் பாதுகாத்து வருகிறார். ஆனால்,

**கரும்பூதம்** பாஸ்கரம பிரபுவைப்போல் நடித்து மன்மத விலாசத்திற்கு வந்து வைரமாலையைக் கவர்ந்து செல்லுகிறான். கரும்பூதத்தின் செயல்கள் ஒரு மர்மப் பெண்ணிற்குத் தெரிந்துவிடுகிறது. அவள் டெலிபோனில் கரும்பூதத்துடன் பேசுகிறாள். டெலிபோன் மாதின் வேண்டுகோள்படி கரும்பூதம் தான் கவர்ந்து வந்த நவரத்ன மாலையை பாஸ்கரம் பிரபுவின் வீட்டிலேயே மறுபடியும் கொண்டுபோய் வைத்துவிடுகிறான். பாஸ்கரம் பிரபுவின் குமாரியின் திருமணத்தையொட்டி பெரிய விருந்தொன்று நடந்தது. அதில்,

**சுதர்சனம் பிரபு**, அவரது சகோதரி,

**நளினம்**, பாஸ்கரம் பிரபு, துளஸிதாஸ் முதலியோர்கரும்பூதத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சுதர்சனர் தம் வீட்டிலிருந்து அவன் களவாடிவிட்டால் மாதர் மறுமண சகாயசங்கத்திற்கு ரூ. 50,000 நன்கொடையளிப்பதாகச் சொல்லுகிறார். அன்றிரவு டெலிபோன் பெண் கரும்பூதத்தையழைத்து தான் கரும்பூதம்மழுதியதுபோல் சுதர்சனம் பிரபுவிற்கு அவர் வீட்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் கொள்ளையடிக்க வரப்போவதாகக் கடிதமெழுதி விட்டதாகச்சொல்லி அதன்படியே நடக்கவேண்டுமென்று சொல்லுகிறாள். மேற்படி கடிதம் சுதர்சனம் பிரபுவிற்குக் கிடைக்கிறது. சுதர்சனம் பிரபு தன் மின்சாரத் தொழிற்சாலையின் உதவியால் தன் வீட்டிற்குள் ஒருவரும் நுழைய முடியாத ஏற்பாடுகள் செய்கிறார். அவர் கரும்பூதம் திருட வருவதாக எழுதியுள்ள தினத்தன்று பாஸ்கரம் பிரபுவையும் துளஸிதாஸையும் வரும்படி அழைக்கிறார்.

### அத்தியாயம்......4
### மாளிகையில் நுழைந்தது யார்?

கரும்பூதத்தின் கையொப்பத்துடன் டெலிபோன் பெண்மணி வரைந்திருந்த பயமுறுத்துக் கடிதத்தை சுதர்சனம் பிரபு ஏழெட்டு முறை திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தார். ஒவ்வொரு முறை படிக்கையிலும் அவருடைய கோபம் பன் மடங்கு அதிகமாக மூண்டது. பல்லை நெறநெறவென்று கடித்துக் கொண்டே "அந்தப் பயலை நசுக்கிச் சாறு பிழியாவிட்டால் நான் ஒரு தகப்பனுக்குப் பிறந்த பிள்ளையல்ல! என்னைச் சகோதாரனென்றல்லவா விலாசமிட்டிருக்கிறான்? ஊம், இந்தத் திமிரையும் இறுமாப்பையும் ஒரு நொடியில் நோக்கிவிடுகின்றேன்!" என்று உறுமினார் சுதர்சனம் பிரபு. அவ்வமயம் செல்வி நளினம் உள் நுழைந்து "அண்ணா, பலகாரம் சாப்பிட வரவில்லையா! மணி எட்டடிக்கப் போகின்றதே! காலையில் சீக்கிரமாக எழுந்து தொழிற் சாலைக்குப் போகவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே!" என்றாள்.

"ஆம் மறந்து போய்விட்டேன்! அது கிடக்கட்டும், நளினா, உன்னிடம் ஒரு விசேஷமான சமாச்சாரமல்லவா சொல்லப் போகின்றேன்" என்று ஆரம்பித்தார் சுதர்சனம் பிரபு.

"என்ன, அண்ணா? என்ன சமாச்சாரம்?" என்று ஆவலுடன் வினவினாள் கன்னி.

சுதர்சனம் பிரபு அவளிடம் கரும்பூதத்தின் கடிதத்தை யளித்து "இதோபார்! நேற்றிரவு ஒரு கொள்ளைக்காரனைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருந்தோமல்லவா? அந்தப் பயல் நமது மாளிகையைக் களவாட உத்தேசித்திருப்பதாய்ப் பயமுறுத்தியிருக்கின்றான்!" என்றார்.

செல்வி நளினம் அந்தக் கடிதத்தைச் சாந்தமாகப் படித்துப் பார்த்து விட்டு, "அண்ணா கரும்பூதத்தின் கடிதம் எனக்குக் கொஞ்சமும் ஆச்சர்யத்தைக் கொடுக்கவில்லை. ஏனெனில், நீங்கள் பந்தயம் கூறிய விஷயம் அவனுடைய செவிகளுக்குக் கட்டாயமாகப் போய்ச் சேர்ந்திருக்குமென்றும், அவன் இப்படிப்பட்ட கடிதமொன்றை இரண்டொரு தினங்களுக்குள் வரைவான் என்றும் ஏற்கனவே நான் எதிர்பார்த்தேன். கரும்பூதத்தைப் போன்ற கள்வர்களுக்கு ஊரெங்கும் உளவுகாரர் களிருப்பார்களென்று முன்பே நான் எச்சரிக்கை செய்யவில்லையா?" என்றாள்.

"எச்சரிக்கையா செய்தாய்? ஊம், உன்னுடைய கரும்பூதம் வியாழக்கிழமை யன்று படப்போகும் பாட்டைப்பாரு!" என்று கடுகடுப்புடன் கூறினார் சுதர்சனம் பிரபு.

"என்னுடைய கரும்பூதமாவது? நீங்கள் என்னென்னவோ மனம்போன போக்கில் பேசுகின்றீர்களே!" என்று சற்று கோபத்துடன் கூறினாள் கோதை நளினம்.

"உன்னுடைய கரும்பூதமென்றால் நீ பிரமாதமாகப் பாராட்டிப் பேசுகின்றாயே! அந்தக் கரும்பூதமென்று தாத்பர்யம்! அப்பப்பா; அந்தப் பயலுக்கு நீ அடுக்கடுக்காகப் புகழ் மாலைகளைச் சூட்டுவதைக் கவனித்தால் அவனைக் கல்யாணம் செய்து கொள்ளவும் தயாராக இருப்பாய் போல் தோன்றுகின்றதே!" என்று ஏளனமாகக் கூறினார் சுதர்சனம் பிரபு.

அவருடைய துடுக்கான வார்த்தைகள் செல்வி நளினத்திற்குப் பலத்த கோபத்தை மூட்டியது. செக்கச் செவேலென்றிருக்கும் அவளது அழகிய வதனம் ஆத்திரத்தினால் பன்மடங்கு அதிகமாகச் சிவந்தன. உதடுகள் துடிதுடிக்க செல்வி நளினம் ஏதோ பதிலளிப்பதற்கு ஆரம்பித்தாள். ஆனால் அவளுடைய உதடுகள் அசைந்தனவேயன்றி வார்த்தைகள் கண்டத்தை விட்டு வெளிவர மறுத்து விட்டன. "அண்ணா கரும்பூதத்தைத் திருமணம் செய்து கொள்ள சித்தமாயிருப்பாய் போல் தோன்றுகின்றதே யென்றல்லவா குறும்புத்தனமாகக் கேட்டீர்கள்? ஆம், அவனிடம் எனக்குக் காதலேற்படுமானால் அவனையே கலியாணம் செய்து கொண்டு விடுவதற்குக் கொஞ்சமும் தயங்க மாட்டேனென்பதைக் கண்டிப்பாகக் குறித்துக் கொள்ளுங்கள். அவனையும், அவனுடைய உண்மை

**மனோரஞ்சனி**
இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் கம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!
எம். எஸ். ராமுலு கம்பேனி,
286, எஸ்பிளனேட், மதாஸ்.



“இவன் கரும்பூதமலல! இவனுடைய பெயர் கருப்பண்ணன். சென்றவாரம்தான் சிறையிலிருந்து விடுதலை யடைந்தான்,” என்றார் துளஸிதாஸ்.

யான சக்தியைப் பாராட்டிப் பேசும் என்னையும், அகம்பாவத்தினாலல்லவா இப்படி உதாசினமாகப் பேசுகின்றீர்கள்? அகம்பாவம் கொண்டவர்கள் அடியோடு வீழ்ச்சியுறுவார்களென்பதை நீங்கள் அறிந்து கொள்ளாமலிருப்பது உங்களுடைய கெட்டகாலத்தையே சுட்டிக் காட்டுகிறதென்று நான் நினைக்கின்றேன். என்னுடைய மனதைப் புண்படுத்துவதென்பது உங்களுக்கு சகஜமாகப் போய் விட்டது. ஆகையால், உங்களுடன் வாக்குவாதம் செய்வதில் கொஞ்சமும் பயனில்லை. வருகிற வியாழக்கிழமை யன்று உங்களுடைய கர்வத்தைக் கரும்பூதம் கண்டிப்பாகச் சிதைத்து விடுவானென்று எதிர்பார்க்கின்றேன். பிறகாவது உங்களுடைய மண்டைக் கனம் குறைவடைகின்றதா யென்பதைப் பார்ப்போம்!” என்று தனக்குள் சொல்லிக்கொண்டே அறையை விட்டு மெளனமாக வெளியேறினாள் மங்கை.

* * * *

வியாழக்கிழமையும் கடைசியாக வந்தது. அன்று பகற்பொழுது முழுவதும் எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டு இரவு சுமார் எட்டரைமணிக்கு மாளிகை திரும்பினார் சுதர்சனம் பிரபு. கரும்பூதமென்னும் மாயக்கள்வன் கைதியாகப்போகின்றான் என்ற நினைப்பில் அவருடைய உள்ளம் பூரித்துக்கொண்டிருந்தது. எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணிக்கொண்டே சுதர்சனம் பிரபு தமது பிரத்யேக அறையை யடைந்தார். கண்களையும் கருத்துக்களையும் ஒருங்கே கவரத்தக்க அழகிய பல படங்களால் ரமணீகரமாகச் சிங்காரிக்கப்பட்டிருந்த அவ்வறையின் மத்தியில் சதுரவடிவமான கருங்காலி மேஜை யொன்று போடப்பட்டிருந்தது. அதைச் சுற்றி நான்கு நாற்காலிகளிருந்தன. மேஜையின்மீது ஹார்மோனியத்தைப் போல் பெரிய இயந்திரமும், அதில் வரிசை வரிசையாகப் பல வர்ணப் பல்புகள் அனேகமும் காணப்பட்டன. பல்புகளின் அடிப்புறங்களில் மெல்லிய மின்சாரக் கம்பிகள் பிணைக்கப்பட்டிருந்தன. அந்த அறையில் மேற் குறிப்பிட்டவைகளைத் தவிர இடது கோடியில் ஒரு பெரிய சோபாவும் காணப்பட்டது.

நமது சுதர்சனம் பிரபு அந்த அறையில் நுழைந்து மேஜையின்மீதிருந்த மின்சாரக் கருவியைப் பரிசோதனை செய்துகொண்டிருந்தார். சுமார் அரைமணி நேரத்திற்குப்பின் பாஸ்கரம் பிரபுவும் துப்பறி நிபுணர் துளஸிதாஸும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கண்டதும் “நண்பர்களே! உங்களுடைய கண்களுக்கு நான் இன்று விருந்தளிக்கப் போகின்றேன்!” என்று சிரித்துக்கொண்டே கூறினார் சுதர்சனம் பிரபு

“ஆம்! கரும்பூதத்தைக் காண்பது கண்களுக்கு விருந்தளிப்பதற்கு ஒப்பானதே யென்பதில் ஆக்ஷேபணையில்லை!” என்று புன் முறுவலுடன் பதிலளித்தார் பாஸ்கரம் பிரபு.

“காண்பதென்று சொல்லாதீர்கள்! கைது செய்வதென்று கூறுங்கள்!” என்றார் சுதர்சனம் பிரபு.

“அவன் கைது செய்யப்பட்டாலும் சரி, தப்பி யோடிவிட்டாலும் சரி, அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அவனைப் பிரத்யக்ஷமாகப் பார்க்க வேண்டுமென்பது என் ஆவல். அந்த ஆவல் இன்று பூர்த்தி பெறுமென்று எதிர்பார்க்கின்றேன்!” என்று சொல்லிவிட்டு மேஜையின் மீதிருந்த இயந்திரத்தை வியப்புடன்நோக்கினார் பாஸ்கரம் பிரபு.

“நண்பர்களே! முதலில் கரும்பூதத்தைக் கையுங்களவுமாகப் பிடிப்பதற்காக செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளைச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். கேளுங்கள்!” என்று ஆரம்பித்து சுதர்சனம் பிரபு பின்வருமாறு கூறினார். “முதலாவதாக, தற்சமயம் நம்மூவரையும் தவிர இந்த மாளிகையில் வேறு ஒருவருமில்லை. வேலையாட்களையெல்லாம் பிற்பகலிலேயே வெளியிலனுப்பிவிட்டேன் அவர் நாளைக் காலை எட்டு மணிக்கு முன் இங்கு வரமாட்டார்கள். எனது சகோதரி நளினம் படக்காக்ஷிக்குச் சென்றிருக்கிறாள். அவள் இன்னும் அரைமணி நேரத்திற்குள் வந்துவிடுவாள். இப்பொழுது நான் மின்சார மெயின் விசையைத் திருப்பிவிடுகிறேன். மேஜையின்மீதிருக்கும் இயந்திரத்தில் எத்தகைய மாறுதல்கள் ஏற்படுகின்றனவென்பதைக் கூர்ந்து கவனியுங்கள்!” என்று கூறி சுவற்றிலிருந்த ஒரு பித்தானை அழுத்தினர் சுதர்சனம் பிரபு. அதே வினாடியில் ஹார்மோனியத்தில் அமை


# PASSED MATRIC

பம்பாயிலிருந்து மிஸ்டர்.........

எழுதுவதாவது: “நான் மெட்ரீக் பரீக்ஷையில் தேறினேன்; இதற்கு தங்கள் ‘‘மூலிகை’’யே காரணம். சீனியர் காம்பிரிட்ஜ் பரீட்சைக்காக ஒன்று அனுப்பவும்.’’

‘‘ திபேத் மூலிகை ’’யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



வசீகரன், ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0. **2. வியாபாரமும், தொழிலும்:—** நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0 **3. வியாஜ்யங்கள்:—**இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 **4. வியாதிகள் :—** முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 **5. உத்தியோகம்:—**வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. **6. பரீக்ஷைகள்:-** எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 **7. சத்ருக்களை ஜெயித்தல்:—**எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 **8. கிரஹ தோஷம்:-**எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. **9. ஆரோக்யமும், செல்வமும்:—**எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

**அறிவிப்பு:—**இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜ் வேறு ஓரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-0-0.

தபால் சார்ஜ் தனி. அணு 8.

**BIJOYA LODGE, (S.W.)**

**P. O. SALKIA HOWRAH**



க்கப்பட்டிருந்த பல்புகளெல்லாம் பற்றிக்கொண்டன. பிறகு சுதர்சனம் பிரபு மேலும் கூறவாரம்பித்தார்.

"நண்பர்களே! இந்த இயந்திரத்தின் முதல் வரிசையில் நீல வர்ண பல்புகள் எட்டு இருக்கின்றனவல்லவா? இவைகளில் முதலாவது பல்பு அணைந்துவிடுமானால் கரும்பூதம் மாளிகையின் முன் புறத்திலிருக்கிறானென்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். அங்கு ஒரு கதவும் ஐந்து சாளரங்களுமிருக்கின்றன. இந்த ஆறு மார்க்கங்களின் எதன் வழியாக அவன் நுழைந்தாலும் அதை அடுத்தாற்போலிருக்கும் ஆறு பல்புகளிலொன்று சுட்டிக்காட்டும். முதல் வரிசையிலிருக்கும் எட்டாவது பல்பு அவன் உள்ளே நுழைந்துவிட்டானென்பதைத் தெரிவிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. இதேபோல் தோட்டப்புறமாகவுள்ள சாளரங்களிலும், கதவுகளிலும் அமைக்கப்பட்டுள்ள மின்சாரவிசைகள் இந்த இயந்திரத்தின் கடைசி வரிசையிலுள்ள சிவப்பு பல்புகளுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் கரும்பூதம் முன்புறமாகவோ அல்லது பின்புறமாகவோ நமக்குத் தெரியாமல் மாளிகைக்குள் நுழைந்துவிட முடியாது!" என்று சொல்லி சற்று நிறுத்தினர் சுதர்சனம் பிரபு.

"சபாஷ்! இன்றிரவு உங்களுடைய மாளிகையினுள் நுழைய கரும்பூதம் ஒருவனைத் தவிர வேறெவராலும் இயலாதென்பது நிச்சயம்!" என்றார் பாஸ்கரம் பிரபு.

"கரும்பூதத்தினாலும் முடியாது. வீட்டிற்குள் ஒரு எலி புகுந்தாலும் அந்த விஷயம் இயந்திரத்தில் உடனே தெரிந்துவிடும்!" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி சுதர்சனம் பிரபு மேலும் தெரிவித்ததாவது: "நண்பர்களே! வாசற்கதவின் வழியாகக் கரும்பூதம் உள்ளே பிரவேசிக்கிறானென்று வைத்துக்கொள்ளுங்கள். அதன்பிறகு அவன் மாளிகையிலிருக்கும் எந்த அறையில் புகுந்தாலும் இதோவுள்ள இயந்திரத்தின் மூலமாக நாம் சுலபமாகக் கண்டறிந்துவிடலாம். அவன் என்னிடமிருந்து அதிக மதிப்புள்ள பொருள்களைக் களவாட விரும்பினால் தாழ்வாரத்திலிருக்கும் புத்தக அறையிலோ அல்லது மேல்மாடியிலிருக்கும் பொக்கிஷ அறையிலோ நுழைந்தாக வேண்டும். எனது பத்திரங்களும் முக்கியமான கடிதங்களும் புத்தக அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆபரணங்களும், விலையுயர்ந்த இதர பொருள்களும் மாடியறையிலிருக்கின்றன. இவ்விரண்டிற்குள் எந்த அறையில் அவன் நுழைந்தாலும் அதை இந்த இயந்திரத்தின் மூலமாக நாம் கண்டறிந்துவிடலாம். மேஜையின் வலது புறத்தில் நான்கு பித்தான்களிருப்பதைக் கவனியுங்கள். அவைகளில் "அ" என்ற எழுத்திட்டிருக்கும் பித்தானையழுத்தினால் தாழ்வார அறை தானாகப் பூட்டிக் கொள்ளும். "ஆ" என்ற பித்தானை யழுத்தினால் மாடியறையும் இதே போல் தானாகப் பூட்டிக் கொண்டுவிடும். இவ்விரண்டினுள் ஒன்றில் கரும்பூதம் சிக்கிக் கொண்டால் அவனால் ஒருக்காலும் வெளியேற முடியாது. தவிர, இந்த அறைகளின் கதவுகளில் மற்றொரு விசேஷமும் இருக்கின்றது. அதாவது கரும்பூதம் இந்த அறைகளிலொன்றில் சிக்கிக்கொண்டால் தப்பிச் செல்லுவதற்காகக் கதவைத் திறக்க முயற்சி செய்வான். அவ்வமயம் கதவின் உட்புறத்திலமைக்கப் பட்டிருக்கும் இரும்புத் தகடுகள் அவனுக்கு அதிர்ச்சியையளிக்கும். எப்படியெனில் "இ" என்னும் எழுத்துடைய இந்த மூன்றாவது பித்தானை யழுத்தினால் கதவிலிருக்கும் தகடுகளில் மின்சாரசக்திபாயும். அப்பொழுது அதை எவராலும் தீண்டமுடியாது. இதே போல் "ஈ" என்ற எழுத்துடைய நான்காவது பித்தான் பொக்கிஷ அறைக்கதவின் உட்புறத்திலுள்ள தகடுகளுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன!"

"சபாஷ்! இந்த ஏற்பாடுகளை யெல்லாம் கவனித்தால் கரும்பூதம் அகப்பட்டாலும் அகப்பட்டு விடலாமென்று தோன்றுகின்றதே!" என்றார் துப்பறி துளஸிதாஸ்.

"இன்றிரவு கடிதத்தில் தெரிவித்திருப்பதைப் போல் தவறாமல் வருவானாயின் கட்டாயமாகச் சிக்கிக் கொள்வானென்பதில் சந்தேகமேயில்லை! என்னை ஏமாற்றினாலும் என்னுடைய இயந்திரத்தை ஒருக்காலும் ஏமாற்றமுடியாது"! என்று பெருமையுடன் கூறினார் சுதர்சனம் பிரபு.

அடுத்தாற்போல் பாஸ்கரம் பிரபு ஏதோ பேசுவதற்கு ஆரம்பித்தார். அதே சமயத்தில் இயந்திரத்திலிருந்த நீல பல்பிலொன்று சட்டென்று அணைந்தது. அதைக்கண்டதும் "நண்பர்களே! இப்பொழுது இயந்திரத்தைக் கவனியுங்கள். முன் வரிசையிலிருக்கும் நீல நிற பல்புகளில் முதலாவது பல்பு அணைந்துவிட்டதல்லா? இது எனது மாளிகையின் முன்புறமாக எவரோ வந்து கொண்டிருக்கிறாரென்பதைச் சுட்டிக் காட்டுகின்றது!" என்றார் சுதர்சனம் பிரபு. அதைக்கேட்டதும் பாஸ்கரம் பிரபுவும் துளஸிதாஸும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். அவர்களுடைய கலவரத்தைக் குறிப்பாலறிந்து கொண்ட சுதர்சனம் பிரபு கல

(26-ம் பக்கம் பார்க்க)

வலுவாகவும்,
நிரந்தரமாகவும், பத்திரமாகவு
மிருக்க இரும்பையே
கட்டிடங்களில் உபயோகியுங்கள்.
உயர் ரகத்திற்கு
டாடா இரும்பையே
கேளுங்கள்.
ஒவ்வொரு பட்டணத்திலும்
வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும்
இருக்கின்றனர்.

Tata Iron & Steel Co., Ltd.,
18, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
தந்தி: "IRONCO MADRAS" போன்: 2701

நஞ்சன்கூடு சதவைத்யசாலை
ச்யாவன்ப்ராச
சுவாச டானிக்
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

நீரிழிவு, மதுமேகம்
முதலிய சகல நீர் ரோகங்களுக்கு
பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்
மயூரகாய கற்பம்
ஒரு தெய்வீக சஞ்சீவி!!
இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு
இன்றே எழுதுங்கள்.
ஸ்கந்தாசிரமம்
தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

அதிசய உண்மைக் கதைகள்

# அழகினல் அரசியான அபலை

(எஸ். ரங்கராஜ ஐயங்கார் எழுதியது.)

முடி தரிக்கும் மன்னனின் மனைவியாய் சிம்மாதனத்தில் வீற்றிருப்பது சாமான்யமானதன்று. அது எப்பெண்மணிக்கும் கிட்டக்கூடிய பாக்கியமல்லவென்பதற்குத் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்ற அரசபட்ட மாறுதலே போதுமான ஆதாரமாகும். மன்னர் ஒரு ஸ்திரீயைக் காதலிக்கிறார். அவளை அவர் மணக்க விரும்புகிறார். ஆனல் அவள் அரசியாக வீற்றிருக்கத் தகுதியற்றவள் என்பது ராஜாங்கத்தை நிர்வஹிக்கும் பொறுப்பாளிகளின் அபிப்பிராயம். அவர்கள் அவ்விவாகம் நடைபெறக் குறுக்கே நிற்கின்றனர். அரசர் மனத்தில் காதலே லட்சியமாக விளங்குகிறது. அவர் தனது அரசுரிமையை புறக்கணித்துவிட்டு நாட்டைத் துறந்து செல்லுகிறார்.

இது தற்கால மன்னர்களுக்கு சிற்சில சமயங்களில் விளையக்கூடிய சங்கடங்களில் ஒன்றை நிரூபிக்கிறது. உன்னத பதவியை அவர்கள் வகிப்பினும், அவர்களுக்கு சுயேச்சையென்பதே இல்லை. ஒவ்வொரு சிறு காரியத்திலும் அவர்கள் பொறுப்பாளிகளாகிய தங்கள் மந்திரிகளது அரசணையைப் பெற வேண்டியது அவசியமாயிருக்கிறது. எனினும் சில நூற்றுண்டுகளுக்கு முன் நிலைமை இப்படியில்லை. அப்பொழுது அரசனே ராஜ்யத்தின் நிர்வாஹத்துக்குப் பொறுப்பாளியாயிருந்தான். அவனை அடக்கி நிர்வஹிக்கக்கூடியவர்கள் யாருமில்லை. அப்பொழுது அவன் தான் விரும்பிய ஸ்திரீயை மணக்கும் பாத்தியதையைப் பெற்றிருந்தான் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமா?

இங்கிலாந்து மன்னர்களின் சரித்திரங்களை ஆராய்ந்தால் சாதாரண குடும்பங்களில் பிறந்த பெண்டிரும் தங்களது அதிர்ஷ்ட வசத்தால் மன்னரை மணந்து அரசியாகத் திகழ்ந்தனர் என்பது நன்கு விளங்கும். அத்தகைய பெண்டிரில் ஒருத்தியின் அதிசய சரிதையை இங்கு எடுத்துக்கூறுவாம்.

அவள் பெயர் எலிஜபெத் வுட்வில். அவள் கி. பி. 1431-ம் வருடம் பிறந்தவள். அவள் தாய் பிரெஞ்சு தேசத்தவள். அவள் தந்தை ரிச்சர்ட் வுட்வில் நார்த்தாம்ப்டன் ஜில்லாவிலுள்ள கிராப்டன் என்ற ஊர்வாசி. எலிஜபெத்தை தவிர அவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவர்னர். கிராமத்திலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த அச்சிறுமியின் அழகு பொலிவுபெற்று விளங்கியது. அவளது எழிலில் மயங்கினவர்கள் அநேகர். எனினும் அவள் மனம் காமனுக்கு இலக்காகவில்லை.

அவளுக்கு வயது வந்ததும் ஒரு நல்ல பதவி கிடைத்தது. இங்கிலாந்து மன்னனை ஆறுவது ஹென்ரியின் மனைவி மார்கரெட் அரசியின் தோழிகளில் ஒருத்தியாக அவள் நியமிக்கப்பட்டாள். ராணியின் சபையில் சோபித்த அவளைப் பல சீமான்கள் மணக்க முன்வந்தனர்.

ஆனல், அவள் உள்ளம் கிரே என்ற வீரன்மீது நாடியது. அவனுக்குக் கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. அவனுடன் எளிய வாழ்க்கையை நடத்த அவள் விரும்பினள்.

கிரேயுக்கும் எலிஜபெத்துக்கும் விவாகம் நடைபெற்றது. இருவரும் இனிமையாக இல்லறம் நடத்தினர். அவர்களது வாழ்க்கையின் போக்கு திடீரென்று மாறுதலடையும் என்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை.



வைத்யரத்ன பண்டித யு. ராமநாதசாஸ்திரியார். இவர் கவர்ன்மெண்டு இந்திய வைத்திய ஸெண்டிரால் போர்டு மெம்பராக மீண்டும் மூன்று வருஷங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இங்கிலாந்து உள்நாட்டுப் போர்-ரோஜாப்பூ யுத்தம்-தொடங்கியது. அப்பொழுது அரசாண்ட மன்னனை ஆறுவது ஹென்றியின் திறமைக் குறைவே அந்த யுத்தத்துக்குக் காரணம். அரசுரிமைக்கு யார்க்பிரபு பாத்தியங் கொண்டாடினன். அவனுக்கு உதவி செய்தான் வார்விக் பிரபு. யுத்தம் மிகவும் மும்முரமாய் நடைபெற்றது.

...தினன். 1461-ம் வருடம் ஸெயின்ட் ஆல்பன் என்ற இடத்தில் யுத்தம் நடந்தது. மிகவும் தைரியம் பொருந்திய அவன் அந்த போர்க்களத்தில் தன் உயிரை யிழந்தான். அழகிய எலிஜபெத் விதவையானள். அவளது இரு குழந்தைகளும் தகப்பனை யிழந்து பரிதவித்தன.

முடிவில் யார்க் தரப்பார் வெற்றி பெற்றனர். யார்க் தலைவனுன எட்வர்ட் ஆங்கில ஸிம்மாஸனத்தின் மீது ஏறினன். ஹென்றி அரசன் சிறையில் வைக்கப்பட்டான். அவனது மனைவியும் குமாரனும் பிரான்சு தேசத்துக்கு ஓடினர்கள்.

அக்காலத்தில் தோற்றவர்களிடம் இரக்கம் பாராட்டுவது கிடையாது. யார்க் கக்ஷிக்கு எதிராகப் போர் செய்தவர்களது ஸொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கிரேயின் வீடும் நிலங்களும் சர்க்காருக்குச் சொந்தமாயின. அழகிய எலிஜபெத்தும் அவளது இரு பிள்ளைகளும் திக்கற்றவர்களாயினர். அவர்களுக்கு ஜீவனத்துக்கும் கூட வழியில்லை. எலிஜபெத் தன் மக்களுடன் தன் தகப்பனது வீட்டுக்குச் சென்றாள். அவள் தந்தையின் வீட்டு நிழலில்லையேல் அவள் பிச்சையெடுக்க வேண்டியதுதான்.

ஆனல் எலிஜபெத் பொறுமைசாலி. தனக்கு நல்ல வேளை வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளிருந்த ஊருக்கு எட்வர்ட் மன்னன் வந்த செய்தியைக் கேள்விப்பட்ட அவள் அவனிடம் நேரில் சென்று தன் குறைகளைக் கூறி தனது கணவனின் சொத்துக்களைப் பெறத் தீர்மானித்தாள்.

அழகிய தோப்பு, அங்கே ஒரு பெரிய மரம். அந்த மரத்தின் நிழலில் நின்றாள் அழகில் மிக்க எலிஜபெத் விதவை. அவள் இருபக்கங்களிலும் அவளது இரு ஆண் குழந்தைகளும் அவளை அணைத்துக் கொண்டு நின்றன.

எட்வர்ட் அரசன் அவ்வழியே வந்தான். அவன் திருஷ்டி அவ்வெழில் வாய்ந்த பெண்மணிமீது விழுந்தது.

“அரசே, அபயம். எனக்கும் என் மக்களுக்கும் தாங்கள் தான் கருணை காட்டவேண்டும்” என்று மண்டியிட்டுக் கதறினள். சோகமே அழகு கொண்டதுபோல் தோன்றினள் எலிஜபெத்.

மன்னன் திகைத்து நின்றான். “என்ன அழகு! என்ன பரிதாபமான நிலை? இவ்வனிதை யார்?” என்று தனக்குள்ளே வினவிய அவன், அவளை அன்புடன் நோக்கினன். அவள் கூறிய கதையை செவியுற்றான். அவளது கணவனது சொத்துக்களை அவளுக்குத் திருப்பிக் கொடுக்க உத்தரவு செய்தான்.

மரத்தின் நிழலிலே அரசனை யாசிக்க நின்றாள் எலிஜபெத். அங்கே அவளைக்கண்ட பின் அவன் மனம் அவளையடைய விரும்பியது. கண்டதும் காதல் என்பது அவன் விஷயத்தில் பலித்து விட்டது. எலிஜபெத்தை அரசன் அடிக்கடி சந்திக்கலானன். அவளை

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants,
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL
TONIC FOOD
SOLE AGENTS DAMODER & Co.
78. CHINA BAZAAR ROAD MADRAS.

ஆராய்ச்சி பூர்வமான
நவீன மருந்துகள்
மேத்தாஸ் கோனே பில்ஸ்—எல்லா வகையான மூத்திரக் கோளாறுகளுக்கும் உத்தரவாதமான நிவாரணி. விலை புட்டி 1-க்கு ரூ. 2.
கே. எஸ். மேத்தா & கம்பெனி,
பிரபல மருந்து வியாபாரிகள்,
234, சைனா பஜார், மதராஸ்.

மிகுந்த ஆர்வத்துடன் கேட்டான். இருவருக்கும் இரகசியமாய் மணம் நடைபெற்றது.

ஆனல் இந்த சங்கதி வெளியே ஒருவருக்கும் தெரியாது. மன்னனுக்கு பிரஞ்சு தேசத்து அரச கன்னிகையை மணம் செய்விக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தான் மந்திரி வார்விக் பிரபு. ஆனல் அரசன் ஒருநாள் தன் சபையில் எலிஜபெத்தை அழைத்து வந்தான். "இவள்தான் என் மனைவி. இவளே உங்கள் அரசி" என்று அவன் பெருமையுடன் கூறினன். நாலாவது எட்வர்டுக்கும் எலிஜபெத் ராணிக்கும் பட்டாபிஷேகம் நடைபெற்றது.

ஆனல் வார்விக் பிரபு சும்மா இருப்பானா? தன்னை அவமதித்த அரசன் மீது அவன் மிகுந்த கோபங்கொண்டான். சிறையிலிருந்த ஹென்றி அரசனை மீண்டும் சிம்மாசனத்தில் ஏற்ற அவன் சூழ்ச்சி செய்தான். பிரான்சிலிருந்த மார்கரெட் அரசியும் அவன் குமாரனும் திரும்பி வந்தனர். எட்வர்ட் அரசன் நாட்டைவிட்டு ஓட நேரிட்டது. சிறையிலிருந்த ஹென்றி அரசன் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டான். எலிஜபெத்தின் தந்தை வார்விக்கின் உத்தரவால் குரூரமாய்க் கொல்லப்பட்டான். எலிஜபெத் ராணியான குற்றத்துக்காக அவள் தந்தையின் உயிர் பறிமுதல் செய்யப்பட்டது. என்ன கொடுமை!

ஆனல் எட்வர்ட் சாமான்ய ஆஸாமியல்ல. அவன் சமயம் பார்த்து இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தான். ஒரு பெரும் படையைத் திரட்டினன். யுத்தத்தில் அவன் ஜெயமடைந்தான். எதிரிகள் தோல்வியுற்றனர். வார்விக் பிரபுவும் வேல்ஸ் இளவரசனும் உயிரையிழந்தனர். ஹென்றி அரசன் சிறையில் வைக்கப்பட்டு இரகசியமாய்க் கொலைசெய்யப்டான். எட்வர்ட் மீண்டும் தன் இராணியுடன் சிம்மாதனம் ஏறினன்.

அதுமுதல் சில வருடங்கள் இராணிக்கு நல்லகாலம் என்று சொல்லலாம். அவளுக்கு இரண்டு ஆணும் ஒரு பெண்ணும் பிறந்தன. அவளது உற்ருர் உறவினர் உன்னதப் பதவிகளைவகிக்கலாயினர். அரசன் அவள் மீதும் அவளது உறவினர்மீதும் மிகவும் பிரேமைகொண்டான். அவள் கூறுவதற்கு எதிர் வார்த்தை அவன் சொல்லுவதில்லை.

ஆனல் அப்பேதை இராணி மீது பலர் பொருமை கொண்டனர். பரம்பரைப் பிரபுக்களில் பலர் அவள் மூத்த கணவன் மூலம் பிறந்த அவளது இரு மக்களும் அரசபோகங்களை அனுபவிப்பதை அவர்கள் கண்டு எப்படிச்சகிப்பார்கள்? எட்வர்ட் அரசன் இருக்கும்பொழுதே அவர்களை ஒழிப்பதற்குப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. ஆனல் அவை பலிக்கவில்லை.

எட்வர்ட் மன்னன் இறந்தது தான் தாமதம். இராணி மீது ஏற்கனவே ஏற்பட்ட பகைமையும் வெறுப்பும் முற்றின. எட்வர்ட் அரசனின் தம்பி கிளஸ்டர் பிரபு மகா தந்திரம் வாய்ந்த குள்ளநரி. எட்வர்ட்டின் மூத்த மகன்—எட்வர்ட் ஐந்தாவன் என்று பிரகடனம் செய்யப்பட்ட பொம்மை வாலிப அரசன்—சிறையில் வைக்கப்பட்டான். அபலையான ராணி எலிஜபெத் தன் இளைய குமாரனுடனும் மகளுடனும் ஒரு மாதா கோவிலில் சரண்புகுந்தாள்.

ஆனல் கபடத்திலும் குரோதத்திலும் மிக்க கிளஸ்டர் பிரபு அவளது இளைய குமாரனை மெதுவாய் அவளிடமிருந்து கைப்பற்றினன். அவனும் அவனது அண்ணனுடன் சிறையில் வைக்கப்பட்டான். இருவரும் இரகசியமாய் கொல்லப்பட்டனர். கிளஸ்டர் ரிச்சர்ட் மூன்ருவன் என்ற பெயருடன் சிம்மாஸனம் ஏறினன். அவனுடைய உத்தரவால் எலிஜபெத்தின் சகோதரனும் அவனது முதல் விவாகத்து மகன்களிலொருவனும் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

ஆனல் கடவுள் இந்த அனியாய அரசனை நெடுநாள் சிம்மாஸனத்தில் வைக்கவில்லை. இரண்டு வருடங்களுக்குப்பின் அவன் ரிச்மாண்ட் பிரபுவால் கொல்லப்பட்டான். அரச வம்சத்தில் பிறந்த ரிச்மாண்ட் எலிஜபெத்தின் மகளை மணந்து சிம்மாதனம் ஏறினன். அவன் தான் ஏழாவது ஹென்றி.

இப்படிப் பல துக்கங்களையனுபவித்த அபலையான அரசி எலிஜபெத் முடிவில் தனது சந்ததி நிலைபெற்று விளங்குவதைக் கண்டு நிம்மதியுடன் தன் அந்திய காலத்தைக் கழித்தாள்.

இக்கதையை முடிக்குமுன் ஒரு விஷயம் குறிப்பிட வேண்டியது அவசியம். அழகிய எலிஜபெத்தை முதல் முதல் எட்வர்ட் மன்னன் எந்த மரத்தின் கீழ் சந்தித்தானே அந்த மரம் இன்னும் இருக்கிறதாம். "அரசியின் மரம்" என்ற சிறப்புப் பெயர் அதற்கு வாய்த்தது பொருத்தமானதன்ரே?





ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத்தெரு, மதராஸ்.







குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகாற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணுமலை முதலியார்
வைத்தியர் அண்ணுமலை தெரு. மயிலாப்பூர், சென்னை



சென்னையில் நபிகள் நாயகம் பிறந்த தினக் கொண்டாட்டத்தையொட்டி திருவல்லிக்கேணியில் பிரம்மாண்டமானதொரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

# இந்திய வர்த்தமானம்

——[ o ]——

## பத்தாயிரம் தொழிலாளர் வேலை நிறுத்தம்

லாகூர் மோகல்பாராவிலுள்ள வடமேற்கு ரெயில்வேயின் லோகோ ஒர்க்ஷாப் தொழிலாளர்கள் 10,000 பேர் சென்ற 21-ந்தேதி வேலை நிறுத்தம் செய்தனர். "நபிகள் நாயக தினம்" 23-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று வருவதால், அதற்காக மறுநாள் திங்கட்கிழமை ரஜா விடக்கூடாதென்றும், தற்போது ஒர்க்ஷாப் தொழிலாளருக்குச் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சம்பளமின்றி ரஜா அளிக்கப்படுவதால், ஞாயிற்றுக்கிழமையே ரஜா கொடுக்க வேண்டுமென்றும், திங்கட்கிழமை வேலை செய்யவேண்டுமென்றும் தொழிலாளர் கோரினர். இதை அதிகாரிகள் மறுத்துவிட்டதால், தொழிலாளர்கள் தொழிற்சாலையை விட்டு வெளியே வர மறுத்துவிட்டனர். உடனே அதிகாரிகள் கலவரமேற்படாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டனர். பிறகு தொழிலாளர்கள் இரவு 12-10 மணிக்கு தாமாக அமைதியாக வெளியேறினர். அவர்களுடைய கோரிக்கையை காரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

* * * *

## இந்தியா சட்டசபைக் கூட்டம்

இந்தியா சட்ட சபையின் அடுத்த கூட்டம் ஆகஸ்ட் மாதம் 23-ந் தேதி கூடுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

## அரசியல் கைதிகள் விடுதலை

"பர்மா பர்மியருக்கே" என்ற பர்மா சங்கக் கொள்கையை ஆதரிப்பதாகக் கூறும் ஏராளமான அரசியல் கைதிகளைப் பர்மா கவர்ன்மெண்டார் விடுதலை செய்வார்களெனத் தெரிகிறது.

* * * *

## பர்மாவுக்குக் காங்கிரஸ் தலைவரின் செய்தி

பர்மாசுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு சென்ற 20-ந்தேதி பினங்கிற்குப் பிரயாணமானர். பண்டித ஜவஹர்லாலுக்கு பர்மா ஜனங்கள் சார்பாகவும் பல பர்மிய ஸ்தாபனங்கள் சார்பாகவும் 70,000 ரூபாய் பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

பர்மாவுக்குப் பின்வருமாறு அவர் ஒரு செய்தி விடுத்தார்:- "பர்மாவில் குடியேறியிருக்கும் ஏராளமான இந்தியர்களில் சிலர் செழிப்பாக இருக்கிறார்கள். ஆனல் பெரும்பான்மையோர் ஏழைகளாகவும், சுரண்டப்பட்ட தொழிலாளராகவும், குடியானவர்களாயுமிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையும் பர்மா தொழிலாளர், குடியானவர்கள் முதலியோரின் நிலைமைபோன்றதே. தேசம் செழிப்படைந்தால் பர்மாவிலுள்ள இந்தியர்களுக்கு க்ஷேமம்; தேசத்திற்கு துன்பமேற்பட்டால் அவர்களுக்கும் துயரம். இந்தியர்களுடைய நலன்கள் எப்படி இந்தியாவில் முக்கியமானவையோ, அதேபோன்று பர்மியர்களின் நலன்கள் இங்கு முக்கியமானவையாக இருக்க வேண்டும்."

காங்கிரஸ் தலைவர் ஜூன் 8-ந் தேதி மறுபடி ரங்கூனுக்கு வந்து உடனே புறப்பட்டு 10-ந் தேதி கல்கத்தாவுக்கு வருவாரென்றும், அங்கிருந்து நேராக அலஹாபாத்துக்குப் புறப்படுவாரென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

## பர்மா-இந்தியா தபால் கட்டணம்

இந்தியா-பர்மா தபால் கட்டணத்தை உயர்த்தியது சம்பந்தமாக நடந்துவரும் கிளர்ச்சியால் கொஞ்சம் பயனேற்படுமென்று தோன்றுகிறது. தபால் கட்டணத்தைக் கொஞ்சம் குறைக்கப் பர்மா கவர்ன்மெண்டார் சம்மதப்படுகிறார்களென்று தெரியவருகிறது. அடுத்த ஆகஸ்டு மாதத்தில் பர்மா அஸெம்பிளி முன் வரவு செலவு திட்டப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும்போது தபால் கட்டணங்களைக் கொஞ்சம் குறைக்க ஒரு புதிய பிரேரணையை கவர்ன்மெண்டார் கொண்டு வருவார்கள். தபால் கார்டுகள், கவர்கள் முத

அமர்ஜோதியின்
அழியாத் தீபம்
ஸ்ரீமதி
துர்க்கா கோட்டே
நடிக்கும்
'ப்ரதிபா'
(ஹிந்தி)
டைரக்டர்:
பாபுராவ் பெயிண்டர்
கோலாப்பூர் ஷலினி சினிடோன் தயாரித்தது.
சென்னை மாகாணம், சிலோன், நைஜாம் எஸ்டேட் உரிமைபெற்றவர்கள்:
Mayura Films Ltd.
Thyagarayanagar
MADRAS.
Tel: 'Mayura' Phone: 88295.

வியவற்றின் கட்டணத்தில் அரையணுக் குறைக்கப்படலாம். தற்போதைக்கு தந்திக் கட்டணங்கள் குறைக்கப்படமாட்டார் முதல் வருஷத்தின் பலாபலனைப் பார்த்துக் கொண்டு அடுத்த வருஷம் பூரா பிரச்னையும் பரிசிலனை செய்யப்படும்.

• • • •

## உருது லிபிக்கு ஆதரவு

பிஹார் கவர்ன்மெண்டார் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்:—பல சங்கங்களும் நபர்களும் அனுப்பிய முறையீட்டுகளின் மேல் மந்திரி சபையினர் பாட்னு, திர்ஹுட், பகால்பூர் டிவிஷன்களில் தற்போது கோர்ட்களிலும் ஆபீஸ்களிலும் உபயோகிக்கப்படும் கைத்தி லிபிக்குப் பதிலாக ஜூன் மாதம் 1-ந் தேதிமுதல் உருது லிபியே நிரந்தரமாக உபயோகிக்கப்படவேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

* * * *

## முஸ்லிம்களுக்குள் சச்சரவு

சென்ற 21-ந்தேதி லக்ஷ்மணபுரியில் ஷியாக்களுக்கும் ஸுன்னிகளுக்கும் சச்சரவேற்பட்டதன் பயனுக எழுபேர்கள் இறந்தனர். பலர் காயமடைந்திருக்கின்றனர். இச்சச்சரவு மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்தது. 20-ந்தேதி ஷியா வகுப்பினர் இட்கா இத் கொண்டாடியதாகவும், நபிகள் நாயகத்தின் மூன்று சகபாடிகளைத் தூஷிப்பதான பாடல்களைப் பாடியதாகவும், இது ஸுன்னி வகுப்பினரிடையே பரபரப்பையுண்டுபண்ணவே, பிறகு கலவரம் நேர்ந்ததாகவும் கூறப்படுகிறது. மதாலாஹிபா ஓதுவதுபற்றி இவர்களுக்குள் நீண்ட நாளாகச் சச்சரவிருந்து வந்ததாம். கலவரத்தில் தடிகள் தாராளமாக உபயோகிக்கப்பட்டன. போலீஸார் அமைதியை நிலை நிறுத்தினர். தடிகள் ஆயுதங்கள் எடுத்துச் செல்லக் கூடாதெனவும், இரவு நடமாட்டத்தைத் தடுத்தும் தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. சம்பவம் நடந்த பிரதேசத்திலுள்ள கடைகள் எல்லாம் மூடப்பட்டன. சில கடைகளும் எரிந்து போயின. முஸ்லிம் தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் சமாஸமாகப் போகும்படி ஜனங்களை வேண்டிப் பிரசாரம் செய்தனர்.

* * * *

## மாணவர் வேலை நிறுத்தம்

அமிர்தசரஸ் கால்சா சர்வகலாசாலைக் கல்லூரி மாணவர்களில் நான்கு பேர்கள் மாணவர் சங்க இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக கல்லூரியை விட்டுத் தள்ளப்பட்டனர். இதனை ஆட்சேபிப்பதற்காக சென்ற 19-ந் தேதி முதல் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். மாணவர்களில் ஒரு பகுதியினர் கல்லூரி வாயிலில் மறியல் செய்தனர். போலீஸார் தடிகொண்டு தாக்கினர். இதில் சில மாணவர்கள் காயமடைந்தனர். மறியலில் பல மாணவிகளும் கலந்து கொண்டிருக்கின்றனர்.

* * *

## தோலிரா சுயராஜ்ய ஆச்ரமம் திருப்பிக் கொடுக்கபபட்டது.

கூர்ஜரத்தில் தங்கள் வசம் கடைசியாக இருந்த தோலிரா சுயராஜ்ய ஆச்ரமத்தைச் சர்க்கார் திருப்பிக் கொடுத்து விட்டனர். இந்த ஆச்ரமம் 1932-ம் வருஷத்திய சட்ட மறுப்பு இயக்க காலத்தில் சர்க்காரால் வசப்படுத்திக் கொள்ளப்பட்டது.

* * * *

## கடைய நல்லூரில் கலகம்

சென்ற 24-ந் தேதி தென்காசிக் கருகாமையிலுள்ள கடைய நல்லூரில் பெருங் கலகம் நடந்தது. அவ்வூர் மறவர்கள் கொடை கொடுத்து உற்சவம் கொண்டாடிக் கொண்டிருக்கையில்சில முஸ்லிம்கள்வாகனங்கள் மீது உட்கார்ந்திருந்ததே கலகத்திற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. சென்னை சட்டசபைத் தேர்தல் காலத்திலேயே இரு தரப்பாருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு அது முதிர்ந்து விட்டதும் காரணமாம். மறவர் முதலிய பலஹிந்துக்களின் வீடுகளும் தான்யங்களும், ரிகார்டுகளும், கால் நடைகளும் தீக்கிரையாயின. போலீஸார் கலகத்தை யடக்கி அமைதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

* * * *

## காங்கிரஸை எதிர்த்துப் பிரசாரம்

காங்கிரஸ் தவறுக நடந்து கொள்ளும் முறையல் பிரசாரத்தை செய்யவேண்டுமென்று ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்குக் கவர்னரின் காரியதரிசி சுற்றறிக்கை விடுத்திருக்கிறாரென்று வெளியூர்களிலிருந்து கேள்விப்பட்டுச் சென்னை காங்கிரஸ்காரர்கள் மனக்கலக்கமடைந்திருக்கின்றனரென்று, செய்தி வெளியாகியிருக்கிறது. சட்டத்தில் கண்டுள்ளபடிக் கவர்னரின் காரியதரிசி வேலை பார்க்க மாட்டாரென்று காங்கிரஸ்காரர்கள் கொண்டிருந்த சந்தேகத்தை இது ஊர்ஜிதம் செய்கிறது. நிரந்தர சர்வீஸின் நடவடிக்கைகளின்மீது ஆதிக்கத்தைச் செலுத்த அவர் முயலுவாரென்றும் ஆகவே, ஸிவில் சர்வீஸ்கள் கவர்னரிடம் நெருங்கிய சம்பந்தமுடையனவாக இருக்குமென்றும், பூர்ண பொறுப்பை வகிப்பவர்கள் என்று சொல்லப்படும் மந்திரிகளின் ஆதிக்கத்தில் அவை இருக்காதென்றும் காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள்.

• • • •


## மைசூருக்கு விஜயஞ் செய்யுங்கள்

மேன்மை தங்கிய

# மகாராஜா பிறந்த தின கொண்டாட்டங்கள்

19—6—37 ... சனிக்கிழமை

## மைசூர் குதிரைப் பந்தயம்

21, 23, 26, 30—6—37 & 3 & 7—7—37உ

மைசூருக்கு மலிவான ரிட்டர்ன் டிக்கட்டுகள்

| ஸ்டேஷன்களிலிருந்து | | | ரிட்டர்ன் கட்டணங்கள் ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| மதராஸ் செண்டிரல் | 2-வது வகுப்பு | ... | 26 | 3 | 0 |
| ,, | 3-வது வகுப்பு | ... | 9 | 7 | 6 |
| பௌரிங்பேட்டை | ,, | ... | 3 | 15 | 6 |
| ஊர்காம் | ,, | ... | 4 | 2 | 6 |
| சாம்பியன் | ,, | ... | 4 | 2 | 6 |

இந்த டிக்கேட்டுகள்

11—6—37 முதல் 19—6—37 வரையில் கொடுக்கப்படும்

12—7—37உக்குள் திரும்பும் பிரயாணத்தை முடித்துக் கொள்ளவேண்டும்.

3 வயதிற்கு மேல் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அரை சார்ஜு

எல்லாப் பிரயாணி வண்டிகளுக்கும் செல்லும்.

எம். எஸ். எம்.


## ஓட்டர்களை ஏமாற்ற வழி

காங்கிரஸிற்கு எதிராக ஒரு தேசியக் கட்சியை அமைக்க பொப்பிலி ராஜாவுக்கும் பித்தாபுரம் மகாராஜாவுக்கும் சம்பாஷணை நடந்து வருகிறது. இருவரும் தங்கள் முக்கிய ஸகாக்களை அழைத்துப் புதிய கட்சியின் அமைப்பைப்பற்றி யோசித்து வருகிறார்கள். புதிய கட்சி மாகாணக் கட்சியாக மாத்திரமிருந்துவிடாமல் விரிவானதாக அமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஸா ஹரிஸிங் கவரின் உதவியை நாடியிருக்கின்றனர். கட்சிக்குத் தகுந்த பெயர் கிடைக்கவில்லையாம். "ஸ்வராஜ்யக் கட்சி" என்று பெயர் வைத்தால் ஜனங்கள் சுலபமாகத் திருப்தியடைவார்களென்றுயோசனை கூறப்பட்டிருக்கிறது. ஜஸ்டிஸ்கட்சி முக்கியஸ்தர்களில் சிலர் புதிய முயற்சியை ஆதரித்தபோதிலும் வருங்காலத்தில் இதனுல் தங்கள் கட்சிக்குப் பாதகமேற்படக்கூடாதென்று விரும்புகின்றனர்.

* * * *

## ஸ்ரீமான் கோதண்டராவ் பிரஷ்டம்

இந்திய ஊழியச் சங்கக்காரியதரிசியான ஸ்ரீமான் பி. கோதண்டராவ் உலக யாத்திரை செய்துவருகிறார். அவரை அபாயகரமான நபர் என்று பிரெஞ்சு இந்தோ-சீன கவர்ன்மெண்ட் அதிகாரிகள் கருதி நாடு கடத்திவிட்டார்கள்.

* * * *

மற்ற பக்கங்களில்


| | |
|---|---|
| கிழக்கிந்தியத் தீவுகள் | 2 |
| பைத்தியக்காரன் (சிறு கதை) | 5 |
| விநோதக்கொத்து | 7 |
| ஸங்கீதப்பகுதி | 8 |
| பிரேக் இன்ஸ்பெக்டர் (ஹாஸ்யப்பகுதி) | 11 |
| கரும்பூதம் (தொடர்கதை) | 12 |
| அழகினுல் அரசியான அபலை | 15 |
| இந்திய வர்த்தமானம் | 17 |
| பிரபஞ்ச வர்த்தமானம் | 23 |
| நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணுடி | 25 |
| திருமுறை கண்ட சோழன் (சரித்திரப்பகுதி) | 29 |
| நவநாகரீகம் | 31 |
| வேடனின் விடாமுயற்சி (சிறுவர் பகுதி) | 33 |
| தென்னிந்தியப் பிரமுகர்கள் | 35 |
| மரியாதைராமன் கதை | 39 |
| மஹாபாரதம் | 40 |



பிரபாத் பிலிம் கம்பெனியாரின்

"சாந்த துக்காராம்"

என்ற மராத்தி பேசும் படத்தில் துக்காராமாக நடிக்கும் விஷ்ணு பந்த் பாக்னிஸ்.

# பர்மாவில் பண்டித நேருவின் சுற்றுப்பிரயாணம்



பண்டித ஜவஹர்லால் நேரு





மாண்டலே தெருக்
ம



ரங



மாண்டலேயில் ஊர்வலம்.





சள் வழியாக பண்டித நேரு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். (வலது பக்கம்) ரங்கூனில் பண்டித ஜவஹர்லால் நேருவை எதிர்பார்த்து நின்று ண்டிருந்த ஜனங்கள் தலைவரைக் கண்டவுடன் அவர் மோட்டாரை அணுகினர். தலைவர் மோட்டாரில் நின்று பிரதி வந்தனம் செய்தார்.





கூனில் பண்டித நேரு. (வலது பக்கம்) மாண்டலே முனிஸிபாலிட்டி காங்கிரஸ் தலைவருக்கு ஒரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தது.



மன்னர் முடி சூட்டு விழாவை யொட்டி ராஜப்பிரதிநிதி பல எளியவர்களுக்கு அன்னமளிக்க ஏற்பாடு செய்தார்.



ராஜப்பிரதிநிதி:லார்டு:லின்லிதோவும் அவரது மனைவி லின்லிதோ சீமாட்டியும் அன்னமளிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.



சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள சமூக சங்கத்தினுதரவில் ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதன் தலைமையில் ஸ்திரீகள் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது.

# பிரபஞ்ச வர்த்தமானம்

---

**ரஷ்யாவில் 44 பேருக்குத் தூக்கு தண்டனை**

ஜெர்மனி, ஜப்பான் இந்நாடுகளின் சார்பாக ரஷ்யாவில் உளவறிந்ததாகவும் ரயில்வேக்களைத் தகர்த்ததாகவும் ஒரு ஸ்திரீ உள்பட 44 பேர் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்கள். ராணுவக் கோர்ட்டார் அவ்வெதிரிகள் அனைவருக்கும் மரண தண்டனை விதித்தனர். உடனே தண்டனை நிறைவேற்றி வைக்கப்பட்டது.

* * * *

**சீனாவில் பஞ்சக் கொடுமை**

கான்ஸு, ஷிசன், விசோ, ஹோனன் இம்மாகாணங்களில் மழையின்மை, கொடிய பஞ்சம் காரணமாகப் பட்டினி கிடந்து தவித்த லக்ஷக்கணக்கான மக்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்து விட்டார்கள். பலர் புல், பூண்டுகள், மரப்பட்டை இவை மட்டுமின்றிக் களி மண்ணையும் தின்று காலங் கழிப்பதாக அந்நிய பஞ்ச நிவாரணக் கமிட்டியார் அறிவிக்கின்றனர்.

* * * *

**ஏகாதிபத்திய மகாநாட்டிலிருந்து அயர்லாந்து விலகியதேன்?**

லண்டனில் நடைபெற்ற ஏகாதிபத்திய மகாநாட்டில் அயர்லாந்து கலந்துகொள்ள மறுத்துவிட்டது முற்றிலும் நியாயமென தேவலீரா ஐரிஷ் பார்லிமெண்டில் வற்புறுத்திப் பேசியிருக்கிறார். அவர் பேசியதாவது:—1933-ம் வருஷத்தில் ஒட்டாவாவில் நாம் கேவலமாக நடத்தப்பட்டோம். நாம் நமது வார்த்தைப்படி நடப்பவர்களல்லவெனக் கருதும் முறையில் அச்சமயம் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் நடந்து கொண்டனர். மீண்டும் அத்தகைய நிலைமைக்கு இடங் கொடுக்க நாம் விரும்பவில்லை. அப்பொழுது ஐரிஷ் பிரதிநிதிகள் ஒட்டாவாவுக்குச் சென்று கொண்டிருக்கையில், பிரிட்டிஷ் சர்க்கார் அயர்லாந்திலிருந்து ஏற்றுமதியான விளைபொருள்கள் மீது விசேஷ வரிகள் விதித்தனர். ஐரிஷ் பிரதிநிதிகள் கனடா சர்க்காரின் விருந்தாளிகளாக வில்லாமலிருந்திருந்தால் உடனே ஒட்டாவாவிலிருந்து தங்கள் சொந்தத் தேசத்திற்குத் திரும்பியிருப்பார்கள். அயர்லாந்து சிரத்தை கொண்டிருக்கும் பல விஷயங்களை ஏகாதிபத்திய மகாநாடு ஆராய்ந்து வருவது உண்மையே. ஆனால் உள்நாட்டில் நாம் கவனிக்கவேண்டிய, அவற்றைவிடப் பல முக்கியமான விஷயங்களிருக்கின்றன. மூலாதாரமாயுள்ள பிரச்னைகள் தீரும்வரை உண்மையான ஒத்துழைப்பு ஏற்பட இடமில்லை.

* * * *

**பிரதம மந்திரியின் ராஜிநாமா**

பிரிட்டிஷ் பிரதம மந்திரியான மிஸ்டர் பால்ட்வின் இவ்வாரக்கடைசியில் தமது பதவியை ராஜிநாமாச் செய்வாரென்று தெரிகிறது. மிஸ்டர் நெவில் சேம்பர்லேன் பிரதம மந்திரியாவாரென்று கூறப்படுகிறது. புதிய மந்திரி சபை அமைப்பதில் அனாவசியமான தாமதம் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். மிஸ்டர் பால்ட்வினுக்கு "ஏர்ல்" என்ற பட்டமளிக்கப்படும். அவரது குமாரர் இனி "வைகவுன்ட்" பால்ட்வின் என்று அழைக்கப்படுவார்.

* * * *

**"ஆயுத ஸ்வீகரணம் உலக சமாதானத்திற்குப் பாதுகாப்பு"**

மகுடாபிஷேகத்தை முன்னிட்டு இங்கிலாந்துக்குச் சென்றுள்ள அமெரிக்கப் பிரதிநிதியான மிஸ்டர் ஜேம்ஸ் ஜெரார்டுக்கு லண்டனில் ஒரு விருந்து நடத்தப்பட்டது. அப்பொழுது அவர் பேசியதாவது:—

"நீங்கள் வேண்டா வெறுப்பாக ஆனால் உறுதியுடன் உங்கள் யுத்த தளவாடங்களைப் பெருக்கி வருகிறீர்கள். ஏராளமான ஆயுதங்களுடன் கூடிய பிரிட்டன் உலக சமாதானத்துக்குச் சிறந்த பாதுகாப்பாயிருப்பது திண்ணம். யுத்தமேற்படுவதையும் நேச உடன்படிக்கைகள் செய்து கொள்வதையும் அமெரிக்கா அடியோடு எதிர்க்கிறது. குழப்பமுற்ற ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடவும் நாங்கள் விரும்பவில்லை. எங்கள் நாடும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் பரஸ்பர நம்பிக்கையும், ஒரு பொதுவான சமாதான ஆவலும் கொண்டு நெருங்கிய சம்பந்தமுள்ளவையாக இருந்து வருகின்றன. பாஸிஸ்ட் போதுடைமை இயக்கங்கள் தலையெடுத்திருக்கும் இச்சமயத்தில் பிரிட்டன், பிரான்ஸ், யுனைடட் ஸ்டேட்ஸ் இம்மூன்று ஜனநாயக தேசங்களாலேயே உலகிற்கு க்ஷேமம்


## நரம்புகளுக்கு உறுதி : தசைகளுக்கு பலம்

இவையிரண்டும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. இவை குறைந்த அளவில் இவற்றை மீண்டும் பெறுவதற்கு "ஜீவாம்ருதம்" உபயோகிக்கும் சாதகமானது "ஜீவாம்ருதம்" நரம்புகளுக்கு உறுதியையும் தசைகளுக்கு பலமும் சக்தியும் பெருகச் செய்பவை. "ஜீவாம்ருத" உபயோகம் வாழ்க்கையை இடைமுறச் செய்யும்.



நரம்புகளின் உறுதிக்கும் தசைகளின் பலத்திற்கும்

**ஜீவாம்ருதம்**

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

ஆயுர்வேதாஸ்ரமம் 1898-ல் ஸ்தாபிதம் மதராஸ்.

சனமுன்றென நாமனைவரும் எண்ணுகின்றோம்."

* * * *

ஸ்பெயின் யுத்தம்

மாட்ரிட்மீது கடுமையான பீரங்கிப் பிரயோகம் நடப்பதைத் தவிர்த்து யுத்த முனைகளில் யாதொரு விசேஷமும் நடைபெறவில்லை.

வால்டர் கினிஸ் (24 வயது) கந்தர் ஷால்ஸி பாலாங் (22 வயது) என்ற இரு ஜெர்மன் விமானிகள் கலகக்கோஷ்டிக்கு உதவி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். தாங்கள் ஜெர்மன் ஆகாயப்படையைச் சேர்ந்த அதிகாரிகளாயிருந்ததாகவும் தங்கள் பதவிகளை ராஜினுமாச் செய்துவிட்டு ஸ்பானியக் கலகக்கோஷ்டியில் தாங்களாகச் சேர்ந்ததாகவும் அவ்விரு எதிரிகளும் கோர்ட்டில் தெரிவித்தார்கள்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இவ்விரு ஜெர்மன் விமானிகளைச் சுட்டுக் கொல்ல வேண்டாமென ஜெர்மனியிலிருந்து பில்பாவிலுள்ள அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மன் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒருவர், "சர்க்கார் அங்ஙனம் செய்வது வெறும் பைத்தியக்காரத் தனமேயாகுமென்றும், அவ்விதம் செய்தால் பிறகு அவர்களைப் பழிக்குப்பழி வாங்க அவ்விமானிகளின் தோழர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வர்" எனக் கூறியிருக்கிறார்.

ஜெர்மன் விமானிகளின் மரண தண்டனை நிறைவேற்றப்படுமாயின் கலகக் கோஷ்டியின் வசமுள்ள எல்லாக் கைதிகளும் கொல்லப்படுவரென ஜெனரல் பிராங்கோ ஸலமான்காவிலிருந்து ரேடியோ மூலம் விளம்பரப் படுத்தியிருக்கிறார்.

ஜெர்மன் விமானிகளை மன்னித்துவிடுமாறு உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பல விண்ணப்பங்கள் சர்க்காருக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றில் பெர்லினிலுள்ள கிலீன் ஸ்தானீகரின் வேண்டுகோளும் ஒன்று. அதற்குச் சர்க்கார் தலைவர் பின்வருமாறு பதிலளித்திருக்கிறார்:—

ஜீவகாருண்ய நோக்கத்துடனேயே தாங்கள் இந்த வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்களென்பதை நான் அறிவேன். ஆனால் ஜெர்மன் விமானிகள் கூர்னிகா நகர்மீது குண்டுகளைப் பொழிந்து 2000 மக்களைக் கொன்றபொழுதும், துராங்கோமீது குண்டுகளை வீசி 600 பேரைக் கொன்றபொழுதும் தாங்கள் வாளாவிருந்ததுபற்றி நாங்கள் ஆச்சரியமடைந்ததை நான் எடுத்துக் காட்டாதிருப்பதற்கில்லை. அந்நிய விமானிகள் திரும்ப அழைக்கப்பட்டுவிட்டால் இத்தகைய கொடிய குற்றங்களுக்கு இடமிராது. தங்கள் வேண்டுகோளை எனது சர்க்கார் முன் சமர்ப்பிக்கிறேன். அவர்கள் செய்யும் முடிவு பெரும்பாலும் இனி அந்நிய விமானிகள் நடந்துகொள்ளும் வகையைப் பொறுத்ததாயிருக்கும்"

கடைசியாகக் கிடைத்த செய்தியிலிருந்து மற்றொரு ஜெர்மன் விமானி கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஸ்பெயினில் யுத்தத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென பிரிட்டன் விடுத்த யோசனைக்கு பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம் முதலிய நாடுகள் ஆதரவளித்த போதிலும் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் அந்த யோசனையை அடியோடு நிராகரித்து விட்டார்கள். இதைக்குறித்து ஸலமான்காவிலுள்ள கலக அதிகாரிகள் ஒரு அறிக்கை விடுத்திருக்கின்றனர். "எதிரிகள் எந்நிபந்தனையுமின்றிச் சரணடைய வேண்டும். இல்லையேல் சிறிதும் ஈவு இரக்கமற்ற முறையில் மேற்கொண்டு யுத்தம் நடத்தியேதீருவோம்" என்பதுதான் அவ்வறிக்கையின் சாரம்.

* * * *

## ஜான் டி. ராக்பெல்லர் (ஸீனியர்) மரணம்

### உலகில் மிகப் பெரிய நன்கொடையாளர்

அமெரிக்காவில் ப்ளோரிடா மாகாணத்திலுள்ள டேடோனுபீச் என்னுமிடத்தில் ஜான் டேவிட்ஸன ராக்பெல்லர் ஸீனியர் சென்ற 23-ந்தேதி தமது 97-வது வயதில் மரணமடைந்தார்.

ராக்பெல்லர் 1839-ம் வருஷம் நியூயார்க் மாகாணத்திலுள்ள ரிச்போர்டில் பிறந்தார். 1855-ம் ஆண்டில் அவர் க்ளீவ்லண்ட் என்னுமிடத்தில் ஒரு குமாஸ்தாவாக வேலையிலமர்ந்தார். பின் கமிஷன் வர்த்தகம் நடத்தும் ஒரு கம்பெனியில் பங்காளியானார். 1870-ம் ஆண்டில் ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டபொழுது மேற்படி கமிஷன் நடத்தும் கம்பெனி இத்துடன் ஐக்கியமாகியது. வியாபாரத் துறையிலிருந்து 1895-ம் வருஷத்தில் விலகக் கொண்டபோதிலும் அவர் மேற்படி கம்பெனியின் தலைவராகவிருந்து வந்தார். 1911-ம் வருஷத்தில் அவர் அந்தப் பதவியிலிருந்தும் விலகிக் கொண்டார்.

ஒரு சமயம் உலகிலேயே அவரைவிடப் பணக்காரர்



ஜான் டேவிட்ஸன் ராகபெல்லர்.

இல்லையென்று கருதப்பட்டது. அப்பொழுது அவர் சொத்து 20 கோடியிலிருந்து 48 கோடி பவுன் இருக்குமென்று கூறப்பட்டது. தர்மத்திற்காக அவர் 12 கோடி பவுன் செலவழித்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அவர் எல்லாத் துறைகளிலும் தர்மங்களைச் செய்து வந்தார். சிகாகோ சர்வகலாசாலையை அவர் ஸ்தாபித்தார்.

நியூயார்க்கில் வைத்திய ஆராய்ச்சிக்காக ராக்பெல்லர் ஸ்தாபனத்தை ஸ்தாபித்து அதற்காக 2½ கோடி பவுன் கொடுத்தார். வைத்தியக்கல்வி, பொது சுகாதார முறைகள், மலேரியா, மஞ்சள் ஜ்வரம் முதலியவை சம்பந்தமாக இந்த ஸ்தாபனம் தீவிரமாக உழைத்து வருகிறது. இதில் பல தேச மாணவர்களும் உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்து வருகின்றனர்.

தமது மனைவியின் ஞாபகார்த்தமாக ஏழைத் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் அவர் பல தாமஸ்தாபனங்களை நிறுவியிருக்கிறார். இதல்லாமல் அவர் உதவியிருக்கும் தர்மஸ்தாபனங்கள் கணக்கற்றவை.

ஜான் டேவிட்ஸன் ராக்பெல்லருக்கு ஒரு குமாரனும் (1874-ல் பிறந்தவர்) குமாரியுமிருக்கின்றனர்.



கால் புண்கள், ரணங்கள்

இவற்றிற்கு மாய நிவர்த்தி

ஜாம்-பெக் அசங்கியத் தழும்புகளை உண்டாக்குவதில்லை

சிறிய சிராய்ப்பு அல்லது அதிர்ச்சி காரணமாக பெரிய ரணங்கள் ஏற்படலாம். இவை பீடித்தவர்கள் வலியாலும், எரிச்சலாலும் கஷ்டப்படுகிறார்கள் இதற்கு நிவர்த்தி ஜாம்-பெக் பெரூகை உபயோகிப்பதுதான். டாக்டர்கள் சிபார்சு செய்வது. ஜாம்-பெக்கிலுள்ள சுத்த மூலிகைச் சத்துக்கள் தசையினுள் ஊடுருவிச் சென்று விஷத்தையும், ரணத்தையும் ஆற்றுகிறது. ஜாம்-பெக் வலியைத் தணித்து, எரிச்சலையடக்கி, சீழை வெளிப்படுத்துகிறது. தழும்பின்றி ரணமாற்றுவது. நமைச்சல், சொறி, சிரங்கு, வேர்க்குரு முதலியவற்றை ஜாம்-பெக் அற்புதமாக நிவர்த்திக்கிறது எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஜாம்-பெக் பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க்டவுன். மதராஸ்.




மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்

Zam-Buk



மத்திய மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் கூடி மந்திரிகள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியபோது எடுத்த படம்.

## நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி



மன்னர்பிரானும் காலனி மந்திரிகளும் மகுடாபிஷேகத்திற்குப் பிறகு எடுத்த படம்.



பெர்லினில் மே தினக் கொண்டாட்டத்தின்போது ஹெர் ஹிட்லர் ஒரு பிரும்மாண்டமான கூட்டத்தில் பேசினார்.

# கரும்பூதம்

அல்லது

## கள்வனைக் காதலித்த காரிகை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

கலவென்று சிரித்தவண்ணம் "பிரபுவே! சஞ்சலப்பட வேண்டாம். படக்காட்சிக்குச் சென்றிருந்த நளினம் தான் திரும்பி வந்திருக்கிருள்! நான் போய் அவளை அழைத்து வருகின்றேன்" என்று கூறிவிட்டு அறையிலிருந்து வெளியேகிஞர்.

சில விஞடிகளுக்குப் பின் சுதர்சனம் பிரபுவும் செல்வி நளினமும் அறையினுள் நுழைந்தார்கள். அவர்களெல்லோரும் மேஜையைச் சுற்றியுள்ள நாற்காலிகளில் மறுபடியும் அமர்ந்தபின் சுதர்சனம் பிரபு கரும்பூதத்தைப் பிடிப்பதற்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகளை நளினத்திற்கு விளக்கிக்கூறிஞர். அவைகளைச் சாந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்த நளினம் "அப்படியாஞல் கரும்பூதம் உங்களிடம் சிக்கிவிடுவானென்று உறுதி செய்து கொண்டு விட்டீர்களா?" என்று கேட்கவும் "நிச்சயமாக! ஊம், இன்னும் என்ன சந்தேகம்? அவன் வாய்ப் பேச்சுக்காரஞக இல்லாமல் இன்றிரவு மாளிகையில் நுழைவாஞஞல் நாளைக் காலை அவனை நீ கட்டாயமாகச் சிறைச்சாலையில் காணலாம்" என்ருர் சுதர்சனம் பிரபு.

பிறகு அவர்கள் நால்வரும் கரும்பூதத்தையும், அவனுடைய நடவடிக்கைகளையும் பற்றி நீண்ட நேரம் வரையில் சம்பாஷணை செய்து கொண்டிருந்தார்கள். மணியும் சரியாகப் பதிஞென்றடித்தது. செல்வி நளினம் 'தனக்கு' உறக்கம் வருவதாகச் சொல்லிவிட்டு அறையினின்று நீங்கிஞள். மற்ற மூவரும், மேஜையின் மீதிருந்த இயந்திரத்தைக் கூர்ந்து கவனித்தவண்ணமாக இருந்தனர்.

பத்துநிமிடங்கள் கழிந்தன. சுதர்சனம் பிரபு தமது நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்தார். அதேபோல் மற்ற இருவரும் பரபரப்போடு எழுந்தார்கள். மூவரும் சில விஞடிகள் வரையில் ஒருவர் முகத்தைத் தொருவர் பார்த்துக்கொண்டார்கள். பிறகு மூவருமாகச்சேர்ந்து மேஜையின் மீதிருந்த இயந்திரத்தை ஏககாலத்தில் நோக்கிஞர்கள். அவர்களுடைய முகங்களில் அச்சமும் ஆச்சர்யமும் கலந்த குறிகள் காணப்பட்டன.

"நண்பரே! கரும்பூதம் உயிர் போவதாஞலும் சரி, சொன்னசொல் தவருமல் நடப்பவனென்று நான் முன்னரே சொல்லவில்லையா?" என்ருர் துளஸிதாஸ்.

"ஆம்! அவன் எமனுக்கும் அஞ்சுகின்றவனல்ல!" என்று ஆமோதித்தார் பாஸ்கரம் பிரபு.

"சரி! அவனைப்பற்றிப் புகழ்ந்துபேசுவதைத் தயவுசெய்து சில நிமிடங்கள்வரையில்ஒத்திவைத்துவிட்டு இயந்திரத்தைக் கவனியுங்கள். கடைசிவரிசையிலிருக்கும் சிவப்பு பல்பு அணைந்துவிட்டதல்லவா? இப்பொழுது அவன் தோட்டப்புறக் கதவைத் தீண்டிக்கொண்டு நிற்கிருன்; ஆ, இதோ பச்சை பல்புகள் அணைகின்றன!" என்ருர் சுதர்சனம் பிரபு.

"அதாவது, இப்பொழுது அவன் மாளிகையினுள் பிரவேசித்துவிட்டானென்று சொல்லுகின்றீர்கள்?" என்று கேட்டார் பாஸ்கரம் பிரபு. அவர் வாய் மூடுவதற்கு முன்னர் இரண்டாவது வரிசையிலிருந்த:மஞ்சள் நிற பல்புகள் ஒவ்வொன்ருக அணைந்துகொண்டு வந்தன.

"நண்பர்களே! இப்பொழுது கரும்பூதம் தோட்டக் கதவைத் திறந்துகொண்டு தாழ்வாரத்தின் வழியாகச் சென்று சமையலறையில் நுழைந்திருக்கிருன். இதோ வெள்ளை பல்புகள் ஒவ்வொன்ருய் அணைந்துகொண்டு வருவதைக் கவனியுங்கள். தற்சமயம் அவன் சமையலறையின் பின்புறமாக இருக்கும் குறுகிய தாழ்வாரத்தில் செல்லுகின்ருன்!" எனறு இயந்திரத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே கூறிஞர் சுதர்சனம் பிரபு.

"அவனுக்கு அங்கு என்ன வேலை?" என்று கேட்டார் துளஸிதாஸ். "புத்தக அறைக்குச் செல்லும் வழி அதுதான்!" என்று சுதர்சனம் பிரபு பதிலளித்துக் கொண்டிருக்கையில் சாம்பல் நிறமான பல்புகள் அணையவாரம்பித்தன.

"இவை எந்த இடத்துடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன?" என்று ஊக்கத்துடன் விஞவிஞர் பாஸ்கரம் பிரபு.

"அதாவது, இப்பொழுது அவன் மாடிப்படிகளின்மீது ஏறிக்கொண்டிருக்கின்ருன். ஆ, இதோ பார்த்தீர்களா? ஊதா நிறமான பெரிய பல்பு அணைந்துவிட்டதல்லவா? இது மாடியிலிருக்கும் எனது பொக்கிஷ அறைக்குள் அவன் நுழைந்துவிட்டானென்பகூடிய பித்தானை அழுத்தப்படுவதைக் குறிக்கின்றது. நான் போகின்றேன்!" என்று கூறிக் "ஆ" என்ற எழுத்துடன் கொண்டே மேஜை வலதுபுற


பூரா திருப்தியும், ஜயமும் உத்திரவாதமும் செய்யப்படும். விளம்பரப்படி இல்லாவிட்டால் விலை வாபஸ் கொடுக்கப்படும்.

## மாந்திரீக மோதிரம்

இந்த அபூர்வமான மெஸ்மரிஸ் மோதிரம் உயர்ந்த சாமான்களால், ஆச்சர்யப்படத்தக்க மின்சார காந்த சக்திகள் உடையதாய் தயார்செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மோதிரம் நடந்த காலம், நிகழ்காலம், நடக்கும் காலம் முதலியவைகளை ஒரே நொடியில், மாயா சக்தியால் அறிந்து கொள்ளும் திறமை



யுடையது. மேலும், இறந்தவர்களுடன் அறிமுகப்படுத்துதல், ஆயிரம்மைல்களுக்கு அப்பால் இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுதல், புதையல்களைத்தெரிந்து கொள்ளுதல், நோயாளிகளின் குணத்தை அறிதல், காணமற்போன சாமான்களைக் கண்டுபிடித்தல், முத்திரை போட்ட கவரில் இருக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ளுதல், இரகசியமான கேள்விகளுக்குப் பதில் அறிந்து கொள்ளுதல், இம்மாதிரி ஆயிரக்கணக்கான அபூர்வ விஷயங்களை இந்த மோதிரத்திஞல், ஒரே விஞடியில் பெற்றுவிடலாம். உபயோகிக்கும் முறை மோதிரத்துடன் அனுப்பப்படும்.

விலை ரூ. 2. தபால் கூலி அணு 8.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் கீழ்க்கண்ட விலாசத்துக்குச் செய்யவேண்டும்.

SHARMA TRADING Co., No. 2, ALIGARH CITY.



## வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி, ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி. டி. மதராஸ்.



## பற்களின் இயற்கை அழகைப் பாதுகாருங்கள்

மலைக்க வேண்டாம்; ஒன்றும் பிரமாதமில்லை; பற்களை அழகாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பது நீங்கள் எண்ணுவதுபோல் அவ்வளவு சிரமமானதல்ல. சுத்தமாக வைத்திருந்தால் போதும். சுத்தம்தான் அழகு; அழகுதான் ஆரோக்கியம். எதையோ உபயோகித்துப் பற்களைச் சுத்தி செய்வதில் பயனில்லை "நீம்டூத் பேஸ்ட்" ஒன்றுதான் உண்மையில் சுத்தி செய்வது வேப்பஞ் சத்து இதில் தான் நிறைந்திருக்கிறது; மற்ற சுத்திகரிப்புச் சத்துக்களுமிருக்கின்றன. நீங்கள் பிரஷ் செய்யும்பொழுதே இந்தச் சத்துக்கள் நுரையாகிஉங்கள் பல் எனுமலுக்குப் பிரகாசமளித்து, பல்லிடுக்குகளில் இருக்கக் கூடிய கிருமிகளையும் அழிக்கும உங்கள் பற்கள் அழகாகவும், ஈறுகள் கெட்டியாகவுமிருக்க வேண்டுமாஞல் உடனே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிக்க ஆரம்பியுங்கள்.




NTP 3

மாக இருந்த நான்கு பித்தான்களுள் இரண்டாவது பித்தானைப் பலமாக அழுத்தினர் சுதர்சனம் பிரபு. அதே சமயம் மாடியிலிருந்து தடாலென்று ஒரு சப்தம் கிளம்பியது.

"நண்பர்களே! இப்பொழுது கேட்ட சப்தத்தைக் கவனித்தீர்களா? உங்களுடைய கரும்பூதம் மாடியறையிலகப்பட்டுக் கொண்டுவிட்டான். இனி அவனால் வெளியேற முடியாது. அந்த அறையின் கதவைத் தீண்டவும் அவனால் முடியாது. ஏனென்றால் கதவின் உட்புறத்தில் அமைத்திருக்கும் இரும்புத் தகடுகளில் நான் மின்சார சக்தியைப் பிரயோகிக்கப் போகின்றேன்!" என்று கூறி மேஜை வலதுபுறமாகவுள்ள நான்காவது பல்பை அழுத்திவிட்டு சட்டைப்பையிலிருந்து மூன்று கைத் துப்பாக்கிகளை யெடுத்தார் சுதர்சனம் பிரபு.

"சபாஷ்! மிஸ்டர் சுதர்சனம்! இனி உங்களைப் பாராட்ட வேண்டியதுதான்!" என்றார் பாஸ்கரம் பிரபு.

"என்னிடமே கைவரிசைகளைக் காட்டுவதென்றால் முடியுமா? ஆயிரம் கரும்பூதங்கள் சேர்ந்தாற்போல் வந்தாலும் நானா பயப்படுகின்றவன்?" சபாஷ்! சிக்கினன்! சிக்கினன்!" என்று ஆனந்தக் கூச்சலிட்டார் சுதர்சனம் பிரபு. அடுத்த வினாடியில் மேஜையின் வலதுபுறமாக இருந்த நான்கு பித்தான்களுள் "அ" என்ற பித்தானை அவருடைய விரல்கள் அழுத்தின.

"ஆளுக்கு ஒரு துப்பாக்கியை யெடுத்துக்கொண்டு வாருங்கள்! மேல் மாடிக்குச் சென்று பார்க்கலாம்!" என்றார் சுதர்சனர்.

"வேண்டாம், என்னிடம் துப்பாக்கி யிருக்கின்றது! மிஸ்டர் துளஸிதாஸ், உங்களுக்குத் தேவையானால் ஒன்று எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கூறி தனது கையிலிருந்த துப்பாக்கியைக் காட்டினர் பாஸ்கரம் பிரபு. துளஸிதாஸ் ஒரு துப்பாக்கியை யெடுத்துக் கொள்ளவே சுதர்சனம் பிரபு மற்றொரு துப்பாக்கியை யெடுத்துக் கொண்டு முன்னால் நடந்தார். மற்ற இருவரும் பின்னால் சென்றார்கள்.

சில வினாடிகளுக்குப் பின் அதே அறையில் ஒருவர் மெல்லச் சிரிக்கும் சப்தம் கேட்டது. நேயர்களே! அது யாரென்று நினைக்கின்றீர்கள்? அது தான் நமது கரும்பூதம்! சுதர்சனம் பிரபுவும், மற்றவர்களும் அறையை விட்டு நீங்கியவுடன் சோபாவினடியில் மறைந்து கொண்டிருந்த கரும்பூதம் எழுந்து வந்தான். இந்திர பவனத்தின் எல்லா இடங்களிலும் மின்சார விசைகள் அமைக்கப்பட்டிருக்கையில் அவன் பிரபுவின் கண்களிற் புலப்படாமல் எப்படி அறையினுள் பிரவேசித்தானென்று நேயர்கள் ஆச்சர்யப்படுவார்கள். ஆகையால் அதைப்பற்றி முதலில் கூறிவிட்டுக் கதையை மேலே தொடருவோம்.

சுதர்சனம் பிரபுவின் வீட்டில் களவாட வேண்டுமென்று மர்மப்பெண் டெலிபோன்மூலமாகத் தெரிவித்ததையும், அன்றிரவு நமது கரும்பூதம் நீண்ட நேரம்வரையில் கண் விழித்திருந்து பிரபுவின் மாளிகையில் எப்படி நுழைவதென்பதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்ததையும் ஆனால் மார்க்கமொன்றும் புலப்படவில்லையென்பதையும் ஏற்கனவே கூறியிருக்கின்றோம். இந்திர பவனத்தைக் களவாட வேண்டிய வியாழக்கிழமையன்றிரவு சுமார் ஏழு மணிக்கு பிரபுவின் மாளிகையில் என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்பதைப் பார்த்தறிந்துகொள்ளுவதற்காக அதனுடைய தோட்டத்திற்கு வந்து சேர்ந்தான் கரும்பூதம். அதே சமயத்தில் சுதர்சனம் பிரபுவும் செல்வி நளினமும் மாளிகையிலிருந்து தோட்டத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய சம்பாஷணையிலிருந்து மாளிகையில் ஒருவருமில்லையென்பதையும், பிரபு ஆரியபவன் ஓட்டலுக்குச் செல்லுகின்றாரென்பதையும், அவர் திரும்புவதற்கு சுமார் ஒரு மணி நேரமாவது ஆகுமென்பதையும் நமது கரும்பூதம் அறிந்துகொண்டான். இதைத்தவிர, பிரபுவின் பொக்கிஷமும், தஸ்தவேஜுகளும் எந்தெந்த அறைகளிலிருக்கின்றனவென்னும் விஷயமும், அவைகளில் கள்வர்கள் நுழையாமலிருப்பதற்காக எத்தகைய விசைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்னும் இரகசியமும், அவனுக்குத் தெரியலாயிற்று.

பிரபுவும், செல்வி நளினமும் தோட்டத்தைவிட்டு வெளியேறியதும் நமது கரும்பூதம் இந்திரபவனத்திற்குள் சொந்த மாளிகையில் பிரவேசிப்பதைப் போல் அச்சமில்லாமல் நுழைந்தான். சுதர்சனம் பிரபுவின் தந்தையும், காலஞ்சென்றவருமான கருணாகாரின் மரண சாஸனத்தைப் பார்வையிட வேண்டுமென்ற ஆவல்




ரொம்ப பசிக்கிறது—ஆனால் ஆகாரத்தில் விருப்பமேயில்லை




அலெம்பிக் த்ராக்ஷாஸவ தேகத்திற்கே புத்துயிரளித்து புதிய தேக சக்தியையும் உண்டாக்குகிறது. மலச்சிக்கலை நிவர்த்தித்து நல்ல பசியை உண்டாக்கி ஜீரண சக்தியுமளித்து, இழந்த தேக ஆரோக்கியத்தை மீண்டும் தருகிறது. சோர்ந்து போன ஜீவாணுக்களைப் புதுப்பிக்கிறது. வியாதியில் பட்ட உடம்பு தேற ஒப்பற்ற ஔஷதம்.

சென்னை பிரதான ஏஜண்டுகள்:
மெஸார்ஸ் சிவராம் & ஸன்ஸ்,
144 பிராட்வே, மதராஸ்.

அலெம்பிக் த்ராக்ஷாஸவ

பசியை மீண்டுமளித்து—ஜீர்ணக் கோளாறுகளை நிவர்த்திக்கிறது.

அலெம்பிக் கெமிகல்ஸ்: பம்பாய். பரோடா. மதராஸ். கல்கத்தா

...னுக்கு வெகுகாலமாக உண்டு. ஏனெனில், கருணாகரரையும், அவருடைய உயிலையும்பற்றி ஊரில் பலவிதமான வதந்திகள் சில மாதங்களுக்குமுன்பு உலவிக்கொண்டிருந்தன. கருணாகரருக்கு ஆண்மகவுகிடையாதென்றும், நளினத்தின் ஜனனத்திற்கு முன்பாக அவரால் ஸ்வீகாரம் செய்துகொள்ளப்பட்டவரே சுதர்சனரென்றும் சிலர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் கருணாகருடைய சொத்துக்களெல்லாம் நளினத்தின் பெயருக்கு எழுதிவைக்கப்பட்டிருப்பதாயும், அவைகளை சுதர்சனம் பிரபு கள்ளத்தனமாகக் கவர்ந்து கொண்டிருப்பதாயும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், உண்மை ஒருவருக்கும் தெரியாது.

நமது கரும்பூதம் சுதர்சனம் பிரபுவின் தஸ்தவேஜுகள் வைக்கப்பட்டிருக்கும் புத்தக அறையினுள் நுழைந்து அங்கிருந்த இரும்புப் பெட்டியைத் தனது சட்டைப் பையிலிருந்த சாவிகளொன்றினால் திறந்தான். இரும்புப் பெட்டியினுள் வரிசை வரிசையாக அனேகம் தஸ்தவேஜுகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவைகளை நமது கரும்பூதம் ஒவ்வொன்றாகப் படித்துப்பார்த்தான். கடைசியாக கருணாகரரின் மரணசாஸனம் அவனுடைய கரத்தில் சிக்கியது. அதைப் படித்துப்பார்த்தபின் நமது கரும்பூதம் அந்த உயிலையும் மற்றும் சில கடிதங்களையும் எடுத்துக்கொண்டுசுதர்சனம் பிரபுவின் பிரத்தியேக அறையையடைந்தான். அப்பொழுது சரியாக ஏழரை மணியாயிற்று. இன்னும் அரை மணி நேரத்திற்குள் பிரபு வந்துவிடுவாராதலின் அதற்குள் மறைந்துகொண்டிருப்பதற்குத் தகுதியான இடமொன்றைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று கரும்பூதம் தீர்மானித்தான். பிரபுவின் அறையில் ஓர் பெரிய நிலைக்கண்ணாடி மாட்டப்பட்டிருந்தது. அதற்கு முன்பாக நின்றுகொண்டு கையுடன் எடுத்துவந்திருந்த சிறிய தோற்பையை அவன் திறந்தான். அந்தப் பையில் கரும்பூதத்தின் வேடத்திற்குத் தேவையான உடைகளும் முகமூடியுமிருந்தன. நமது ஆசிரியன் அவைகளையெடுத்து அணிந்துகொண்டு சில நிமிடங்களுக்குள் கரும்பூதமாக மாறினான். மன்மதனைப் பழிக்கும் வசீகரத்தோற்ற முடைய அவன் முகமும் கருப்பு முகமூடியில் மறைந்தது.

கரும்பூதம் தனது உடைகளைச் சரிசெய்துகொண்டு பழய உடைகளைத் தோற்பையில் வைத்து மூடியதும் அறையின் வெளியில் ஆள் வரும் அரவம் கேட்டது. அபாரமான சாமர்த்தியமும், ... நமது கரும்பூதம் அறையிலிருந்த சோபாவினடியில் சட்டென்று மறைந்துகொண்டான். அடுத்த வினாடியில் சுதர்சனம் பிரபு அறையில் நுழைந்து மேஜையின் மீதிருந்த மின்சார இயந்திரத்தைப் பரிசிலனை செய்துகொண்டிருந்தார். பிறகு பாஸ்கரம் பிரபு துளஸிதாஸுடன் அங்கு வந்ததையும், அவர்கள் மூவருமாகச் சேர்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்ததையும், நமது வாசக நேயர்கள் அறிவார்கள். அவர்கள் மாடியறையில் கரும்பூதம் சிக்கிக்கொண்டு விட்டானென்று தீர்மானித்து அறையிலிருந்து நீங்கியதும் சோபாவினடியில் மறைந்திருந்த நமது கரும்பூதம் வெளியில் வந்தான். அப்பொழுது அவனுடைய மனதில் பலவகையான எண்ணங்கள் தோன்றலாயின. "நான் இங்கிருக்கையில் மாடியறையில் அகப்பட்டுக்கொண்டிருப்பது யார்? ஒருக்கால் அது டெலிபோன் பெண்ணாக இருக்கக் கூடுமோ? ஆம், இருந்தாலும் இருக்கலாம். அவள் எனக்கு உதவி செய்வதற்காக வந்து மாடியறையில் சிக்கிக்கொண்டிருக்கலாம். எதற்கும் நாம் அங்கு போய்ப் பார்ப்பதே உசிதமானது!" என்று தனக்குள் முடிவு செய்துகொண்டு அறையை விட்டு வெளிப்பட்டான் நம்து கரும்பூதம்.

இதற்கிடையில் சுதர்சனம் பிரபுவும், பாஸ்கரர், துளசிதாஸ் ஆகிய இருவரும் மாடியையடைந்தார்கள். சுதர்சனம் பிரபு சுவரிலிருந்த ஒரு விசையைத் திருப்பி விளக்குகளையெல்லாம் பற்றவைத்துவிட்டு கரும்பூதம் அடைபட்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த அறையை மெள்ளத் திறந்தார். அதே வினாடியில் அறையின் உட்புறத்திலிருந்து மூன்று குண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சீறிப் பாய்ந்தன. ஆம் மூன்றும் குறிதவறிவிட்டமையால் சுதர்சனம் பிரபு தெய்வாதீனமாகதப்பிப்பிழைத்தார். இதற்குள் நமது துப்பறி நிபுணர் அறைக்குள் நான்கைந்துமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். ஐந்துகுண்டுகளில் ஒன்று அறைக்குள்ளிருந்த ஒருவனின் வலது காலைத் தாக்கியது. அம்மனிதன் "ஐயோ! அப்பாடா!!" என்று அலறிக்கொண்டே அடியற்ற மரம்போல் தரையில் விழுந்தான். அறையில் குண்டுகளினால் உண்டான புகை நிரம்பியிருந்ததால் காயமடைந்த மனிதரின் உருவம் ஒருவருக்கும் தென்படவில்லை.

"நண்பர்களே! கரும்பூதம் ஆயுதமெடுத்து வருவதில்லையென்று நீங்கள் சொல்லியதை நான் தெய்வாதீனமாக நம்பாமலிருந்தேன். நம்பியிருந்தால் நானே அல்லது நீங்களோ இங்கு துப்பாக்கி சகிதமாக வந்திருக்கப் போவதில்லை. உயிருடன் தப்பியிருக்கப் போவதுமில்லை!" என்றார் சுதர்சனம் பிரபு.

பாஸ்கரம் பிரபுவும், துளஸிதாஸும் பதில் பேசாமலிருந்தார்கள். இதற்கிடையில் அறையில் கிடந்த மனிதன் வலி பொறுக்கமாட்டாமல் புலம்பிக்கொண்டிருந்தான். சில நிமிடங்களுக்குப்பின் புகையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறியதும் அவர்கள் மூவரும் உள் நுழைந்து காயமடைந்திருந்த மனிதனைக் கூர்ந்து கவனித்தார்கள்.

"கரும்பூதம்! இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?" என்று ஏளனமாக வினவினார் சுதர்சனம் பிரபு. கீழே கிடந்தவன் அவரைப் பரிதாபகரமான பார்வையுடன் நோக்கினான். நமது துப்பறி துளஸிதாஸ் அவனை உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் பேராச்சர்யமடைந்தவராய் "ஐயா! இவன் கரும்பூதமல்ல! இவனுடைய பெயர் கருப்பண்ணன். சென்ற வாரம்தான் சிறையிலிருந்து விடுதலை யடைந்தான்?" என்றார்.

இதைக் கேட்ட சுதர்சனம் பிரபு பிரமிப்படைந்தார். "என்ன இவன் கரும்பூதமல்லவா? உண்மையாகவா?" என்று அடுத்தாற்போல் வினவினார் பாஸ்கரம் பிரபு.

(தொடரும்)


## முத்துக்குளியல்

சில வருஷங்களுக்கு ஒரு முறை தென் சமுத்திரத்தில் முத்துக்குளித்து, சிப்பிகளை சிறு பொட்டணங்களாக்கி, ஒரே சராசரி விலையில் விற்பதுண்டு. அவற்றை வாங்கும் அதிர்ஷ்டமுள்ள சிலருக்கு மாத்திரமே முத்துக்கள் கிடைக்கின்றன.

அவ்வண்ணமே, காப்பிக்கொட்டைக்கு பச்சைச் சாயமேற்றி விற்கும் இக்காலத்தில், நீங்கள் கடையில் காப்பி வாங்கும் சமயத்தில் உங்கள் விதிப்படி நல்ல காப்பியோ அல்லது வெளிப்பகட்டான காசுக்கு உதவாத மட்டச் சரக்கோ கிடைக்கலாம். ஆனால் **ஸ்டேன்ஸ் கம்பெனி**யில் 3, 5, 7 பவுன் துணிப்பைகளில் பிடிக்கப்பட்டு முகவாயில் ஈய முத்திரை தரிக்கப்பட்ட அசல் நீலகிரிக் காப்பியை வாங்குவீர்களேயானால், உங்கள் பணத்துக்குத்தக்க பொருள் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் என்பதே கிடையாது; போட்டி சரக்குகளும் துணிப்பைகளில் விற்பனை செய்யப்படுவதால்,

**ஸ்டேன்ஸ்**

என்று கேட்கவும்.



### பயனற்றவை வேண்டாம்.

இந்த ஆயிலை உபயோகித்தால் தலை நரை ஏற்படாது; வெள்ளை மயிர் கறுமை பெறும். தவறினால் இரட்டிப்பு விலையைத் திருப்பிக் கொடுக்க உத்தரவாதம். பாதி நரைக்கு ரூ. 5; அதிக நரைக்கு ரூ. 9. BAL KALA STORES., P. O. Kansisimri, (Darbhanga.)

### கர்ப்பத்தைத் தடுக்க

"ரஹாத்" இணையற்ற சாதனம். 3 நாள் உபயோகித்தால் நிரந்தரமாக கர்ப்பம் ஏற்படாது. இதனால் தேகத்திற்கு எவ்வித பாதகமுமுண்டாகாது; மாதாந்திரப் போக்குக்கு குந்தகம் கிடையாது. உத்தரவாதத்துடன் ரூ. 5—8.

ராஜ்வடி: நின்றுபோன மாதவிடாயை உயிர்ப்பிக்கிறது.

Dr. S. H. KHAN, 6, S. Tapia Mansion, Erskin Road, Bombay, 3.

### வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம், திருத்தணி, S. இந்தியா.

### வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.

KAMALA WORKS (S M.)
Panchpota—Bengal, India.

சரித்திரப்பகுதி

# திருமுறை கண்ட சோழன்

(கௌரீ குமாரன்)

ஒரு நாட்டுப்புறத்துப் பிள்ளையார்கோயில் மிகச்சிறியது. அதை பூசித்துவந்த ஆதிசைவமறையோன் (குருக்கள்) ஒருசமயம் வேறோர் ஊருக்குப் போகநேர்ந்தது. அதனால் பள்ளியில் பயின்றுவந்த அவர் மகன், இளஞ்சிறுவன், பூஜை செய்ய கோயிலுக்குவந்தான். அன்போடு பிள்ளையாருக்குத் திருமஞ்சனம் ஆட்டுவித்து முறைப்படி பூஜை நடத்திவந்தான். நிவேதனம் செய்ய வேண்டிய காலம். படைக்க வேண்டிய அமுதைக் கடவுள் முன் வைத்து "எம்பெருமான் அமுதுசெய்யவேண்டும்" என்று வேண்டினான். பொல்லாப்பிள்ளையார் என்று வழங்கப்பெறும் கல்(லு)ப்பிள்ளையார் உண்கிறவர். பார்த்தான் பையன்.

"..........:ஏதேனுந் தவறிங்
குண்டோ?
வேழமுகனே யடியேனி
வேதித்திட்ட
பம்பமுத முண்ணாத
தென்னே?"

என்று கேட்டார். பிள்ளையார் பதில் பேசவும்இல்லை.

சிறுவன் மனம் வருந்தி 'தலைதனை மோதப்புகுந்தான்.' இனிப் பொறுத்தால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும் என்று எண்ணிய விநாயகக் கடவுள் அவனைத் தடுத்து, அவன் விரும்பியவாறே நிவேதிக்கப்பட்ட அமுதை உண்டார்.

இதற்குள்ளாக அவனுக்குப் பள்ளிக்கு ஏகும் காலம் கடந்துவிட்டது. காலையிலேயே பள்ளிக்கு வராத பிள்ளைகளைக் கோதண்டத்திற் கட்டி அடிப்பார் உபாத்தியாயர். ஆகவே பையன் நடுங்கி,

"எந்தையே! இனியடியேன்
பள்ளிக் கேகில்
எங்கள் தேசிகன்
அடிப்பான் ஆதலாலே
சந்தமுறை முதற் கலைகள்
நீயே யோதித் தால்
வேண்டும்"

என்று வேண்டிக்கொண்டான். பொல்லாப் பிள்ளையாரும் அங்ஙனமே இசைந்து பாடம் சொல்லிக் கொடுத்தார்.

ஊரெங்கும் இதே பேச்சு. இவ்விந்தைச் செய்தி அரசன் காதுக்கும் எட்டியது. அரசனும், தான் வெகு நாட்களாக வருந்தித் தேடியும் கிடைக்கப் பெறாமல் இருப்பதை தெய்வீக அருள்பெற்ற இச்சிறுவனால் அடையலாமோ என்றும் எண்ணினான். அதுதான் என்ன?

மன்னன் 'சோணாட்டின் திலகம் என விளங்கும்' திருவாரூர் தியாகேசர்பால் எல்லையில்லா அன்பு பூண்டவன். சிவபெருமானை வழிபடுவதையே கடமையாகக் கொண்டவன். சிவனடியார்களைப் பெரிதும் போற்றி வந்தான். அவர்களிற் சிலர் மூவர் என்று வழங்கப்பெறும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியவர்கள் அருளிச் செய்த பதிகங்களில் ஒன்றிரண்டு பாடுவதைக் கேட்டான். பதிகங்களின் பண்ணிலும் பொருளிலும் ஈடுபட்டுக்

"கையிரண்டும் உச்சிமேல்
ஏறக் கண்ணீர்
கரைந்தோட மெய்ம் முழு
தும் புறகம் போர்ப்ப
ஐயன் மலர்ப் பதம்
உளத்தே கொண்டு"

போற்றினான். கிடைத்தற்கரிய அப்பதிகங்கள் எல்லாவற்றையும் அடைய வேண்டும் என்று பலவிடங்களிலும் தேடினான். அகப்படாமையாலே மனம் வருந்திக்கொண்டிருக்கையில் தான் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி தெய்வீக அருள்பெற்று வாழ்வதை அறிந்தான். இவராலேயே தனது எண்ணம் நிறைவேறலாம் என்று எண்ணித் திருநாரையூரை அடைந்து நம்பியிடம் தன் குறையைத் தெரிவிக்க, அவரும் பிள்ளையார் அருள் கொண்டு அப் பதிகங்கள் பொறிக்கப்பட்டிருந்த ஏடுகள் தில்லைச் சிற்றம்பலத்தே எம்பெருமான் ஆநந்தத் தாண்டவம் ஆடும் பொன்னம்பலத்தின் மேல்புறமாக வைக்கப்பட்டிருந்தன என்பதை அறிந்து கூறினர். அதன்படி அவ்வேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு நம்பியாண்டார் நம்பியாலேயே திருமுறைகளாக வகுக்கப்பட்டன.

இங்ஙனமே கூறிச்செல்கின்றது உமாபதி சிவாசாரியார் எழுதியுள்ள திருமுறைகண்ட புராணம். இது நடந்ததாகக் கூறப்படுவதற்குச் சுமார் மூந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட நூல்.

நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறை வகுப்புச் செய்த மன்னவன் "அலகில் புகழ்பெரு இராசராச மன்னன் அபய குலசேகரன்" என்று குறிக்கப்பட்டுள்ளான். சரித்திர ஆராய்ச்சியால் அவன் தஞ்சையில் பெரிய கோயில் கட்டிய முதலாம் இராஜ ராஜனுடைய தமையனான ஆதித்தன் என்பது விளங்குகின்றது. அவனைப் பற்றி, இப்பொழுது ஐரோப்பாவிலே லீடன் பட்டினத்துக் கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கும் ஆனைமங்கலம் செப்பேடுகளில்

"இந்த இராஜேந்திரன் (சுந்தரசோழன்) இராஜ ராஜனான ஆதித்தன் என்ற சூரிய வம்சகுலசேகரனைப் பெற்றான். பாராந்தகதேவன் தேவலோகத்தை யாட்சி செய்யுங்கால் ஆதித்தன் பூலோகத்தை ஆண்டுவந்தான். இந்த மநுவம்ச தீபமான ஆதித்தன் போரிலே வீரபாண்டியனோடு தன் வலிமை யறிந்த ஒரு மத்தகஜத்தோடு இளஞ்சிங்கம் ஒன்று விளையாடுவது போல விளையாடினான்"

என்று கூறப்பட்டிருக்கின்றது. சாஸனங்களினின்றும் இந்த ஆதித்தனைப் பற்றித் தெரியவரும் செய்திகளைக் கூறுவோம்.

கி. பி. பத்தாம் நூற்றாண்டின் மத்தியில் சோழ சிங்காதனத்தில் அமர்ந்திருந்த சைவப் பெரியாரான கண்டராதித்தர் இறந்த காலத்தில் அவருடைய மகன் உத்தம சோழன் சிறுவனாக இருந்தபடியால் கண்டராதித்தருடைய தம்பியான அரிஞ்செயன் என்பவன் அரசுக் கட்டில் ஏறினான். அவன் முன்னோர்கள் அடிப்படுத்திய தொண்டைமண்டலத்தை மறுபடியும் பிடித்துக் கொள்ள வடக்கு நோக்கித் தண்டு எடுத்துச் சென்றான். தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியிருந்த இராஷ்டிர கூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் என்னும் கன்னர தேவனும் எதிர்த்துப் போர் செய்தான். ஆயினும் அவன் தொண்டை மண்டலத்தே ஆற்றூர் என்னும் இடத்தில் இறந்து விட்டான். இதனால் அவனுக்கு ஆற்றூர்த் துஞ்சின தேவர் என்று பெயர். இங்ஙனம் அரிஞ்செயன் நாட்டை அதிக காலம் ஆளவில்லை. அவனுடைய ஆட்சி சுமார் ஒரு வருஷம் என்றே கூறலாம். அவனுக்கு வைதும்ப அரசன் மகள் கல்யாணி என்ற தேவியும், கொடும்பாளூர் வமிசத்துத் தென்னவன் இளங்கோவேளான் என்பவரது மகள் பூதி ஆதிச்ச பிடாரி என்ற தேவியும் உண்டு.

அரிஞ்செயன் இறந்தவுடன் அவனுக்குக் கல்யாணியிடம் பிறந்த மகன் சுந்தர சோழன் என்பான் இராஜகேசரி என்னும் விருதையும், பராந்தகன் என்னும் பட்டத்தையும் கொண்டு முடி சூட்டிக் கொண்டான். இச் சுந்தர சோழன் மூத்த மகனான கரிகாலன் எனப்படும் ஆதித்தனே திருமுறை கண்டவன். சுந்தர சோழன் தன் ஆட்சியின் முதலிலேயே தனக்கு இராஜ காரியங்களில் உதவியாக இருக்கும்படியாக ஆதித்தனை வைத்துக் கொண்டான். அது மு



குவெட்டாவில் புனருத்தாரண வேலைத் திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களில் 10,000 பேர் சமீபத்தில் ஒரு வாரத்திற்கு வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தக்காரர்களின் கூட்டமொன்றில் அவர்கள் தலைவர் மிஸ்டர் ஜே. பி. மில்லர் பேசிக்கொண்டிருக்கையில் எடுத்த படம்.

ஆதித்தன் அநேகமாகத் தன் காலம் முழுமையும் தந்தையுடன் சேர்ந்தே அரசு செலுத்தினன்.

இங்ஙனம் தந்தையும் மகனும் சோழ ஸாம்ராஜ்யத்தின் ஆட்சியை ஏற்றுக்கொண்ட காலத்தில், பாண்டி மண்டலத்தை ஆண்டு வந்த வீரபாண்டியன் என்பவன் சோழர்களைச் சிறிதும் மதிக்காமல் ஆதிக்கம் செலுத்தி வந்தான். அதனுல் சோழர்கள் பாண்டி மண்டலத்தின் மேல் படையெடுத்துச்சென்று சேவூர் என்னும் இடத்தில் பெரும்போர் நிகழ்த்தி வீரபாண்டியனை வெற்றிகொண்டார்கள். இதனுல் சுந்தர சோழன் மதிரைகொண்டவன் என்னும் பாண்டியனைச் சுரம் இறக்கினபெருமாள் என்னும் வழங்கப்பெறும் விருதுகளைப் பெற்ருன். ஆதித்தனும், 'வீரபாண்டியன் தலை கொண்டவன்' என்றும், வீரபாண்டியனை அறிந்து 'தலைகொண்டவன்' என்றும் கூறப்படுகிருன்.

தலைகொண்டவன் என்னும் தொடரால், சோழர்கள் பாண்டியனைக் கொன்ருர்கள் என்று கொள்ளுவதற்கில்லை. அந்தத்தொடருக்குச் சிறப்பான பொருள் ஒன்று உண்டு. தோல்வியுற்றவன் வெற்றி கொண்டவன் அடிகளில் வீழ்ந்துவணங்குவதே 'தலைகொள்ளுதல்' என்று சாஸனங்களில் குறிக்கப்பெறும். பிற்காலத்திலே, பிஜபுர (விஜாபூர்) சுல்தானன அடில்ஷா நேரில் வந்து தன்னை வணங்கித் தன் காலை முத்தமிடவேண்டும் என்று விஜயநகர மன்னனன கிருஷ்ணதேவன் ஆஞ்ஞாபித்ததும்,சோழ அரசன் ஒருவன் பட்டத்து யானைமேல் ஏறும் பொழுது தன் சாமந்தர்கள் முடிமேல் அடி வைத்து ஏறினன் என்று குருபரம்பரையில் கூறப்பட்டிருப்பதும், 'பாண்டியன் முடிதலை கொண்டருளியவனுகக்கூறப்படும் மூன்ரும் குலோத்துங்கசோழன் மெய்க்கீர்த்தியிலேயே' அவன் முடிமேல் அடிவைத்து என்று கூறப்பட்டிருப்பதும் இதனை வலியுறுத்துகின்றன. இதனுல் தலைகொண்டான் என்று கூறப்படுவதைத் தலைதூக்கமுடியாதபடி தோற்கடித்தான என்னும் பொருளிலேயே கொள்ள வேண்டும்.

பாண்டியனுடன் நிகழ்ந்த போரில் சோழர்களுக்கு உதவியாகக் கொடும்பாளூர் இருக்குவேளான பூதிவிக்கிரமகேசரி என்பவனும் பாண்டியனுக்கு உதவியாக இலங்கையரசனன நான்காம் மஹிந்தனும் போர் புரிந்தார்கள்.கொடும்பாளூரையாண்டுவந்த வேளர்கள் சோழர்களுடன் மணவினை புரிந்து சம அந்தஸ்தில்வாழ்ந்தார்கள். பல சமயங்களில் அவர்கள் சோழர்களிடம் படைத்தலைவர்களாகவும் அமர்ந்து பல வெற்றி கொண்டிருக்கிருர்கள். பூதிவிக்கிரமகேசரியின் மகனன பராந்தகன் சிறிய வேளாளர் என்பவன் சோழர்களை மதியாது பாண்டியர்களுக்கு உதவியாக வந்த சிங்களர்களை அடக்கவேண்டி ஆதித்த சோழன் இலங்கை மேல் தண்டு எடுத்துச் சென்ற சமயத்தில் போர்புரிந்து உயிர் துறந்திருக்கிருன். இப்படையெடுப்பின் முடிவில் ஆதித்தன் 'கடல் அடையாது இலங்கை கொண்ட சோழன்' என்னும் விருதைப் பெற்ருன்.

வடக்கே தொண்டைமண்டலம் கன்னர தேவன் ஆட்சியிலே தான் இருந்தது. ஆதலின் அங்கேயும் தண்டு எடுத்துச் சென்று அவனை முறியடித்து அந்நாட்டை மீண்டும் தங்கள் வசம் ஆக்கிக்கொண்டார்கள். வேற்றரசர் கையிலிருந்த நாட்டைச் சரியாக அமைத்துப் பழைய நிலைக்குக் கொணர்வதற்கு ஆதித்தனே தகுதியானவன் என்பதையறிந்த சுந்தர சோழன் அவனைப் பார்த்திவேந்திரவர்மன் என்ற பெயருடன் தொண்டைநாட்டுக்கதிபதியாக அமர்த்தினுன்.

இவ்விதம் சுந்தர சோழனும் ஆதித்தனும் பேரும் புகழும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். சுந்தரனும் தன் ஆட்சியின் இறுதியில் ஆதித்தனுக்குப் பரகேசரி என்னும் விருதுடன் முடி சூட்டினுன். மூத்த பரம்பரையைச் சார்ந்த உத்தம சோழனும் தான் முடிசூட்டப் பெறும் காலத்தை எதிர்பார்த்து மனப்பால் குடித்துக் கொண்டிருந்தான். தான் அறவே ஒதுக்கப்பட்டு ராஜ்யம் தாயாதிகள் வழியில் போய்விட்டது என்பதை நிச்சயமாக அறிந்தவுடன், முடியைத் தான் அடைவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தான். தனக்கு உதவியாகச் சிலரைச் சேர்த்துக்கொண்டு உள்நாட்டில் கலகம் விளைவித்தான். அத்துடன் கொள்ளிடத்தின் வடகரையில் இப்பொழுது உடையார் குடி என்று வழங்கப் பெறும் வீரநாராயண சதுர்வேதிமங்கலம் என்னும் கிராமத்திலிருந்து சிலரைக் கொண்டு ஆதித்தனைக் கொன்றுவிடவும் ஏற்பாடு செய்தான். இங்ஙனமாகத் திருமுறை வகுப்புக் கண்ட ஆதித்தன் தன் தாயாதியால் கொலையுண்டிறந்தான்.

இது நடந்தது சுந்தர சோழன் ஆட்சியிலேயா அல்லது அவனுக்குப் பிற்காலத்திலா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. இது சுந்தரன் காலத்திலேயே நடந்திருந்தால் அதற்குப் பிறகு அவன் அதிக நாள் உயிர் தரித்திருக்கவில்லை. சுந்தர சோழன் 'பொன் மாளிகைத் துஞ்சின தேவர்' என்று வழங்கப்பெறுவதால் அவன் காஞ்சிபுரத்தில் உள்ள சோழ அரண்மனையில் இறந்து போனன் என்பது தெரியவரும். அவன் பட்டத்து மகிஷியான வானவன் மாதேவி உடன் கட்டை யேறினுள்.

ஆதித்தனுக்குத் தம்பியும் இராஜராஜன் என்று பின்னுல் பெரும் புகழ்பெற்றவனுமான அருண் மொழிதேவன் நாட்டின் நிலைமையில் உள்ள சிக்கலை அறிந்து ஒருவிதமாகச் சமாதானத்துக்கு ஏற்பாடு செய்தான். உத்தம சோழன் சிங்காதனத்துக்கு உரியவனுக ஏற்றுக் கொள்ளப் படவேண்டும் என்றும், ஆயினும் அவன் காலத்துக்குப் பிறகு இராஜ்யம் அவன் வழித் தோன்றியவர்களுக்கும் போகாமல் திரும்பவும் இராஜராஜனுக்கு வந்து விடவேண்டும் என்றும் அதற்கேற்ப உத்தமசோழனுக்கு முடி சூட்டப் பெறும் பொழுது இராஜராஜன் இளவரசனுக முடி சூட்டப் பெற வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இங்ஙனம் பரகேசரி மதுராந்தகனுக உத்தம சோழன் கி. பி. 969-ம் ஆண்டில் (கலி 4071-ம் வருஷம்) சோழ அரசனுக முடி சூட்டப் பெற்ருன். அவனுக்குப் பின்னுல் இராஜராஜனே சோழ சிங்காதனம் ஏறினுன். உத்தமசோழன் மகனன கண்டராதித்தன் என்பவன் இராஜ ராஜன் நாட்டை ஆண்டு வந்தகாலத்தில் கோயில்களைப் பரிபாலிக்கும் அதிகாரியாக விளங்கி வநதான்.

ஆதித்தன் இளவரசனுகவும் அரசனுகவும் ஆண்டுவந்தகாலத்தில் குடிகள் பல நன்மைகள் அடைந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். பல நல்லமைச்சர்கள் இருந்தார்கள்.

மன்னன் சிவனை வழிபடுவதையேநோக்கமாகக்கொண்ட பெரியோர்கள் வந்த பரம்பரையில் பிறந்தவன். பிற்காலத்தில் சோழ நாட்டில் பல கோயில்களுக்கு நிவந்தங்கள் விடுத்துப் பெரும் புகழ் பெற்ற குந்தவை பிராட்டியாரும் இவனுடைய சகோதரியே. மன்னனும் பல கோயில்களுக்கு நிவந்தங்கள் விட்டிருக்கிருன். அக்காலத்தில் ஸாம்ராஜ்யத்துக்கு தஞ்சையே தலைநகராக இருந்தாலும், அரசர்கள் பெரும்பாலும் கும்பகோணத்துக்குப் பக்கத்தில் பழையாறை என்னுமிடத்தில் உள்ள அரண்மனையில் தான் வசித்து வந்தார்கள்.

இவ்வரசன் திருமுறை வகுத்தபிறகுதான் சிவாலயந் தோறும் தேவாரத் தினமுறை எழுதிவைத்துப் பூசைசெய்யப் பட்டுவந்தது. இஃது

“ஆளுடைய பிள்ளையார் திருமாளிகைத் தமிழ் வாகர்கண்டு இக்கோயிற் திருக்கைக் கோட்டியில் எழுந்தருளியிருக்கிற திருமுறைகள் திருக்காப்பு நீக்கி அழிவுள்ளன எழுந்தருளிவித்தும் திருமுறைகள் எழுந்தருளிவித்தும் திருமுறை பூசித்து மிருக்கைக்கு.....காசு கொள்ளா. இறையிலியாக இட்டநிலம்”

என்றுசீகாழியிலே ஞானசம்பந்தப் பெருமானுலயம் கர்ப்பக்ருஹத்தின்மேல்புறம் காணப்படும் கல்வெட்டுப் போன்றவைகளால் தெரியவருகின்றது.


இனாம்

378 டிசைன் 64 பக்க நகை கேட்லாக்.
பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P. O. (சென்னை)

உங்கள் கூந்தலுக்கு கருமையும் மினுமினுப்பும்
அளிக்கும் கூந்தல் தைலம்
இதோ இருக்கிறது.

உங்கள் கூந்தல் அழகுடனிருக்கவேண்டாமா? அப்படியாயின் ப்ரிங்கால் உபயோகிக்கத் தொடங்குங்கள். கூந்தலுக்கும், தலைக்கும் விசேஷ நன்மையூட்டுவதில் பிரக்யாதி பெற்று விளங்கும் ஆயுர்வேத




முறை தயாரிப்பான கூந்தல் தைலம் இதுவே. பிரிங்காராஜ் முதலிய மூலிகைகள் வேர்களின் சாரத்தைக் கொண்டு சாஸ்திரோக்தமாகத் தயாரிக்கப்படுவது.

கூந்தலுக்கும் தலைக்கும் நன்மையூட்டுவதில் இம்மூலிகைகள் சிறந்தவை. பால்யநரை, செம்பட்டை முதலியன ஏற்படக்கூடிய மருந்து நுணுசுகளின் கலப்பே கிடையாது. பிரிங்கால் மேலான கூந்தல் தைலம் மட்டுமன்றி சிரசுக்குக் குளிர்ச்சியூட்டுவதில் நிகரற்றது; உச்சந்தலையிலும், உள்ளங்கை, உள்ளங்கால்களிலும் தேய்த்து ஸ்நானம் செய்தால் தேக உஷ்ணம் பூராவும் அகன்று உடல் குளிர்ந்திருக்கும்.

தைலம் நன்ருக இருக்கிறதா என்பதைப் பரீட்சிக்கவேண்டுமானுல் கீழ்க்கண்டவர்களுக்கெழுதி சாம்பிள் புட்டி பெறலாம்

கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமிடெட்.
10, தம்பு செட்டி தெரு, மதராஸ்.



# நவ நாகரீகம்

## சரிகைக் கரைப் புடவை

(காசினி எழுதியது.)

* * * நேற்று ஆனரபிள் சிவன் மகள் ஒரு புடவை கட்டிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். மிகவும்நேர்த்தியாக இருந்தது. புடவையின் வர்ணம் ஒரு தினுசு பிஸ்கோத்து நிறமாக இருந்தது. ஆழ்ந்த பிஸ்கோத்து வர்ணம் என்றால் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். கரை நாலைந்து விரல் அகலமான 'ஐஸ்-கிரீம்' கரை. மேலும் கீழும் விரல் அகலத்திற்கு ஆழ்ந்த அரக்கு நிறப் பட்டும், நடுவில் சுமார் மூன்று விரல் அகலத்திற்குச் சரிகையுமாக, 'ஐஸ்-கிரீம்'கரை போடப்பட்டிருந்தது. தலைப்பு ஒரு பக்கம், முக்கால் முழம் நீளமுள்ள அரக்குத் தலைப்பு; இதில் நாலு விரல் அகலத்திற்கு முந்தாணியின் ஓரமாக சற்றே இடைவிட்டு, இரண்டு சரிகைப் பட்டிகள் போட்டிருந்தது. மற்றொரு பக்கம் பூனத் தலைப்பு. புடவை நாசூக்காகவும், பார்வைக்கு 'ஜில்' என்றும் இருந்தது. விலையும் அப்படித்தான் இருந்தது. ஆறு கஜம் புடவையின் விலை ஐம்பது ரூபாய்களுக்குமேல் ஆச்சுது என்று சொன்னாள். ஆனால், அந்தப் புடவையின் அழகு, இன்னும் என் கண் முன்னால் நிற்கிறது.



சட்டையில் ஒரு நவீனம்:—சுருக்கங்களும், கொஸ்துக்களும் வைத்த சட்டைகள் மறுபடியும் நாசூக்காக ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு புதிய தனி தினுசான சட்டை. முதுகில் இரண்டு பின்னின துண்டுகள் கொடுத்துத் தைத்திருக்கிறது. கைக்குச் சுருக்கங்கள் வைத்துத் தைக்கப்பட்ட இந்த சட்டை புடவையின் அழகிய பூவேலையுடன் ஒத்து மிகவும் நாசூக்காகக் காண்கிறது.

---

## பரீக்ஷை

ஆமாம்! பரீக்ஷைகள் எல்லாம் அநேகமாக முடிந்துவிட்டன; இல்லை! பலன் அநேகமாகத் தெரிந்துவிட்டது என்று கூறுவதே சரி என்று எண்ணுகிறேன். 'இந்தக் கதையைக் கேளேன்'. எங்க அண்ணாவுடைய பெரிய பிள்ளை பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டான். சின்னவன் 'இண்டர்மீடியேட்டில்' 'கோட்' அடித்துவிட்டான். இரண்டுபாகம் பாஸாம். இவன் படிப்புக்குச் சென்னைக்குச் சென்றதே அவன் தோல்விக்குக் காரணம் என்று எங்க மன்னியும், அண்ணாவும் சொல்லுகிறார்கள். 'ஏதோ நம்ம கிட்ட இருக்கிறவரையில் படிப்படியாய்த் தேறவில்லையோ? பட்டணம் போனாலும் போனான் பிள்ளை! கிரிக்கெட் மாச்சும், சினிமாவும் இதுதான் எப்பொழுதும் பேச்சு! அப்புறம் பரீக்ஷை எப்படி பாஸாகும்! என்கிறார்கள். நான் மட்டும்தான் மாச் பார்க்கவும், டாகீக்கும் போனேனே? என் சிநேகிதர்கள் எல்லாரும்தானே போனார்கள். அந்தப் பேபர் எழுதும்பொழுது எனக்கு 'கன்பூய்ஸ் டாகப்'—குழப்பமாக — ஃபாச்சு,' என்கிறான் பிள்ளை. இதில் இன்னும் ஒரு வேடிக்கை பார். தோற்றவன் ஃதமேன்னு 'ஸெப்டம்பர்' பரீக்ஷைக்கு வாசிக்கப் போகிறான். ஜெயித்தவன் மேலே என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறான். இந்த அழகில் பிள்ளை சும்மாத்தானே வீட்டில் உட்கார்ந்துகொண்டிருக்கிறான் என்று மன்னி அவனைக் கடைக்கு அனுப்பிவிட்டாள். பலனைப் பார்.

'கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ரோமாபுரியல் ஏழைகள் எவ்வித ஜீவனம் செய்தார்கள்' என்று கேட்டால் பளிச் சென்று பதில் சொல்லுவான்! நம்ம ஊரில், தற்சமயம் குடித்தனம் எப்படி நடக்கிறது என்பதைப் பற்றி இப்படி சுத்த சூனியமாகவா இருக்க வேண் வேண்டும்? அடியேய்! உன்

---




**எப்பொழுதும் அழகுடனிருக்கிறேன்.**

இந்த டாகெட் & ராம்ஸ்டேல் அழகுச் சரக்குகளை உபயோகிப்பதால்

இப்புதிய, அழகு டாகெட் & ராம்ஸ்டெல் சரக்குகள் டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் பிரசித்தி பெற்ற க்ரீம்களின் உயர் ரகத்துடன் கூடியவை. மேலான முகப்பவுடர் மிருதுத் தன்மையில் இணையற்றது.........பல மணிகளுக்கு இது விடாமல் பிடித்துக்கொள்கிறது; இதை உபயோகிப்பவர்களுக்கு பேரழகு ஊட்டுகிறது. உங்கள் சருமத்தின் இயற்கை அழகைப் பெருக்குகிறது. சிறந்த லிப்ஸ்டிக் உங்கள் உதடுகளின் நிறத்தை அதிகரிக்கிறது; அவைகளுக்கு மிருதுத்தன்மையும் தருகிறது. சிறந்த கண்ஷாடோ & சிறந்த ஐப்ரோ பென்சிலும் உங்கள் கண்களின் அழகைப் பெருக்கும். இந்த டாகெட் & ராம்ஸ்டெல் சரக்குகளால் நீங்கள் புதிய தேஜஸைப் பெறுவீர்கள்.




Daggett & Ramsdell



பெங்களூர் செயின்ட் பிரான்ஸிஸ் ஜேவியர் ஸ்கூலில் உத்தியோகத்திலுள்ள ஸ்ரீமான் டி. ஆர். ராஜாராமராவ் குமாரி பத்மாவதிக்கும் டாக்டர் எம். தேவராஜராவ் குமாரன் ஸ்வாமிநாத ராவுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



வசாகப்பட்டணம் ஜில்லா ஹெல்த் ஆபீஸர் டாக்டர் வி. எ. வெங்கோபாராவ் குமாரி சரோஜாவுக்கும் டாக்டர் எம். தேவராஜ ராவ் குமாரன் சிவராவுக்கும் விவாகம் நடந்தது.



வேலூர் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் டி. வி சுப்ரமணிய அய்யர் குமாரி ராஜம்மாளுக்கும் ஸ்ரீமான் வாளாடி சுப்ரமணிய அய்யர் குமாரன் வைத்யநாதனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

பிள்ளையின் சமர்த்தைப்பார்! வீசை மூன்று அணா என்று கத்தரிக்காய் வாங்கி வந்திருக்கான்! நம்ம ஊரில் என்றைக்காவது ஒன்னரை அணாவுக்கு மேல் விற்றதுண்டா? இவன் முகத்தைப் பார்த்ததுமே கூடைக்காரி விலையை ஏற்றி விட்டாள்! என்ன படிப்புப் படித்தார்களோ, உதவாக்கரைப் படிப்பு' என்று எங்க அண்ணா இரைந்தார்.

'சீனு பாட்டில் இப்பொவே பிடித்துப் பரீக்ஷைக்குப் படிக்கிறேன் என்று சாக்குச் சொல்லிவிட்டு, துப்பறியும் நாவல் படிக்கிறான். வீட்டில் வேலை இல்லாமல்தானே உட்கார்ந்துகொண்டிருக்கிறாய். கடைக்குப் போ என்கிறாள் அம்மா! அப்பா விலை தெரியவில்லை என்று கோபிக்கிறார். பட்டணத்தில் விலை இப்படித்தான் இருக்கும். பாஸ் பண்ணுவதைவிட 'பெயில்' ஆவதே மேல் என்று தோன்கிறது'' என்று அவன் என்னிடம் வந்து முணுமுணுத்தான். உங்கள் சமாசாரம் என்ன? என்று நீ கேட்டிருக்கிறாய்.

அநேகமாக இதுவேதான். லேடி சின்னையா வீட்டில் நேற்று இது விஷயமாகத்தான் பேசிக்கொண்டிருந்தோம்.

'இண்டர் பாஸ் பண்ணின என் மாமா பிள்ளை எந்தக் காலேஜில் யார் சிபார்சில் இடம் கிடைக்கும் என்று அலைகிறான். அவருடைய மூத்த இரண்டு பிள்ளைகளும் பி. ஏ., எம். ஏ., பாஸ் பண்ணி விட்டுச் சிவனே என்று வீட்டில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். இவனையாவது வேறு எதிலாவது இழுத்துவிட்டால் தேவலை' என்றாள் லேடி சின்னையா

'என்ன அம்மா செய்யலாம்? தற்காலத்திய படிப்பும் வேலை இல்லாத் திண்டாட்டமும், சுற்றுப்பட்ட நிலையும் ரொம்ப முரண்பாடாகவே இருக்கிறது. பிள்ளைக்குக் கத்தரிக்காய் வாங்கத் தெரியவில்லை என்று தன் சிநேகிதி எழுதி இருப்பதாக இதோ மாமி சொல்லுகிறாள். இது பிரமாதமில்லை. இரண்டு நாள் ஏமாந்தால், தானே தெரிந்துகொள்ளுகிறான். ஆனால் அவனுடைய பட்டம் கத்தரிக்காய் வாங்குவதற்கு வேண்டிய பொருள் சம்பாதிக்கும் தகுதியைக்கூட அவனுக்கு அளிக்கவில்லையே என்பதை நினைக்கும் பொழுதுதான் துக்கமாக இருக்கிறது' என்றான் ஸர் சின்னையாவின் மகன்.

'கத்தரித் தோட்டம் போடக் கற்றுக் கொடுத்திருக்கலாமே என்கிறாயா? சுற்றுப்பட்ட நிலைக்கும், படிப்புக்கும், என்ன சம்பந்தம்?' என்றாள் அவன் தங்கை

'உன் குழந்தைகள் இன்னும் பள்ளிக்குப் போகும் வயதைக்கூட அடையவில்லை. அப்புறம் தெரியும் சுற்றுப்பட்ட நிலையின் வலிமை உனக்கு. நவீன நாகரீகத்தில், பந்தயங்கள், மாச்சுகள், நாடகங்கள், டாகிகள் எல்லாம் மனதைப் பல நிலையில் திரியச் செய்கின்றன. இதில் பலருக்கு ஒரே மனதாகப் படிக்க முடியவில்லை. ஆகையால் பரீக்ஷையில் பெயில், வீட்டில் திட்டு, பாஸ் பண்ணி விட்டாலோ, வேலையில்லாத் திண்டாட்டம். ஒரு அளவுக்குப் பொது அறிவைப் புகட்டிப் பின் சரியான முறையில் கத்தரித் தோட்டம் போடக் கற்றுக் கொடுத்தாலும் தேவலை என்றே தோன்றுகிறது. தூர் அதிருஷ்ட தேசம்; தேசத்திற்கு ஏர்வையில்லாத படிப்பு'' என்றாள் லேடி சின்னையா.

'எல்லாம் இரண்டுங் கெட்டான் வாழ்வாக இருக்கிறது. ஒரு அளவுக்குப் பொது அறிவு என்றால் அதற்கு எல்லை கட்டுவது எப்படி? அதுவும்தான் படிப்படியாக வைத்திருக்கிறார்களே? நீங்கள் தானே பிள்ளைகள் பட்டதாரிகள், ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். பொதுவில் எல்லாருமே பல்லக்கு ஏற வேண்டும் என்கிறீர்கள். சுமப்பது யாரு என்ற கேள்விதான் பதிலில்லாமல் விழிக்கிறது. தற்காலத்திய பரீக்ஷைகளை என்னைக் கேட்டால் சுத்த அநாகரிக முறை. நம் முன்னோர்கள் பரீக்ஷை வைத்தார்களோ? நன்றாக ஞானமுள்ளவன் மேலே ஆராய்ச்சி செய்தான். மற்றவன் வயலைக் கவனித்தான். கலியுகம் போய் கிருதயுகம் வந்ததற்கு முதல் அடையாளம் தற்காலத்திய பரீக்ஷை முறைகள் அடியோடு தொலைவதுதான்' என்றான் ஸர் சின்னையாவின் மகன்.


## சூதகம் நின்றது

''த்ரீ நாட்ஸ் பில்ஸ்'' 3 நாட்களுக்கு மட்டும் உபயோகித்துப்பாருங்கள்; சூதகக் கோளாறுகள் ஒழியும். உத்தரவாதத்துடன் கூடியது விலை ரூ. 5—8.

''சாலோமாட்'' கர்ப்பம் வேண்டாத காலத்தில் உபயோகியுங்கள். 100-க்கு 100 பலன். விலை ரூ. 3—8.

Venereal & Birth Control Clinic,
7, (S.I.M.) Parsi Bazar, Fort,
Bombay.



## உங்கள் அதிர்ஷ்டம்!

உலகிலுள்ள எந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் எவ்வகையான இன்ஷ்யூரன்ஸை எடுத்துக் கொள்ளவும், எந்த வஸ்துவையாவது வாங்கவும், அல்லது விற்கவும், அல்லது வேறு எவ்விதமான காரியத்திற்கும் எமக்கெழுதுக. ஒழிந்த நேரங்களில் வேலை செய்ய புருஷர்களும், ஸ்திரீகளும் தேவை. மாதம் ரூ. 200-ம், அதற்கு மேலும் சம்பாதிக்கலாம். செக் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ ரூ 13 அனுப்பினால் உங்களுக்கு ரூ. 79687 கிடைக்கும். விவரங்களுக்கு 4 அணா ஸ்டாம்பனுப்பி, கீழ்க்கண்டவருக்கெழுதும். உங்கள் குடும்பத்தினர் யாவரினும் பிறந்த தேதியைத் தெரிவியுங்கள்.

Bhogilal Hiral l Shah & Co.,
Post Box No 713, Bombay.
(India)



## ரஞ்சிதமான துணிமணிகள்

எம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. எல்லாம் மனதிற்குகந்த ரகங்கள்; வந்து பாருங்கள்; வேண்டியதை மகிழ்வுடன் தெரிந்தெடுங்கள்.

**என். வி. பாலுசாமி அய்யர் & ஸன்,**

மூலைக் கடை

நைனியப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.





கூந்தல் மட்டுமெல்லாமல், அழகிய சுருண்ட முன் நெற்றி மயிரையும், காதோரங்களிலும், புறங்கழுத்திலுமுள்ள ஸூக்ஷ்மமான கேசராசிகளையும் வளரச் செய்வதால் கேசவர்த்தனி, மனம் கவரும் ஸௌந்தர்யத்தை மாதர் முகத்துக்குத் தருகிறது. கூந்தல் அழகுக்கும் முக அழகுக்கும் ஒருங்கே காரணமாவது

## கேசவர்த்தினி

ஒன்றே.

மாத உபயோகத்துக்கும் போதமான புட்டி விலை அணா 12.
மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்:— தென் இந்திய ரஸாயனசாலை,
மயிலாப்பூர், சென்னை.

சிறுவர் பகுதி

# வேடனின் விடாமுயற்சி

(மணி)

மரங்களடர்ந்த ஒரு காட்டின் நடுவில் முற்றும் துறந்த யோகி ஒருவர் ஒரு மரத்தடியில் பகவானைத் தியானித்த வண்ணம் நிஷ்டையிலிருந்தார். அச் சமயம் திடீரெனப் பறவையொன்று அம்பாலடிக்கப்பட்டு, உயிர் இழந்ததாய், மரத்திலிருந்து அவர் காலடியில் விழுந்தது. அச்சப்தத்தின் அதிர்ச்சியினால் யோகியின் நிஷ்டை கலைந்தது. கண்களைத் திறந்து பார்த்தார்.

அப்பொழுது தன் அம்பாலடிக்கப்பட்ட பறவையைத் தேடிக்கொண்டு வந்த வேடனொருவன், அது உயிரிழந்து யோகியின் காலடியில் கிடைப்பதைப் பார்த்தான். யோகி தன்னைக் கோபத்தோடு நோக்குவதைக் கண்டான். உடனே வேடன் யோகியின் கால்களில் விழுந்து, "ஸ்வாமி! தங்களுடைய நிஷ்டையைக் கலைத்ததற்காக என்னை மன்னிக்க வேண்டும். நான் ஜாதியில் வேடன். இம்மரத்திலிருந்த பறவையைக் கொல்லுவதிலேயே நான் ஊக்கமாயிருந்ததால் வேறொன்றும் என் கண்களுக்குப் புலப்படாமற் போயிற்று. இப்பிரதேசத்தை அசுத்தமாக்கியதற்காகத் தாங்கள் என்மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. என்னை மன்னிக்க வேண்டும்" என்று அவரை வேண்டினான்.



இப்படி அவன் வேண்டியதும் அந்த யோகி அவனை நோக்கி, "நீ என்னை நிஷ்டையிலிருந்து கலைத்ததுமன்றி இப்பிரதேசத்தையும் அசுத்தமாக்கினாய். இவற்றிற்காக நான் உன்னை சபிக்கக்கூடும்" என்றார்.

இதைக் கேட்ட வேடன் நடுங்கி, "ஸ்வாமி, தாங்கள் அப்படிச் செய்யக்கூடாது. அறியாமற் செய்த இவ்வபராதத்திற்காகத் தாங்கள் என்னை எதைச் செய்யென்றாலும் அதை உடனே செய்வேன். என்னுடைய மனைவிக்கும், குழந்தைகளுக்கும் என்னையன்றி நாதன் கிடையாது" என்று மேலுங் கெஞ்சினான்.

இதைக் கேட்டதும் யோகி, "என் கட்டளையொன்றை நீ செய்து முடிப்பாயானால் நான் உன்னை மன்னிக்கக்கூடும். இக்காட்டிற்குள் போ. என் சிறுவனொருவன் எவ்வளவு தரம் நான் கூப்பிட்டும் என்னிடம் வரமாட்டேனென்கிறான். அவனைக் கண்டுபிடித்து அழைத்து வா. அவன் பெயர் கிருஷ்ணன். இப்பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் உன்னிடம் வருவான். அப்பொழுதுதான் நீ உனக்கேற்பட்டிருக்கும் தண்டனையினின்றும் விடுபட்டு மீண்டும் உன் வீடு போய்ச் சேருவாய்" என உத்தரவிட்டார்.

வேடன், "கிருஷ்ணா, கிருஷ்ணா" என மெதுவாய் இருமுறைக் கூறி, "ஸ்வாமி, அவன் எப்படியிருப்பான்! அதைத் தாங்கள் சொல்ல வேண்டும். இக்காட்டில் அவன் இருப்பானேயாகில் நான் இரவும், பகலுமாகத் தேடி அழைத்து வருவே"னென்று வணக்கத்துடன் கேட்டான்.

இதைக் கேட்ட யோகி புன்னகையுடன், "அச்சிறுவன் மிகுந்த அழகும், கம்பீரமும், மேகவர்ணமும். உடையவன். கையில் புல்லாங்குழலொன்றுண்டு" என்றார்.

வேடன் ஆனந்தங் கொண்டவனாகி, "கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று கூவிக்கொண்டே அக்காட்டினுள் சென்றான். அவ்வொலி அவ்வனமுழுவதும் கேட்டது. கிருஷ்ணனைக் காணாமல் தேடி, ஓடியோடிக் கூவினான், அலறினான்; கிருஷ்ணா, கிருஷ்ணா என்று கதறினான். இரவும், பகலும் ஊண் உறக்கமில்லாமல் கிருஷ்ணனை அவன் தேடாத இடமில்லை. ஆயினும் சிறுவனைமட்டும் காணவில்லை. வேடனும் தனது வேலையை விடாது இடைவிடாது நடத்தி வந்தான்.

புல்லாங்குழலின் இனிய கீதம் மாத்திரம் அவன் காதிலேயே குடிகொண்டிருந்தது. சிறுவனைப் பிடித்தபாடில்லை. நாள்மேல் நாள் கடந்தன. மாதங்கள் கடந்தன. ஆயினும் வேடனுடைய ஊக்கங் குறையவில்லை.

யோகியை அணுகினான் ஆனந்தத்துடன் "ஐயனே, நீர் தேடியவன் இதோ இருக்கிறான். நான் விடமாட்டேன்! ஓ யோகியே, அவன் என்னுடையவனாகவும் இருக்கட்டும். நானும் தம்முடன் இவ்விடமே இருக்கிறேன். அச்சிறுவனருகிலேயே இருப்பேன்" என்று மன்றாடினான்.

ஏதோவொன்றை விடாமற் பிடித்துக்கொள்வதுபோல் தவித்துக் கொண்டிருக்கும் வேடனை நோக்கினார். அவன் சமீபத்தில் ஏதோ பிரகாசமான வஸ்து தோன்றி



மெள்ள அவர் கண்களுக்குப் புலப்பட்டு மறைந்து போயிற்று. உடனே யோகியுமெழுந்து வேடன் காலடியில் விழுந்தார். "பெரியவரே! நீயே முற்றும் துறந்த யோகி. நான் ஒரு அற்பத் துரும்பு. எப்பொழுது நீ என் தலைமேலிருக்கும் பறவையை மட்டும் கவனித்துக் கீழேயிருக்கும் என்னைக் கவனிக்கவில்லையோ அப்பொழுதே நீ விடாமுயற்சியும், மன ஊக்கமும் பெற்றவனென்று எனக்குத் தெரிந்துவிட்டது. எவ்வளவோ வருஷங்களாக நிஷ்டையிலுட்கார்ந்து நான் தேடிக் கொண்டிருந்ததை நீ உன் விடாமுயற்சியாலும், மன ஊக்கத்தாலும் கண்டு கொண்டாய். ஆதியந்தமில்லாதவனும், எல்லோரையும் நேசிப்பவனும் யாவராலும் நேசிக்கப்பட்டவனுமான ஸ்ரீ கிருஷ்ணனே அச்சிறுவன் அவனன்றி ஓரணுவுமசையாது" என்று வேடனைப் பாராட்டினார்.

* * * *


## ஜோதிஷ மகுடவர்த்தனர்

இர்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சனன தங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தசைக்கு புக்தி பலன் ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதகக் குறிப்பு முன்பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர், N. சுப்பிரமணியம்,
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை



G. கன்னையா கம்பெனி

இரும்புப்பெட்டி வியாபாரம்.



137, பிராட்வே மதராஸ்








**மதுரம்மிக்க மாங்காய்கள் மலிந்து தோன்றும் காலமிது**

உணவுக்கு உருசியையும் உடலுக்கு உறுதியையும் கொடுக்கவல்ல மாங்காய்களைக் கொண்டு

**ஊறுகாய்கள்**

போடுவதற்கு உகந்த காலம் இதுவன்றோ!

ஊறுகாய்கள் நறுமணங் கமழ்ந்து நாட்பட இருக்க வேண்டுமானுல் **எல். ஜி.** பெருங்காயத்தை நிறைய உபயோகிக்க மறந்துவிடாதீர்கள். எந்தக்காயம் தமிழ் நாட்டில் பழமையானதோ எது தமிழன் ஊைகளால் பட்டணங்காயமென்று சிலாகிக்கப்பட்டு வருவதோ, கணக்கில்லாத தங்க வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று ஒப்பும் உயர்வும் இன்றி விளஙுகின்றதோ அதுவே அந்த **எல். ஜி.** பெருங்காயத்தை ஊறுகாய்களுக்கு உபயோகப்படுத்தி, ஜாடிகளில் நிரப்பிவைத்து, ஆண்டு முழுவதும் உணவுடன் சுவைத்துச் சுவைத்து இன்புறுங்கள்.

**லால்ஜி கோது&கம்பெனி,**
பிரபல பெருங்காய வியாபாரிகள்.
தலைமை ஆபீஸ்:
பம்பாய் — சென்னை.
பிராஞ்சு :
கும்பகோணம்.






போலிகளைக்கண்டு உஷார் !!!

**அமிர்தாஞ்சனம்**

**சகலவலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்**

**அமிர்தாஞ்சனம் லிமிடெட்.**

பம்பாய், மதராஸ், கல்கத்தா,



**தமிழனபர்களுக்கு ஓர் நல்விருந்து!**

புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூலகளைப் படித்து ஆனந்த மடையுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கவிதைகள் (8-பாகங்கள்) | ரூ. | 2—8—0 |
| 2. | வசனங்கள் (6-பாகங்கள்) | ,, | 2—0—0 |
| 3. | கதைக்கொத்து | ,, | 0—8—0 |
| 4. | பகவத்கீதை | ,, | 0—8—0 |
| 5. | கட்டுரைகள் பகுதி 1 தத்துவம் | ,, | 0--10--0 |
| | ,, ,, 2 மாதர் | | 0—8—0 |
| | ,, ,, 3 கலைகள் | ,, | 0—8—0 |
| | ,, ,, 4 சமூகம் | ,, | 0--12- 0 |

**6. Bharathi and his works**
by Mr. C Visvanathan, Brother of Bharathi 0 4 0

**பாரதி பிரசுராலயம்,**
திருவல்லிக்கேணி, சென்னை.



BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாருது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய வில்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள். செந்தூரத்தில் "மான்மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents: M. R. V AIYER & Co. 49, பந்தர் தெரு, மதராஸ்.





**உங்கள்**

**குழந்தைக்கு**

**டோங்கரேயின்**

**பாலாம்ருதமும்**

கொடுங்கள்.

**டோங்கரேயின் பாலாம்ருதம் என்பதென்ன ?**

1. **டோங்கரேயின் பாலாம்ருதம்** குழந்தைகளுக்கான ஓர் சிறந்த டானிக்.

2. நீடித்த தொந்தரவான இருமலையும், சாதாரண ஜுரத்தையும் போக்குகிறது.

3. மெலிந்து கிடக்கும் குழந்தைகளுக்கு வலுவூட்டுகிறது.

4. பல் முளைக்கையில் குழந்தைகளுக்கு உதவிசெய்கிறது.

மதராஸ் ஏஜண்டுகள்:

**ஏ. பி. பரேக்,** 268, சைனு பஜார் ரோட்.



உலகப் பிரசித்தி பெற்ற

**ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்**

**நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத்தூளை**




உபயோகியுங்கள்.

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம் : ஆர். மூகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.



**"குஜராத்சமாச்சார்"** (தினப் பதிப்பு)

**"பிரஜாபந்து"** (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானுல்

**இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.**

ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager. Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

தென்னிந்தியப் பிரமுகர்கள்



நவாப்

# ஸர் நிஜாமத் ஜங் பஹதூர்

(கே. எஸ். ஆர்.)

### நிஜாம் கவர்ன்மெண்டும் இந்தியா கவர்ன்மெண்டும்

கடந்த ஐரோப்பிய மஹா யுத்தத்திற்குப் பின்பு இந்திய சமஸ்தானங்களில் பல அநேகம் உபத்திரவங்களுக்கு இரையாயின. அக்காலத்தில் ஒரு முக்கிய சமஸ்தானத்தை சிறப்புடன் நிர்வகித்த பெருமையும் பின்பு ஹைதராபாத்து நிஜாமிற்கும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டிற்கும் ஏராளமான மனஸ்தாபங்கள் விளைந்தபோது அவ்விருவர்களுக்குள்ளும் பரஸ்பர ஸ்நேகத்தை யுண்டு பண்ணிய பெருமையும் நவாப் ஸர் நிஜாமத் ஜங் பகதூரையே சார்ந்ததாகும். மேற்குறிப்பிக்கப்பட்ட காலத்தில் மத்தியஸ்த புருஷர் ஏதாவது ஒரு சிறுபிசகைச் செய்திருந்தாலும் அது மகத்தான விபத்திற்கு விதையாக வாய்த்திருக்கக்கூடும்! அவசர புத்தி அல்லது திறமையின்மை அக்காலத்தில் நிலவி வந்த அமைதியைப் பிளந்துவிடுவதற்கு ஆஸ்பதமாக விருந்திருக்கக் கூடும்! இத்தகைய கால நிலையில் ஒருவர் தம்முடைய காரியத்தைச் சரிவர திறமையுடனும் தைர்யத்துடனும் சாதுர்யமாகவும் நிறைவேற்றி வைத்து இருதிறத்தாருக்கும் திருப்திகரமாக ஒற்றுமையைக் கொண்டு வந்தார் என்றால் அவர் ராஜதந்திரத் துறையில் எவ்வளவு சிறந்து விளங்க வேண்டும்? இவ்வாறு நெருக்கடியான தருவாயில் தம் சேவையை இயற்றி வைத்த நவாப் ஸர் நிஜாமத் ஜங் பகதூரின் சிறப்பு பல விடமும் பரவியிருப்பதாகும்.

நவாப் ஸர் நிஜாமத் ஹைதராபாத் சமஸ்தானத்திற்காக சுயநலம் பாராட்டாமல் உழைத்து வந்த ஊழியர்களுள் ஒருவராவர். இவரது உழைப்பைப் பற்றின தகவல்கள் பூராவும் இந்தியா கவர்ன்மெண்ட் அல்லது ஹைதராபாத்து சமஸ்தானத்தின் தஸ்தாவேஜுக் கட்டுகளில் நமக்கு அகப்படாததாகும். ஏனெனில் இவர் விளம்பரத்தைச் சிறிதும் வேண்டாமல் தமது மன்னரின் உயர்விற்காக எவ்விதத்திலும் பாடுபட்டு வந்தார். இக்காலத்தில் இவருடன் நெருங்கிப் பழகிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்குத்தான் இவர் எத்துணை சிரமமும் சிரத்தையும் எடுத்துக் கொண்டார் என்பது நன்கு தெரியும். ஒரு விஷயத்தில் இந்த சேவையில் இவர் ஈடுபடாமல் வேறு ஒன்றில் கலந்துகொண்டிருந்தால் இவரது பெருமை மிகவும் விஸ்தரித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆங்கிலேய அராசாங்கத்தாருக்கும் ஹைதராபாத் மன்னருக்கும் பரஸ்பர ஒற்றுமையை விளைவிக்கும் காரியம் இவரிடம் ஒப்புவிக்கப் படவே, இவர் சமஸ்தானத்திற்கு வேறு இதர வழிகளில் நன்மை செய்வது இயலாது போயிற்று. ஸ்திதியை அபிவிருத்தி செய்யாமல்சமஸ்தானம் சிழடைந்துவிடாமல்இவர்பாதுகாக்கவேண்டி நேர்ந்தது. இத்தகையதானதொரு நிலைமையுடன் இவர் போராடி வர நேர்ந்ததினால், இவரும் சமஸ்தானமும் துரதிர்ஷ்டத்தால் பீடிக்கப்பட்டதாக நாம் கருதலாம். தவிரவும் இவ்வாறு ஈடுபட்ட இவரது காரியம் உசிதப்படி பஹுமானிக்கப்படுவதும் அசாத்தியமாகியது. இத்தகைய காலநிலை யாவும் ஒருபுறமிருக்க ஸர் நிஜாமத் ஜங் உயர்ந்த மனோபாவமுடையவருமாவார். ஆத்மிய விசாரணையையே பொழுது போக்காகக் கருதி வந்த நவாப் ஸர் நிஜாமத் ஜங் பகதூர் தம்மைப் பற்றிப் பிறர் கொள்ளும் அபிப்பிராயங்களைச் சிறிதும் கவனியாமலும், தம்மைப் பற்றிப் பிறர் பிதற்றும் தாறுமாறான அவதூறுகளை லக்ஷியம் செய்யாமலிருந்துவரும் ஸ்வபாவம்இப் பெரியாருடையவையாகும். இவருடன் நெருங்கிப் பழகிய பலரும் இவரால் உருப்படுத்தப்பட்டுள்ளனர்.

### இஸ்லாமிய மத ஸ்தாபகர் குடும்பம்

நவாப் ஸர் நிஜாமத் ஜங் பஹதூர் 1871-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 22-ம் தேதியன்று ஹைதராபாத் சமஸ்தானத்தில் வாரங்கல் சுபேதாராக விருந்த நவாப் ரபத்யார் ஜங் பகதூரின் இரண்டாவது புத்திரராகப் பிறந்தார். இவர் இஸ்லாமிய மதஸ்தாபகர்களில் ஒருவரான ஹஸ்ரத்அடி பக்கர் என்பவருடைய சந்ததியில் தோன்றியவர். இவரது தகப்பனர் பின்பு ஹைதராபாத்தில் ரெவெனியூ இனும் கமிஷனராகவும் இருந்தவர். இவரது பிறவிப் பெயர் நிஜாமுத்தின் அஹமத் என்பதாகும். இவரது பெரிய தகப்பனர் நவாப் இமாத்ஜங் (ஸீனியர்) நிஜாம் கவர்ன்மெண்டின் உள்நாட்டு பொக்கிஷ இலாகாக்களின் காரியதரிசியாகவிருந்தார். இவரது வமிசத்தில் காஜி ஹமீதுத்தீன் நாகூரி, ஷேக் நாஜமுதீன் குப்ரா, அப்துல் அஸிஸ்யேமனி, ஷேக் கமால், ஷேக் அமான், ஷாமன் பாஷா, ஹாஜி அப்துல் லதீப் முதலிய பிரமுகர்கள் தோன்றியுள்ளனர். இவர்களுள் ஷாமன் பாஷாவின் சமாதிக்காக ஔரங்கஜீப் சக்கிரவர்த்தி அளித்தமான்யங்களான ஐந்து கிராமங்கள் இன்றும் வழங்கி வருகின்றன. நிஜாமுதீன் அஹமதின் வித்தியாப்பியாஸம் முதலில்கிரஹத்திலேயே நடைபெற்றது. பின்பு 1878-79-ல் நவாப் ஸர் ஸாலர் ஜங்கின் ஆதரவுடன் இவரது பிதாவினால் ஆரம்பிக்கப்பட்ட "மதராஸா இரஸா"வில் இவரது வித்தியாப்யாஸம் பின்தொடரப்பட்டது. 1884-ல் இவர் சென்னை சர்வகலாசாலை மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு ஆஜரானர்; பின்பு 1887-ம் வருஷம் வரையில் தனியாக ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடுவின் பிதாவான பிரபல வித்தியாதிகாரி டாக்டர் அகோரநாத சட்டோபாத்யாயரிடம் இவர் இருந்து படித்தார்.

உடனே விக்டோரியா மஹாராணியாரின் ஜுபிலி விழாவின்போது இவர் உயர்தர வித்யாப்யாஸத்திற்காக இங்கிலாந்து புறப்பட்டார். 1888-ம் வருஷம் அக்டோபர் மாதம் இவர் அங்கு கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த ட்ரினிடி காலேஜில் சேர்ந்து, 1891-ல் "பி. ஏ." "எல். எல். பி. (ஆனர்ஸ்)" பரீக்ஷைகளில் சிறப்புடன் தேறினர். 1895-ல் இவர் "இன்னர் டெம்பிள்" அதிகாரிகளால் பாரிஸ்டராகப் பதிவு செய்துகொள்ளப்பட்டார். இவ்வாறு தமது 21-வது வயதிற்குள் இவர் கேம்பிரிட்ஜ சர்வகலாசாலையில் இரண்டு பட்டங்களை ஸ்விகரித்துக் கொண்டார். தமது 24-வது வயதில் இவர் ஹைதராபாத்திலிருந்து முதன் முதல் பாரிஸ்டராக வரவேற்கப்பட்டார். கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை பழக்கத்தினல் இவருக்கு இலக்கியத்தில் விசேஷ ருசி ஏற்பட்டது; தாமே தமக்கு ஆசார்யராகவும் இவர் விளங்கலானர். இங்கிலாந்திலிருந்த காலத்திலேயே இவர் பாடத்தைப் படிப்பதுடன் இதர அலுவல்களிலும் சிரத்தை காட்டி வந்தார். 1893-ல் தாதாபாய் நௌரோஜி பார்லிமெண்டு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, காங்கிரஸ் பிரதான புருஷர்களுள் ஒருவரான ஸர் வில்லியம் வெடர்பர்ன் தலைமையில் அவருக்கு உபசாரம் நடத்தப்பட்டபோது, அவரது விருப்பத்திற்கிணங்கி, இவர் அக்கூட்டத்தில் ஹைதராபாத் பிரதிநிதியாக வீற்றிருந்தார்.

### நிஜாம் சமஸ்தானத்தில் உத்தியோகங்கள்

இந்தியாவிற்குத் திரும்பியவுடன் இவர் பார்பானி ஜில்லா ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார். பின்பு இவர் முறையே அஸிஸ்டெண்டு உள்நாட்டு இலாகா காரியதரிசி, ஹைதராபாத் ஹைகோர்ட்டு ரிஜிஸ்திரார்

ஸிப் ஸிடி மாஜிஸ்திரேட், சட்ட நிரூபண இலாகா உதவிக் காரியதரிசி பதவிகளை வகித்தார். மேற் குறிப்பிக்கப்பட்ட கடைசிப் பதவியானது சட்ட சாஸ்திரத்தில் இவருக்கிருந்த பாண்டித்தியத்தை உத்தேசித்து ராய் ஹுகும்சந்த் பகதூரின் மரணத்திற்குப் பின்பு இவருக்கு அளிக்கப்பட்டது. இப்பதவியில் சுமார் 5 வருஷ காலமிருந்து இவர் கிரிமினல் சட்டங்கள் முதலிய முக்கிய சட்டங்களை நிறைவேற்றி வைத்தார். 1905-ல் காலஞ்சென்ற நிஜாம் இவருக்கு "கான்பகதூர் நிஜாமத் ஜங்" என்ற பட்டத்தை வழங்கினார்.

1907-ல் இவர் ஹைகோர்ட் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறு சுமார் பத்து வருஷகாலம் இவர் இருந்தார். இடையில் 2 வருஷகாலம் உள்நாட்டிலாகா காரியதரிசியாகவும் இரண்டு வருஷகாலம் சீப் ஜட்ஜியாகவும் இவர் வேலை பார்த்தார். 1918-ம்வருஷாரம்பத்தில் காலஞ்சென்ற நவாப் ஸர் பரிடூன் உல் முல்க் பஹதூரால் இவர் ராஜீய இலாகா காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். 1919-ம் வருஷம் நவம்பர் மாதம் ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஒரு எக்ஸிகியூடிவ் கவுன்ஸில் ஏற்படுத்தப்பட்டபோது இவர் அந்த நிர்வாக சபையில் ராஜீய மெம்பராகவும் உயர்த்தப்பட்டார். இவ்வாறு "ஸத்ருல் மஹாம்" என்ற பெயருடன் இவ் வுத்தியோகத்தை 1929-ம் வருஷ இறுதிவரை இவர் அலங்கரித்தார். நவாப் ஸர் பரிடூன் ஜங் பஹதூர் தமக்குப் பின் நிர்வாகத்தில் இவர்தான் எவ்விதத்திலும் தகுதியானவர் என்று வற்புறுத்தி வந்தார். இவர் நிர்வாக சபையிலும் தமது விஷய ஞானத்தைத் தெளிவாக்கி மிக்க பிரயோஜனகரமாக இருந்துவந்தார். தமது கொள்கைகளை ராஜி செய்துகொண்டு விடுவதில் இவருக்கு ஒருபோதும் நம்பிக்கைகிடையாது. 1926-ல் இவர் தமக்கு சட்டப்படி 55 வயது பூர்த்தியாகவே, உத்தியோகத்திலிருந்து விலகிக்கொள்வதற்கு நிஜாமின் அனுமதியை வேண்டினார். ஆனால் இவரது சேவையின் சிறப்பை நன்குணர்ந்த நிஜாம் மன்னர் சிறிதும் சம்மதியாமல், கடைசியில் 1929-ல் அதற்கு ஒப்பினார். 1919-ல் இவருக்கு "ஓ. பி. ஈ." பட்டமும், 1924-ல் "ஸி. ஐ. இ." பட்டமும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டன. 1929-ல் இவருக்கு 'ஸர்' பட்டமும் வழங்கப்பட்டது.

பெரிய பதவிகளைமட்டும் வகிக்காமல், ஸர் நிஜாமத் ஜங் பொது மக்களுக்கும் பலவிதங்களிலும் பிரயோஜனகரமாக வாழ்ந்து வருகிறார். காலஞ்சென்ற நிஜாமினுல் ஸர்டேவிட் பார் என்பவர் ஹைதராபாத்து ரெஸிடெண்டாக விருந்த போது ஸ்தாபிக்கப்பட்ட "விக்டோரியா ஞாபகார்த்த அனுதாஸ்ரம"த்தின் கௌரவ காரியதரிசியாக இவர் சுமார் 30 வருஷம் இருந்தவர். 1910-ல் இவர் ஹோம் செக்ரடரியாகவிருந்து "சமஸ்தான தர்ம நிதி"யை ஏழைகளையும் அங்கஹீனர்களையும் சம்ரக்ஷிப்பதற்காக ஒரு வசதியை நிறுவுவதில்உபயோகித்தார். 1912-ல் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்குப் பின்பு ரெஸிடெண்டாகவிருந்த ஸர் அலெக்ஸாண்டர் பின்ஹி, தற்போதைய நிஜாமிற்கு சமஸ்தானத்திலிருக்கும் துர்ப் பிரதேசங்களையெல்லாம் அகற்றி, பிளேக் நோய் பரவவிடாமல் தடுக்க, நகரையே புதிதாக நிர்மாணிக்க ஏற்பாடுகள் செய்ய முயற்சிகள் பின் தொடரப்பட வேண்டுமென்று சொல்ல, ஹைதராபாத் நகர அபிவிருத்தி டிரஸ்டு போர்டு ஸ்தாபிக்கப்பட்டது. அது முதற்கொண்டு இவர் இந்த போர்டின் கௌரவ காரியதரிசியாகவிருந்து மிக்க உழைத்து வருகிறார். இவரது உழைப்பின் காரணமாக நகர் பலவிதத்திலும் சீர்ப்படுத்தப்பட்டு, இன்று சோபிக்கின்றது. மிஸ்டர் மார்மடூக் பிக்தால் என்பவர் இவரது சேவையின் சிறப்பை நன்கு விவரித்தார்.

### கிருஷ்ணு, துங்கபத்ரா ஜலதிட்டம்

1915-ல் ஹைதராபாத் சமஸ்தானத்தினரால் இவர் இன்னும் இரு உத்தியோகஸ்தர்களும், சென்னை அரசாங்கத்தாருடன் கிருஷ்ணு துங்கபத்ரா நதிகளின் ஜலத்தைப் பங்கிட்டுக்கொள்ளும் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக அனுப்பப்பட்டனர். இவர் இவ்வேலையில் மிக்க சாதுர்யத்துடன் முனைந்தார். ஆகையினுல், சுமார் 15 வருஷ காலமாகவே நிஜாமின் அபீஷ்டத்திற்கு இணங்காத சென்னை கவர்னமெண்டார் இவரது திட்டங்களுக்கு உடனே இசைந்து விட்டனர். தவிரவும் கவர்னர் பெண்ட்லண்டு பிரபு கவுன்ஸில் மெம்பர்கள் முதலானோர் இவரது திறமையை வெகுவாகக் கொண்டாடியது இவரது பெருமையை மிகவும் பெருக்குகின்றது.

மஹா யுத்தம் ஆரம்பமாகியவுடன் இவர் "இங்கிலாந்திற்கு இந்தியா" என்று ஒரு ஆங்கில பத்யத்தை எழுதினார். இதை ஸர் டேவிட்பார் உடனே லண்டன் "டைம்ஸ்" பத்திரிகைக்கு அனுப்ப, அப்பத்திரிகையும் இதை இந்தியப் படை மார்ஸேல்ஸ் நகரில் இறங்கிய போது, பிரசுரம் செய்தது. இவர் எழுதிய இந்த கவனமானது உடனே எங்கும் பரவிவிட்டது. பல பத்திரிகைகளும் இதை மீண்டும் பிரசுரம்

அரிய சந்தர்ப்பம்! முந்துங்கள்!!



பெண்கள் கோடை காலத்தில் அடுப்படியில் கஷ்டப்பட வேண்டியதில்லை. இன்றே ஒரு **ருக்மணி குக்கர்** அடுக்கை வாங்குங்கள். 1 மணி நேரத்தில் சாதமும் 5 வித பதார்த்தங்களும் செய்யலாம்.




விபர புஸ்தகம் இனம்.

கீழ்கண்ட ஊர்களில் எமது குக்கர் பட்டணம் விலைக்கே கிடைக்கும்.

பித்தளை தகட்டின் விலை ஏறிக்கொண்டு வருவதால் குக்கர்களின் விலையும் ஜூன்மீ முதல் உயர்த்தப்படலாம். ஆகையால் உடனே வாங்கிக் கொள்ளுங்கள். 1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய குக்கர்கள் முறையே 9, 12, 16, 21, 26, 32, 38 ரூபாயாகும்.

[ஏஜண்டில்லாத ஊர்களுக்கு ஏஜண்டு தேவை.]

## ருக்மணி குக்கர் கம்பெனி,

**ராயபுரம் (12) சென்னை.**

**ஏஜண்டுகள்:**

**ரங்கூன்:**—ஸ்ரீ கணேஷ் ஸ்டோர்ஸ், 127, பிரகாண்டட் தெரு,
**கல்கத்தா:**—தி சௌத் இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ். 114-B லான்ஸ் டௌனி ரோடு, காளிகட்டம்,
**ஹைதராபாத்:**—M. B. சுப்பராவ், 942, ஹனுமான் தேக்கடி.
**மாத்துங்கா: (பம்பாய்):**—தி சௌத் இண்டியன் கன்சர்ன்ஸ், லிமிடெட்., மோகன் மான்ஷன், டெலாங் ரோடு, மட்டுங்கா.
**பூனு:**—லார்ட் ரியே இண்டஸ்டிரியல் மியூசியம், ரியே மார்க்கட்.
**மைசூர்:**—சுரபி & கோ., லான்ஸ் டௌனி பில்டிங்ஸ்.
**பெங்களூர் சிட்டி:**—இண்டஸ்டிரியல் & கம்மர்சியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிமிடெட், சிடி மார்க்கட்.
**மதராஸ்:**—ஜெனரல் சுதேசி ஸ்டோர்ஸ், லிமிடெட், ஹைகோர்ட் எதிரில்.
,, தேசபந்து கம்பெனி, 288, சைனுபஜார் ரோடு.
,, பிரசிடென்ஸி ஸ்டோர்ஸ், 578, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி.
,, மதராஸ் சுதேசி எம்போரியம் லிமிடெட், வில்லிங்டன் சினிமா பக்கம், மௌண்ட்ரோட்.
**வேலூர்:**—S. V. ஜாதம் & கோ., ஜெனரல் மர்ச்சண்ட், லாங் பஜார்.
**சேலம்:**—சுதேசி எம்போரியம், போலீஸ் ஸ்டேஷன் எதிர்.
**திருவண்ணுமலை:**—ராவ் சாகிப் M. S. சேஷாசலமய்யர், பால்மடம்.
**ஈரோடு:**—கிருஷ்ணு & கோ., ஜெனரல் மர்ச்சண்ட், கடைவீதி.
**கோயமுத்தூர்:**—பெனுரிஸ் சில்க் ஸ்டோர்ஸ், 115, ராஜவீதி.
**உதகமண்டலம்:**—சுதேசி எம்போரியம், கமர்ஷியல் ரோடு, காஷ் பஜார், ஊட்டி.
**பாலக்காடு:**—கிருஷ்ணு மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்ஸ், காந்தி ரோடு.
**திருச்சூர்:**—வர்க்கூர்ஸ் லிமிடெட், திரௌண்டு.
**திருவனந்தபுரம்:**—இந்தியன் எம்போரியம், மெயின் ரோடு.
**திருநெல்வேலி:**—P. K. சாமி & கோ., தெற்கு ரத வீதி.
**நாகர்கோயில்:**—சென்ட்ரல் ஸ்டோர்ஸ், கடைத்தெரு.
**தூத்துக்குடி:**—S. S. காளியப்ப நாடார், கிரேட் காட்டன் ரோடு.
**மதுரை:**—மதுரை சிடி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், லிமிடெட், 987, நாயகர் புது வீதி.
**காரைக்குடி:**—சாரதா ஸ்டோர்ஸ், கல்லுக்கட்டி.
**புதுக்கோட்டை:**—சம்பர்தம் & கோ., லிமிடெட், கீழவீதி.
**திருச்சி:**—S. முத்துக்குமாரசாமி பிள்ளை, ஜெனரல் மோட்டார் ஸ்டோர்ஸ், மேலப்புலிவார் ரோடு.
**கரூர்:**—S. K. ராஜகோபால் செட்டியார், ஷாப், திண்டுக்கல்ரோடு.
**பொன்மலை:**—M. R. சுவாமி & பிரதர்ஸ். ரைஸ் & ஜெனரல் மர்ச்சண்ட்.
**தஞ்சாவூர்:**—பெனுரிஸ் சில்க் எம்போரியம், கீழ ராஜவீதி.
**நாகப்பட்டணம்:**—நாஷனல் எம்போரியம் லிமிடெட்.
**கும்பகோணம்:**—சுதேசி ஸ்டோர்ஸ் லிமிடெட், 1858, பெரிய கடைவீதி.
**மாயவரம்:**—டீச்சர்ஸ் & பியூபில்ஸ் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் லிமிடெட், மகாதானத் தெரு.
**கடலூர்:**—R. மீனுக்ஷிசுந்தரம் செட்டியார், சோடா பாக்டரி, திருப்பாப்புலியூர்.
**விழுப்புரம்:**—K. சுப்ரமண்ய ஐயர், 7, ஹனுமார் கோவில் கிழக்கு அக்ரகாரம்.

செய்தன. இப்போது அநேகம் பாட புத்தகங்களிலும் இது காணப்படுகிறது ஹைதராபாத் மக்கள் யுத்தக் கடனுக்குப் பணம் கொடுப்பதற்கு இவரது உதவி மிக்க முக்கியமாக விருந்தது. ரெஸிடெண்டு ஸர் ஸ்டுவர்ட்டு பிரேஸர் இவ் விஷயமாக இவர் செய்த உதவியைப் பெரிதும் போற்றினர். இக்காரணம்பற்றி 1919-ம் வருஷம் ஜுலை மாதம் 29ம் தேதியன்றைய லண்டன் "கெஜட்"டில் இவரது ஸஹாயம் பாராட்டப்பட்டது. யுத்த மந்திரியான மஹா கனம் மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் "மன்னர்பிரான்இவரது சேவையைக் குறிப்பிடும்படி உத்திரவிட்டிருக்கிறுர்" என எழுதினர். இந்திய ராணுவத் தலைவரான ஸர் சார்லஸ் மன்ரோவும் இவரது சேவையைப் பஹுமானித்து இவருக்கு ஒரு யுத்த ஞாபகார்த்தப் பதக்கத்தை வழங்கினர். இந்தியா கெஜட்டிலும் இது பிரசுரமாகியது.

## இலக்கியத்தில் சிரத்தை

1918-ல் இவர் எழுதிய சில பாட்டுகள் புத்தக ரூபமாக மார்ஸ்கின் மக்டொனல்டு கம்பனியாரால்இங்கிலாந்தில் பிரசுரிக்கப்பட்டன. அப்போது இலக்கியத்தில் நிபுணர்களான பலரும் இதை விமரிசையுடன் வரவேற்றனர். காலஞ்சென்ற ஐந்தாம் ஜார்ஜ் சக்கிரவர்த்தி இப்புத்தகத்தின் பிரதியொன்றை திருப்தியுடன் அங்கீகரித்தார். இன்றும் இவர் தமது காலத்தை இலக்கிய விஷயங்களிலேயே செலவழித்து வருகிறுர். சில பத்திரிகைகளுக்கும் சமயோசிதமாக இவர் பாட்டுக்கள் எழுதி வருவது வழக்கம். நிஜாம் மன்னர் உருது பாஷையில் எழுதிய சுமார் 100 கஜால்கள் இவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. இக் காரியம் தகுந்த அதிகாரிகளால் சிலாகிக்கப்பட்டதாகும். இவரதுபுத்தகம் வெளிவந்தவுடன் "இதில் காணப்படும் பாட்டுகளைக் காட்டிலும் இன்னும் அதிக அழகுடன் கவி டாகூர் கூட எழுதுவது கடினம் என்று நம்புகிறேன்" என ஒரு விமர்சகரும், மற்று மொருவர் "இந்தக் கவி அந்திய பாஷையில் இயற்றியுள்ளார் என சந்தேகிக்க முடியாது" என்றும் எழுதினர். "டைம்ஸ் இலக்கிய அனுபந்தம்" இப்புத்தகத்தை நன்கு சிலாகித்தது.

லார்டு ஐலிங்டன், ஸர் ஜே. ஆர் டன்லப் ஸ்மித், ஸர் ஜேஸன் வாக்கர் முதலான பல பிரமுகர்களும் இவரது கவிதா சக்தியைக் கொண்டாடினர்.

தவிர இவருக்கு சட்ட நிர்மாணத்திலும் அதிக சிரத்தையுண்டு. கேம்பிரிட்ஜ் வாழ்க்கையை மறவாமல் இவர் "கோதிக்" நிர்மாண முறையில் தமக்கு ஒரு பெரிய மாளிகையைக் கட்டுவித்துக்கொண்டார். இது ஹைதராபாத்தில் ஒரு பெரிய கண்காட்சியாக அமைந்துவிட்டது. இது இப்போது நிஜாம் மன்னரின் இரண்டாவது குமாரிக்குச் சொந்தமாக விருக்கிறது. இதை இவர் சித்திரக்கலையின் அபிவிருத்தியைக் கருதி கட்டினுரே தவிர, ஒரு வீண் ஆடம்பரத்துடன் வாழவேண்டும் என்று அல்ல.

"மதராஸா-இஸா"வின் நிர்வாகக் கமிட்டியின் கௌரவக் காரியதரிசியாக இருந்து, தமக்கு வித்யாப்யாஸத்தை யூட்டின இந்த ஸ்தாபனம் பல விதத்திலும் அபிவிருத்தியடைவதை இவர் நாடிவருகிறுர். ஹைதராபாத்திலிருக்கும் "காவியச் சங்க"த்தின் கிளைக்கு இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு கல்வி விஷயத்திலும் விசேஷ ஆர்வம் உண்டு. இவர் இவ் விஷயமாகச் செய்த பிரசங்கங்கள் இவரது ஊக்கத்தைக் கோஷிக்கின்றன. ஸர் நிஜாமத் ஜங் இலக்கிய நிபுணராக மட்டுமே யிராமல், பெரிய ராஜதந்திரியுமாவார். தற்போது பொது வாழ்வில் மும்முரமாக இவர் கலந்துகொள்ளாவிட்டாலும், பொதுவிஷயங்களை ஊக்கத்துடன் கவனித்து வருகிறுர். 1932-ல் பிரென்ட் போர்ட் பிரபு "இந்தியாவின் நிலைமையைப்பற்றிச் சென்ற வருஷம் நீங்கள் எழுதியவை யாவையும் உண்மையாக நடந்து வருகின்றன" என எழுதினுர். இந்திய சீர்திருத்தத்தைப்பற்றிய வட்டமேஜை மகாநாட்டிற்கும் பார்லிமெண்டரி கூட்டுக்கமிட்டிக்கும் இவர் அழைக்கப்படாதது அநேக மெம்பர்களுக்கு வருத்தத்தை விளைவித்தது. அநேகம் ஆங்கிலப் பிரமுகர்கள் அடிக்கடி இவரது ஆலோசனைகளை வேண்டி வந்துள்ளார்கள்.

இவர் இன்றும் ஹைதராபாத் முன்னேற்றத்தில் அளவற்ற அக்கரையுடன் வாழ்ந்து வருகிறுர். இவர் ஒரு பக்கமும் சேராமல், பல பக்கமும் சிதறிக்கிடக்கும் கட்சிகளை ஒன்று சேர்த்துப் பிணைக்க முயலுவதால் இவர் எங்கும் இனிமையாக வரவேற்கப்படுகிறுர்.

ராஜீய ஞானமானது மக்களுக்குள் பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்ட பின்புதான் போதிக்கப் படவேண்டும் என்பது இவரது துணிபு; ஒவ்வொரு தொகுதியின் அபிவிருத்தியும் உள்ளிருந்து ஆரம்பிக்கவேண்டும் என்பது இவரது திட்டம். ராஜீய வாழ்விலும் பதவி வாழ்விலும் ஒவ்வொருவரும் நிரபேக்ஷகராகவும் தைர்யமாகவும் ஸத்ய ஸந்தராகவும் இருக்கக்கூடும் என்பது இவரது நிச்சயம். சில நெருக்கடியான சந்தர்ப்பங்களில் இவருடைய இக் கொள்கைகள் பரீக்ஷிக்கப்பட்டபோதும் இவர் பின் வாங்கியது கிடையாது. உயர் லக்ஷியங்கள் இல்லாவிட்டால் கல்வி வீண் என்று இவர் சொல்கிறுர். ஜீவனத்திற்கு சம்பாதிக்க கல்வியை நாடுவது வர்த்தக முறையாகும் என்பது இவரது அபிப்பிராயம். ஊஸ்மானியா சர்வகலாசாலை பட்டதாரிகளுக்கு 1930-ல் இவர் செய்த வார்ஷிக பிரசங்கமானது யாவ









ராலும் படித்து இன்புறத்தக்கதாகும். இவைகளிலிருந்து நல் முத்துக்களைப் பொறுக்கி எழுதுவதாயின் இங்கு இடம் கிடைப்பது அசாத்தியமாகும்.

### மதாபிமானி

நவாப் ஸர் நிஜாமத் ஜங் ஒரு சிறந்த மதாபிமானி. நமது அந்தராத்மாவில் நாம் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதும் இவரது தீர்மானம். இதற்கு எல்லா மதங்களும் சித்தாந்தங்களும் மார்க்கங்கள் என்பதும் இவரது நம்பிக்கை; ஆனால் இவைகளுள் இஸ்லாம் இதில் நேரானதும் துரிதமானதுமான மார்க்கம் என இவர் நம்புகிறார். தாம் பதவியிலிருந்து விலகிக்கொண்டவுடன் இவர் மெக்காவிற்கு யாத்ரையாகப் புறப்பட்டார். அப்போது இவர் "குரான்" தர்ம சாஸ்திரத்தில் விதித்த பிரகாரம் தாடி வளர்க்கவாரம்பித்தார். இது அநேகருக்கு விஸ்மயத்தை விளைவித்தது. இளம் பிராயத்திலேயே இவர் சாக்ரேடிஸ் என்கிற கிரேக்க தத்துவசாஸ்திரி எழுதிய புத்தகங்களில் மிக்க ஈடுபட்டவர். அதுமுதற்கொண்டு தமது வாழ்க்கையைப் பிரயோஜனகரமாக உபயோகிப்பதில் இவர் நோக்கம் கொண்டார். இஸ்லாம் அநேகம் உயர்ந்த போதனைகளை எடுத்துக் காட்டியும், மேனாட்டினர்போல் முஸ்லீம்கள் முன் வரவில்லை என்பது இவரது வருத்தமாகும். இவருக்கு ஒரு மதத்தினரிடமும் வைரம் கிடையாது. மதத்தின் சூக்ஷமத்தை உணராமல் கண்மூடித்தனமாக அநுஷ்டானங்களை நடத்துவது பிசகு என இவர் கருதுவார். பலதிறப்பட்ட ஹைதராபாத்தில் தமது காலத்தைக் கழித்து தமது கௌரவத்தை ஒருவிதத்திலும் குறைத்துக் கொள்ளாத இவரதுவாழ்க்கை நமக்கு அவசியம் புத்தி புகட்டுவதாகும்!

ராஜீய இலாகாத் தலைவராகியவுடன் இவர் நிஜாமிடம் தமக்கு ஒருவிதமான நன்மையையும் யாசிப்பதில்லை என்று நேராகச் சொல்லி, தமது வாக்கைக் காப்பாற்றினார். ஹைகோர்ட்டு ஜட்ஜிக்குரிய சம்பளத்துடனேயே இவர் ராஜீய இலாகா தலைவராக வேலைபார்த்தார். பதவியிலிருந்து நீங்கியவுடன் 1000 ரூபாய்களுக்கு மேலாக இவர் பென்ஷன் பெற மறுத்துவிட்டார். ஆனால் பின்பு நிர்வாக சபை மெம்பர்களின் பென்ஷன் 1500 ரூபாய்களுக்குக் குறையக்கூடாது என்று விதிக்கப்பட்டபோது, புதிய விதிக்கு இவர் ஒப்பினார். ஆகையினால் • இருப்பதைக் கொண்டு திருப்தியடைபவர் இவரேயாவார். இஸ்லாமிய மதம் எளிய வாழ்க்கையை

னால் இவரும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார்.

ஒருசமயம் இவர் ஸ்தலயாத்திரைகளைப் பற்றி வினவப்பட்டபோது இவர் தாம் மோக்ஷசாதனத்திற்காகப் புண்யக்ஷேத்திரங்களுக்குப் போகவில்லையென்றும் ஆனால் இஸ்லாம் மதத்தின் மேன்மையையும் சிறப்பையும் அது ஜனித்த இடங்களுக்கு நேராகப் போய்ப்பார்த்து உத்ஸாகம் அடைவதற்காகவும், பாலைவனத்தில் கிளம்பி, உலகெங்கும் வியாபித்த அந்த மதத்தின் பெருமையை மனத்தகத்தில் படம் பிடிப்பதற்காகவும் தாம் செல்வதாகச் சொன்னார். இவருக்கு மெடினாவிலும் மெக்காவிலும் பரிதவிக்கும் ஏழைகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணமே இருக்கிறது. ஜீவனத்திற்கு உபயோகமான சில கைத்தொழில்களை அங்கு கற்றுக் கொடுப்பதற்காக இவர் ஒரு கைத்தறிச் சாலையையும், அனாதாஸ்ரமத்தையும், கைத்தொழில் பள்ளிக்கூடத்தையும் நிறுவ ஏற்பாடுகள் செய்தார். ஏழைகளுக்கு ஒரு விடுதியை ஸ்தாபிக்க இவர் மெடினா அமிமை மிகவும் தூண்டினார்.

### "காலை எண்ணங்கள்"

இவ்வருஷாரம்பத்தில் இவர் "மார்னிங் தாட்ஸ்" (காலை எண்ணங்கள்) என்ற புத்தகத்தைப் பிரசுரம் செய்தார். இப்புத்தகம் இவரால் தமது நண்பர்களுக்குமட்டுமேகொடுக்கப்பட்டது. இது விலைக்கு விற்கப்படவில்லை. இப்புத்தகம் யாவராலும்கொண்டாடப்பட்டது. இதில் இவர் தமது மனதில் உதித்தஉயர்ந்த எண்ணங்களையெல்லாம் சேர்த்துள்ளார். இவரது எண்ணங்கள் பல துறைகளிலும் வியாபித்திருக்கின்றன. இப்புத்தகத்தைப் படிப்பதனால், நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிந்து நாம் சரியான மார்க்கத்தைக் கடைபிடிப்பது சாத்தியமாகிறது. இது நமது ஜீவியத்திற்கு வழிகாட்டியாக விருக்கிறது. அநேகம் சித்தாந்தங்களின் சாராம்சங்கள் இதில் தெளிவாகக் காணப்படுகின்றன. இவ்வாறு மானிட கோஷ்டியின் நலனுக்காகப் பலவிதத்திலும் சிரமப்பட்டு வரும் இப்பெரியார் நவாப் ஸர் நிஜாமத் ஜங் பகதூர் இன்னும் பல வருஷங்கள் திடசரீரியாகவும், சர்வ சம்பத்துகளுடனும் மனவமைதியுடனும் நம்மிடையே வாழ்ந்து நம்மைச் சிறப்பிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்போமாக!


பிரசித்திபெற்ற பழங்களைத் தரும்

**மாங்கன்றுகள்**

தர்பங்கா, முஸபர்பூர் இவ்விடங்களைச் சேர்ந்தவை. மலிவான விலைகளில் கிடைக்கும். காட்லாக்குக் கெழுதுக. BIHAR NURSERY, P.O. Bihar Nursery.(Darbhanga) Bihar.

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார்ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ரூ. 0-14-0தான்

(தபால்செலவு தனி)



டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும். ½ அணா ஸ்டாம்பு அனுப்பி மாதிரி பெறவும்.



உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும், காமினியா ஸ்னோவின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 12 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக ½ அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பில் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co . BOMBAY 2

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,

Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.




(ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)



# மரியாதைராமன் கதை

தான் வாங்கின கெம்புக்கல்லே "அறியேன்" என்ற கதை.



மஹாபாரதம் - அநுசாஸன பர்வம்

# பீஷ்மர் ஸ்வர்க்காரோகணம்

—[ o ]—

யுதிஷ்டிரர், "ஒன்றை நிச்சயிப்பதற்குப் பிரத்தியக்ஷம், சாஸ்திரம் இவ்விரண்டினுள் எது ஸரியான பிரமாணமாகும்?" என்று கேட்க, பீஷ்மர் பதில் சொன்னதாவது:—இந்த விஷயத்தில் ஸந்தேகமுண்டாவது எளிது நிச்சயம் வருவது கடினம். பிரத்யக்ஷம் பிரமாணமாக யாவராலும் காணப்படுகிறது. பண்டிதனுக நினைத்திருப்பவனுக்கு யுக்திவாதம் பிரமாணமாகிறது அவர்கள் ஸத்ய வாக்கியத்தையும் சாஸ்திரத்தையும் இல்லாதவையாக நிச்சயிக்கின்றனர். அவர்கள் நினைப்பது பிழை. அவர் தங்களைப் பண்டிதராக நினைத்திருக்கும் அறிவீனர். உலக வாழ்க்கையை நடத்தும் மனிதன் யுக்திகளாலும் சாஸ்திர விசாரணைகளாலும் நீண்ட காலத்தினுல் நிச்சயிக்க முடியும். ஒரு விஷயத்திலேயே ஊக்கம் வைத்தாலன்றி அந்தப் பிரமாணத்தை நிச்சயிக்க முடியாது. வேறு வாதங்களை நிறுத்தின பிறகுதான் எல்லா உலகங்களுக்கும் ஒளியாயிருக்கும் சிறந்த பேரறிவைத் தடையின்றி அறியலாம். யுக்திகளைக்கொண்டு அறிவது சரியான அறிவன்று. நம்பத்தகாததும் முடிவில்லாததுமான யுக்தி வாதத்தை வாக்கினுல் சொல்லாமல் விட வேண்டும்.

இதைக் கேட்ட யுதிஷ்டிரர் "பிரத்யக்ஷம் உலகத்தில் ஏற்பட்டிருக்கிறது. உலகம் வேதத்தை முன்னிட்டதாக விருக்கிறது. சிஷ்டாசாரங்கள் பல வகைகளாயிருக்கின்றன. இவற்றைப்பற்றி எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொன்னதாவது:—துஷ்டர்கள் வலியர்களாகித் தர்மத்தைக் கெடுக்கும்போது எவ்வகை முயற்சிகளினுல் அதற்கு வியவஸ்தை செய்தாலும் அது காலத்தினுல் உடைபட்டுப் போகிறது. கிணறு புல்லால் மூடப்படுவது போல அதர்மமும் தர்மத்தின் வேஷத்தால் மூடப்பட்டிருக்கிறது. அதனுலேதான் சிலருடைய ஆசாரங்கள் வேறுபடுகின்றன. சில புத்தியீனர் பிழைப்பில்லாமையால் சாஸ்திரத்தை விடுவதையே காரியமாகக்கொண்டு தர்மத்தைப் பகைத்து இகழ்கின்றனர். அவர்களுக்குத்தான் இவ்விதமான சந்தேகம் உண்டாவதாகச் சொல்லப்படுகிறது. ஸத்புருஷர்களை மேன்மேலும் விரும்பக்கொண்டு சாஸ்திரங்களெல்லாவற்றிலும் நம்பிக்கையுள்ளவரும் அதுவே சிறந்ததென்று திருப்தியடைந்திருப்பவரும் எவரோ அவரை அடுத்துக்கேள். அவர்களின் ஆசாரம் மாறுவதில்லை. யாகம், வேதாத்யயனம், ஆசாரம் இம்மூன்றும் பிரமாணங்கள். மூன்றும் ஒரே தர்மம்தான்.

யுதிஷ்டிரர், "இப்பொழுது மேலும் சந்தேகங்கள் தோன்றிவிட்டன. வேதம், பிரத்யக்ஷம், சிஷ்டாசாரம் இம்மூன்றும் பிரமாணங்களாயிருந்தால் இம்மூன்றும் வெவ்வேருக இருக்கின்றனவே? மூன்றும் தர்மமாவதெப்படி?" என்றுகேட்டார். இதற்குப் பீஷ்மர் பதில் சொன்னதாவது:—தர்மம் ஒன்று. அதை அறியும்வகை மூன்று. தர்க்கங்களினுல் தர்மத்தை விசாரிப்பது ஒருபோதும் தகாது. கொல்லாமை, ஸத்யம், பொறுமை, கொடை இந்நான்கும் அழியாத தர்மங்கள். அறிவில்லாதவன் பிரமாணத்தையும் அப்பிரமாணமாகச் செய்வானுயின் அவனை நம்பத்தகாது. அவன் துக்கத்தை உண்டுபண்ணுகிறவன். பிராம்மணர்களையே பூஜித்தும் வெகுமானித்தும் பணியவேண்டும். இவ்வுலகங்களனைத்தும் அவர்களிடத்திலேயே இருக்கின்றன என்று அறி.

இவ்வாறு தர்மங்களை சொல்லிவிட்டு பீஷ்மர் எல்லோருக்கும் விடைகொடுத்தனுப்பி, உத்தராயணம் வந்தபின் வரலாமென்றும் சொன்னுர். தர்மபுத்திரரும் மற்ற எல்லோருடன் அவ்விதமே அங்கிருந்து புறப்பட்டு ஹஸ்தினுபுரம்சென்ருர். ஹஸ்தினுபுரத்தில் யுதிஷ்டிரர் மகத்தான தர்மங்களைச் செய்துகொண்டு ஐம்பது நாட்கள் வசித்து வந்தார். பிறகு உத்தராயணம் வந்து விட்டதால் அனைவரும் பீஷ்மர் இருக்குமிடம் வந்தனர். பீஷ்மரும் யுதிஷ்டிரருக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லி, திருதராஷ்டிரனுக்கும் புத்திமதிகளையும், ஆறுதல் வார்த்தைகளையும் சொல்லி கிருஷ்ணனை நோக்கித் தனக்கு விடைகொடுக்கவேண்டுமென்றும், தான் உயர்ந்த கதியை அடைய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அப்பொழுது கிருஷ்ணன் "உமக்கு நீர் கேட்டபடியே அனுமதி கொடுக்கிறேன். நீர் வஸுக்களை அடையக்கடவீர். உமக்குப் பாவம் ஒன்றுமில்லை" என்று சொன்னுர். பீஷ்மரும் எல்லோரையும் பார்த்து, "நான் உயிரைவிடப் போகிறேன். அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். நீங்கள் சத்தியத்திற்கே முயல வேண்டும். ஸத்யம்தான் சிறந்த பலம். எப்போதும் மனத்தை அடக்கித் தயையை முக்கியமாகக் கொண்டிருக்க வேண்டும். பிராம்மணர்களிடத்தில் அன்பு வைத்துத் தர்மத்தையும் தவத்தையும் விடாமலிருக்க வேண்டும்" என்று சொன்னுர். இவ்வாறு சொல்லிச் சற்று நேரம் பேசாமலிருந்தார். இம்மப்படி தியானத்தில் மனத்தை நிறுத்தினுர். அடக்கப்பட்ட மூச்சு மேல் நோக்கிச் சென்றது. தியானத்திலிருந்து பீஷ்மர் எந்த எந்த அவயவத்தை முறையே விட்டாரோ அந்தந்த அவயவங்களில் அம்புகளில்லாமற்போயின. அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஒரு நொடியில் அவருக்குப் பாணங்களே இல்லாமற் போயின. அனைவரும் இதைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். அவரால் எல்லா இடங்களிலும் அடக்கப்பட்ட பிராணனுனது தலையைப் பிளந்து கொண்டு சென்றது. பெரிய அக்னிஜ்வாலைபோன்ற ஒளி, பீஷ்மர் தலையிலிருந்து புறப்பட்டு ஆகாயத்தில் பிரவேசித்து ஒரு நொடியில் மறைந்தது. பீஷ்மர் இவ்வாறு வஸுலோகம் சென்ருர்.

பிறகு அவருக்கு பித்ருமேதமென்னும் ஸம்ஸ்காரத்தைச் சாஸ்திரப்படி செய்தனர். பிறகு கங்கையில் ஜல தர்ப்பணம் செய்தனர். அப்போது கங்காதேவி தன் பிள்ளை இறந்துபோனதால் துயரந் தாங்காமல் கௌரவர்களைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லித் துக்கித்தாள். பீஷ்மர் அரச ஒழுக்கத்திலும் அறிவிலும் குலத்திலும் சிறந்தவன். கௌரவ வம்சத்துப் பெரியோர்களைப் பூஜிப்பவன். பித்ருபக்தியுள்ளவன். எடுத்த விரதத்தை விடாதவன். பரசுராமர் முற்காலத்தில் சிறந்த அஸ்திரங்களைப் பிரயோகித்தும் வெல்ல முடியாத மகா வீரன். அவன் சிகண்டியினுல் கொல்லப்பட்டான்.

அப்போது கிருஷ்ணன் கங்கையைத் தேற்றி, "நீ துயரப்படாதே. உன் புத்திரர் மேலான உலகத்திற்குப் போனுர். அவர் போர்க்களத்தில் தனஞ்சயனுல் கொல்லப்பட்டார். சிகண்டியினுல் கொல்லப்படவில்லை. உனது புதல்வர் தமது இச்சையினுல் ஸ்வர்க்கம் சென்ருர். ஆகையால் நீ துயரப்படவேண்டாம்" என்று சொன்னுர்.

பிறகு கங்காதேவியும் துயரத்தைவிட்டுத் தன் ஜலத்திற்குள் இறங்கினுள். அனைவரும் திரும்பிச் சென்றனர்.

(அநுசாஸன பர்வம் முற்றிற்று.)

(தொடரும்)


## இது ஓர் ஆச்சரிய ஜோதிடம்!!!

ஆண் பெண் சகல மதஸ்தாளுக்கும் இல்வாழ்க்கை திறவுகோல் இதுவே! தங்கள் எண்ணத்தை எனக்கு தெரிவிக்காமலே ஜனன காலம் தேவை அல்லது எனக்கு கடிதம் எழுதும் நேரம் எழுதவும். திரிகால பலனை தங்களுக்கு அறிவிக்க ரூ. 2-0-0. தங்கள் எண்ணத்தை தெரியத்த 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1-0-0. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன் எழுத ரூ. 5-0-0 இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10-0-0 வி. பி. பிரத்தியேகம்.

பா. முத்துவேல் முதலியார், கலைமகள் ஜோதிடம், தேரடி வீதி, 48 க. திருப்பாபுலியூர் (தென் இந்தியா)






10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co,

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்.

187, சைனு பஜார் ரோட், ஜி. டி. மதறாஸ்

இந்திய தேத்

தண்ணீரால்



## தேக ஆரோக்கியத்தையும்
## களங்கமற்ற மனதையும் காப்பாற்றுங்கள்

நாமெல்லோரும் நமது இஷ்டப்படி ஏதாவது ஒரு மகத்தான சக்தியை ஆராதிக்கின்றோம். ஏனென்றால், அவ்விதம் செய்வது நாம் சத்தியம் தவறாது இருக்கவும், நல்வழி நடத்தவும் உதவுகின்றது.

இவ்விதமே மூளைச் சக்தியாலும், தேக சக்தியாலும் வேலை செய்யவும், அனைவருக்கும் தங்களது ஜீவ சக்தியை போஷிக்க இந்தியத் தேயிலை உதவுகின்றது.

எப்படி ஒரு மஹத்தான சக்தியை ஆராதிக்கும்பொழுது மெய் மறந்து போகிறோமோ அதே மாதிரி இந்திய தேத் தண்ணீரை அருந்தியவுடன் மனக்கவலையும், தேகக் களைப்பும் மறைந்து விடுகின்றன.



### தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்தியதேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

**இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் – இந்திய தேயிலை**

IK. 43.

Regd. No. 2614



## பலவீனர்களே !

### கேளுங்கள்

நீங்கள் என் பலவீனர்களாக வாழ வேண்டும்? பலவீனத்தை ஒழிக்க **மரோடோன்** தோன்றிவிட்டது. இனி கவலை வேண்டாம். இது நரம்புக் கோசங்களுக்கு வலுவூட்டி, இழந்த ஜீவ சக்தியை மீண்டும் உயிர்ப்பிக்கிறது. தேக மெலிவு, இரத்த சோகை, நோய்க்குப் பிறகு ஏற்படும் பலவீனம் இவற்றையகற்றி, சிறந்த முறையில் இரத்த விருத்தியளிப்பதில் **மரோடோன்** முதன்மையானது. க்ளிஸரோ பாஸ்பேட்டுகள் நிறைந்தது.



# MAROTONE

மரோடோன் சாப்பிட்டு சுகஜீவிகளாக வாழுங்கள்.

சிறிய புட்டி ரூ. 1—8; பெரிய புட்டி ரூ. 2—8

## "வெட்டை நோய்க்கு கொபெய்சான்"

என்பது இப்பொழுது வீட்டுச் சொல்லாகிவிட்டது. வைத்திய பிரமுகர்களால் போற்றப்பட்டு, நோயாளிகளால் சிலாகிக்கப்படுவது. நிவர்த்தியில்லை எனத் தைர்யமிழந்தவர்கள் கூட இதை உட்கொண்டு, குணம் பெற்றிருக்கிறார்கள். வெட்டை நோய்க்கும், எத்தகைய மூத்திர வியாதிகளுக்கும் தேர்ந்த நிவாரணி இதுதான்.

# COPAISAN

The most effective remedy for urinary venereal disease

புட்டி 1-க்கு ரூ. 3.

## தொண்டை வலி, கரகரப்பு, ரணம் இவற்றிற்கு



அயர்டன்ஸ் அயோடைஸ்ட் த்ரோட் டாப்லேட்ஸ் உபயோகித்து நிம்மதியடையுங்கள். தொண்டை வியாதிகளில் நிபுணத்வம் வாய்ந்த இங்கிலாந்திலுள்ள பிரபல டாக்டர் ஒருவரின் முறையைக்கொண்டு தயாரிக்கப்படுவது. நிச்சயமாகநிவர்த்தி தரும் சிறந்த சாக்கு.



# AYRTON'S IODISED THROAT TABLETS

50 மாத்திரைகளடங்கிய புட்டி 1-க்கு ரூ. 1.

## மலேரியா

### நோய்க்குப் பிறகு



மலேரியா நோயின் கொடுமை ஒழிந்தாலும் அதன் காரணமான பலவீனம் நீடித்தகாலத்திற்குத் தொந்திரவு கொடுக்கிறது. பலவீனம் நீங்கினால்தான் உடல் சுகம்பெற வழியுண்டு. இக்கடுமையான பலவீனத்தைப்போக்க நித்திய ஆகாரதிகளுக்குச் சக்தி போதாது. எனவே, **மாலர்ஸ் A.B.C.D. விட்டமின் உணவையும்** சேர்த்துக்கொள்ளுங்கள்.



# MOLLER'S

## A.B.C.D. VITAMIN FOOD

உயர்வகை மால்ட்சத்துடன் சேர்த்தியான; நார்வீஜியன் காட்லிவர் ஆயிலில் தயாரிக்கப்படுவது. விட்டமின் C நிரம்பிய ஆரஞ்சுப்பழ ரஸம் மிகுந்தது. குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் சிறந்தது.

புட்டி 1-க்கு ரூ. 2—4.

இவை எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். ஆர்டருடன் 25% தொகை அட்வான்சாக கிடைக்க வேண்டும்.

மொத்த ஏஜண்டுகள் : சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press Mount Road, Madras-*Editor* C. R. Srinivasan, B.A.